அல்லியரசாணிமாலை

1920

உ

விநாயகர் துணை.

வித்வசிரோன்மணியாகிய

புகழேந்திப்புலவர்

திருவாய்மலர்ந்தருளிய

அல்லியரசாணிமாலை.

இவை-மையிலம்.

சுப்பிரமணிசுவாமிகளால்

பார்வையிடப்பட்டு,

மதுரை புக்ஷாப்

இ. மா.

கோபாலகிருஷ்ணக்கோனாரால்


வாணீவிலாச அச்சுக்கூடத்திற்

பதிப்பிக்கப்பட்டது.

சென்னை,

இதன்விலை 1920. அணா 8.

குறைந்த விலை,



உயர்ந்த பெட்டி.

5 வருடத்திற்கு உத்திரவாதமுள்ளது.

இதனால் சகலமானகனதனவான்களுக்கும் தெரிவிப்பது யாதெனில் மது கம்பெனிக்கு கல்கத்தாவிலிருந்து தயார்செய்துநாங்களே தருவிக்கின்றபடியால் எமது கம்பெனியிலுள்ள பெட்டியை நாங்களே பிரக்கியாதியாய் எழுதுவதிற்பயனில்லை இதின் உண்மை ஒருதரம் ஆர்டர் கொடுத்துபார்த்தால் இதின் உண்மை நன்கு விளங்கும்.

இதன்றி எமதுபெட்டியை எத்தனையோ சங்கீத வித்வான்களும் பெரிய உத்தியோகஸ்த்தர்களும் ஜமீன்தார்களும் நன்குமதிக்கப் பெற்று எத்தனையோ சற்றிபிகேட்டை நாங்கள்பெற்றிருக்கின்றோம்.

எங்களுடைய முதன்மையானகருத்து என்னவெனில் குறைந்த விலையிலிருந்து நற்கியாதி பெறவேணுமென்கிற கருத்துடன் விலைகளை குறைக்கப்பட்டது சிலர் விலையை குறைத்திருப்பதில் மட்டமான பெட்டியென்பதுநினைக்கபடும்அவ்விதகறுத்துஉங்களுக்குவேண்டாம்.

ஆனதால் எங்களுடைய பெட்டியை ஒருதரம் வாங்கி பரீட்சித்தால் மறுகம்பெனிக்கு ஆர்டர்கொடுக்கமாட்டீர் என்பதுதிண்ணம்.

விலையின் விவரம்.

(1) 5பள் சுருதிபெட்டி ரூ,7, (2) 7பள் ரூ,9. (3) 9பள் ரூ,11, (4)4பள் டிராவலிங்சுருதிபெட்டி ரூ,8,(5) 6பள்ரூ,11,(6) 9பள் ரூ15 (7) 73சுரமுள்ள சிங்கல்ரீட் ரூ,22, (8) ஷை ரூ, 25, (9) ஷை உயர்ந்தபெட்டி ரூ,28, (10) ஷை ரூ30, (11) ஷை ரூ35,

தங்களுக்கு என்னவிலையில் வேண்டுமோ அந்த விலையையும் நெம்பரையும் தெரியப்படுத்தினால் அனுப்புகிறோம்சுருதிப்பெட்டிக்கு அட்வான்ஸ்ரூபா 3 சிங்கில்ரீடுக்கு ரூ 5 டபுல்ரீடுகககு ரூ10 அட்வான்ஸ் அனுப்பினால் உடனே அனுப்பபடும்.

எமது விலாசம்

எம். டி. ஜெயராம் அண்கோ,

நெ. 11 தாண்டவராயபிள்ளை ஸ்ரீட்.

மெட்ராஸ்.



ஸ்ரீ

ஸ்ரீராமஜெயம்.

அல்லியரசாணிமாலை.

விநாயகர் துதி.

அடாதமும்முலையாள் திருவாலவாய்த்
தடாதகைப்பிராட்டி யாரின்தன்னருள்
தொடாநின்றவல்லிக் கோதைகதைசொல்லக்
கடகளிற்றினைக் கைதொழுதேத்துவாம்.

வெண்செந்துறை.

சித்திவிநாயகர்தன் செம்பொற்பதம்போற்றி
முத்தியளிக்கவல்ல முக்கண்ணன்தான்போற்றி
அஞ்ஞானநீக்கிவிடும் அங்குசநின்றாள்போற்றி
சீராறுயல்லிகதை செந்தமிழால்யான்பாட
ஏராறுநாவினிமேல் இசைந்தாளாயைங்கரனே

சுப்பிரமணியர் துதி

சுத்தமெய்ஞ்ஞானகந்தர் துய்யவடிவேபோற்றி
பத்தர்தமக்குவரம் பாலிப்போன்றாள்போற்றி
ஆதிபரமசிவன் அருள்செய்வோன்றாள்போற்றி
தீதில்லாவாரினையுஞ் சிருஷ்டித்ததாள்போற்றி
சூரபத்மன்சிரந் துணித்தபதம்போற்றி
தீரகயமுகனைச் சேதித்ததாள்போற்றி
வன்னமுகன்தாருகனைப் பாழ்செய்ததாள்போற்றி
சுந்தரகடம்பா கதிர்வேலாவிக்கதைக்குச்
சிந்தாகுலந்தீரச் செய்திடுவாய்கர்த்தாவே

சரஸ்வதி துதி.

ாராருங்கூந்தல் தங்கப்பதம்போற்றி
ூதார்முலைவாணி துங்கப்பதம்போற்றி
ன்னுங்கலைமாதின் துணையடிகளைப்போற்றி
ப ஞ்சரஸ்வதிதா மறையடிகளேபோற்றி

அல்லிகதையுரைக்க அருள்புரிவாய்மாதாவே
வல்லிக்கொடியனைய வண்கரத்துக்கோதாவே
தஞ்சமுடன்மனதிற் றரித்தவளேநீயென்று
நெஞ்சந்தனிற்கலந்து நிகழ்த்துமம்மாயிக்கதையை
கூறுந்திருமாலின் கோதைமலர்த்தாள்போற்றி
வீறுமுலகளந்த மெய்யன்பதம்போற்றி
பஞ்சவர்க்குத்தூதுசென்ற பங்கயத்தாள்போற்றி
எக்கலடையாத இணையடிகளேபோற்றி
இந்தக்கதைதனக்கு எம்பெருமாளேநீரும்
சந்ததமும்வந்துவரந் தந்தளிக்கக்கண்பாரும்

நாட்டுச்சிறப்பு.

தேன்பெருதஞ்சோலை தென்னவளநாடு
கனியுதிருஞ்சோலை கனமதுரைநன்னாடு
வடகாஞ்சிமுத்திறங்கும் வடமதுரைபட்டணமாம்
தென்காஞ்சிமுத்திறங்கும் தென்மதுரைபட்டணமாம்
வாழைவடக்கீனும் வன்கமுகுதெற்கீனும்
கரும்புமிளநீருங் கண்திறந்துபடைபாயும்
கட்டுக்கலங்காணும் கதிருழக்குநெற்காணும்
அறுதாளறுத்துவர மறுதாள்பதராகும்
அறுதாளிக்கீழே ஐங்கலத்தேன்கூடுகட்டும்
யானைகட்டத்தாளும் தானமட்டும்போருகும்
மாடுகட்டப்போர்படுத்தால் மாளாதுசெந்நெல்லு
யானைகட்டிபோய்படுக்கும் அழகானதென்மதுரை
தானைகதான்வளர்ந்து தழைத்தோங்குந்தென்மதுரை
சோலைமலருடைய சொக்கர்கிருபையினால்
அங்கையற்கண்மீனாட்சி அம்மனருளாலே
மாதமொன்றுமும்மாரி வருஷிக்குந்தென்மதுரை
பஞ்சைபனுதி பர[illegible]சிகிடையாது
பஞ்சைகிடையாது பாண்டிவளநாட்டில்
கருப்புக்கிடையாது கனத்ததொருமதுரையிலே
அங்காடிக்கூடை அதிரவில்லைகூறுர்கள்
ஏழைபரதேசி இல்லரங்குடிவாழ்க்கை
தழைத்தோங்கிவாழுர்கள சங்கரன்கிருபையினால்
அடுப்பார்பரிசனங்கள் ஐங்கரன்கிருபையினால்
மதுரையிலடுத்தவர்கள் வாழ்வாகபோற்றிடுவார்
நீதிமனுமுறைகள் நெறிதவறுமன்னவனும்
செங்கோல்பிடித்தாளும் சித்ராங்கதபாண்டியனும்
மகுடமுடிசூடும மன்னன்சிங்காதனத்தில்
தங்கமுடிசூட்டித் தரணிபதியாண்டியிருந்தான்
சொக்கர்வலுமையுண்டு துரைராஜர்பாண்டியர்க்கு

மீனுட்டிலநுகைமயினுல் மேன்மையுடனுண்டிருந்தான்
ஆறிலொருகடமை அரசனவன்வாங்குவது
சக்கரநெறிப்படியே தரணிதனையாண்டிருந்தான்
சொக்கர் திருவிழாவை சோராகச்செய்திடுவான்
ஜுபாதன் திருவிழா ஆனந்தமாய்நடக்கும்
உலகந்தழைத்தோங்கி யுத்தமனுண்டிருந்தான்
தாழ்வுகளில்லாமல் தழைத்தோங்கிவாழ்ந்திருந்தான்
அப்படியாய்வாழ்ந்து அரசாளுநாளையிலே

சோழமகாராசன் வறுமை அல்லது சிறுமை.

சோழராசன் தன்னுட்டில் சொர்ணகிரிபட்டணத்தில்
மழைகள்கிடையாது மன்னன ராச்சியத்தில்
தூறல்கிடையாது சோழனதுசீமையிலே
பயிர்கள்விளையாது பறவைகள்நாடாது
குடிக்கச்சலங்கிடையாது குருவிகள்நாடாது
காய்ந்தமரங்களெல்லாம் கனிகள்கிடையாது
தீய்ந்தபயிர்களெல்லாம் சொல்லமுடியாது
ஏரிகுளங்கழனி இறைக்கசலங்கிடையாது
பூமிதனில்புல்லும் பூண்டுங்கிடையாது
சருகுபோலுலர்ந்தனவே தனிச்சோழன்பட்டணத்தில்
அன்னங்கிடையாது அன்பானசீமையிலே
சோறுகிடையாது சோழனதுசீமையிலே
எல்லோரும்பரதேசி ஏழைகளாய்ப்போனுர்கள்
பெண்களுடனேபிள்ளைகள் புருடர்ஜணங்களெல்லாம்
இனியிருந்தாலிவ்விடத்தி லிறந்துமடிவோமென்று
சொல்லாமலோடுகிறுர் சோழராசன்சீமைவிட்டு
வலசைவாங்கிப்போனுர்கள் மன்னர்பரிசனங்கள்
குடிவலசைவாங்கினுர் குடித்தனக்காரரெல்லாம்
அண்டிபிழைக்கவென்று அனைவருமோடிவிட்டார்
வந்துமிகச்சேர்ந்தார்கள் மதுரைவளநாட்டில்
பாண்டியன்தேசத்திற் பரிசனங்கள்வந்தடுத்தார்
அப்போதுசோழன் அவனுடையபட்டணங்கள்
பாழடைந்துபோயிற்றே பரிசனங்களில்லாமல்
சோழனதுசீமையிலே துற்குறியடைந்தனவே
பன்னிரண்டுதன்வருடம் பாரில்மழையில்லாமல்
மாடுகன்கிடையாது மனிதருங்கிடையாது
தங்கநிழல்கிடையாது தரித்திரமேபெரிதாச்சு
என்சொல்வேனென்று எண்ணமிட்டான்சோழனவன்
வா மனந்தளர்ந்து வாடும்பயிரதுபோல்
செய ன்கீழ்புல்லதுபோற் செழித்ததிருமுகங்கள்
களர் த்துபுல்லதுபோற் கருகிகலங்குலர்தான
ஏண் ணியே யேங்கிமனந்தளர்ந்து

ஆரையடித்தோமோ அநியாயஞ்செய்தோமோ
கூலிக்குறைத்தோமோ குளைமாக்காவிட்டோமோ
பஞ்சைபனாதிகளை பறக்கடித்தோட்டினோமோ
அந்தணர்வேதியற்கு அபராதஞ்செய்தோமோ
தெய்வத்தின்செயலோ திருவுளத்தின்சோதனையோ
ஆரையடிப்போம் அண்டிப்பிழைத்திடுவோம்
எவரையடிப்போம் இக்குறையைத்தீர்த்திடுவோம்
தேசமும்பாழாச்சு செனங்களெல்லாம்பர்போச்சு
அனைவோரும்போயடுத்தார் அணிமதுரைபாண்டியனை
பாண்டியன்தேசம் பதவியடைந்ததுகாண்
சொக்கர்கிருபையினால் சுகமாயிற்றுதென்மதுரை
தெய்வச்செயலல்லவோ சீர்பெற்றான்பாண்டியனும்
நாமுமவருடைய நாதரடிதாள்பணிந்து
பாண்டியன் அனுமதியால் பகவானைநகம்வணங்கி
ஐயர்கிருபையினால் அதிஷ்டங்கள்பெறவேணும்
இதுதான்பயணமென்று இதைவிடவேறேதுமுண்டோ
மகாதேவர்கண் திறந்தால் மழைக்குகுறைவுமுண்டோ
தழைத்தோங்குஞ்சீமையென்று தண்பதியெழுந்திருந்து
மதுரைக்குப்போகவென்று மன்னனெழுந்திருந்து
சிநேகிதஞ்செய்தானே தென்மதுரைபாண்டியனை
என்றுபயணமிட்டான் இடறுதனைத்தொலைக்க
கொஞ்சநஞ்சஞ்சேனைகளை கூடத்துணையாக்கி
தென்னாமுடிதுலங்க பூஷணங்கள்சோதிமின்ன
வாளுங்கடகமின்ன வச்சிரமணிடால்துலங்க
புரவியின்மேலேறி புறப்பட்டான்சோழமன்னன்

சோழமகாராசன் பாண்டியனைக் காணுகிறது.

பாண்டியதேசத்தில் பட்சமுடன்வாரானே
வெகுதூரமாய்நடந்து வெய்யிலில்விடாய்ப்பட்டு
தொலைதூரமாய்நடந்து தென்மதுரைவந்துசேர்ந்தார்
மதுரைவளநாட்டில் வந்துவிட்டான்சோழனவன்
கோட்டைக்குள்ளே நுழையக் கொற்றவனவன்சோழனவன்
தூதுவர்களோடிப்போய் சொன்னார்கள்பாண்டியற்கு
சந்தோஷங்கொண்டு தனிமதுரைபாண்டியனும்
வரச்சொல்லுமென்று மன்னன்கொலுமவர்ந்தான்
அப்போதுதூதர்வந்து அறிக்கையிட்டார்சோழனுக்கு
கொலுமுகத்தைத்தேடியல்லோ கொற்றவனுங்காணடந்து
பாண்டியனுங்கண்டு பரிவுடனேதெண்டனிட்டான்
தெண்டனிட்டசோழனைச் சித்ராங்கபாண்டியனும்
திடுக்கிட்டெழுந்திருந்து சிங்காதனமேடைவிட்டு
கூடவேவகையெடுத்துக் கும்பிட்டான்பாண்டியனும்

கட்டித்தழுவி கடாலிங்கனஞ்செய்து
கூட்டிவந்துகொலுமுகத்தில் கூடவுட்காரவைத்தான்
இட்டசிங்காதனத்தில் இருந்தானேசோழராஜன்
நோக்கிதன்முகம்பார்த்து சொல்லுகிறான்பாண்டியனும்
எங்கேவந்தீரென்னசெய்தி என்னுடையவுயிர்த்தோழா
அவசரமாய்வந்ததென்ன ஆள்கள்படையில்லாமல்
வேர்வைபொழிய வேற்றுமுகமானதென்ன
சிந்தைகலங்கித் திருமுகந்தான்வாட
பூமாலைதான்கசங்க பொன்மகுடந்தான்கருக
அழகுகள்தான்மாறி அனலிட்டமெழுகதுபோல்
உருமாறிவந்ததென்ன வுணர்வுடையமன்னவரே
எந்தனுக்குத்தான்தெரிய வியம்பிடுகொணென்றுரைக்க

சோழராஜன் பாண்டியனிடத்தில் சொல்வது.

அவ்வார்த்தைதான்கேட்டு அரசாளுஞ்சோழனவன்
தனக்குள்ளவருத்தத்தைச் சாங்கமாய்ச்சொல்லுகிறான்
பன்னிரண்டுவருஷ பாரில்மழையில்லாமல்
தவிக்கிறதேயுலகந் தாங்கமுடியவில்லை
திருவிக்கமாட்டாமல் நிலைக்காமலோடிவிட்டார்
கருகிறதேபூமியெல்லாங் கருகிற்றேராச்சியங்கள்
தாளமுடியவில்லை தனிமதுரைபாண்டியனே
நானினைத்துப்போனால் நலையையோவுந்தனுக்கு
உம்முடையராச்சியந்தா னொருகுறைவுமில்லாமல்
தாழ்வுகளில்லாமல் தரணிகள்தான்றழைக்க
தேசஞ்செழிக்கச் சிறப்புடனேநீர்வாழ
ஏழையவன்போலேநான் இந்தச்சிறுண்மைபட
என்றுதான்செழிக்க என்ஜனங்களீடேற
அவ்வளவுதவி அனுக்கிரகம்நீர்செய்தால்
நன்றிமறப்பேனோ நாளுள்ளநாள்வரைக்கும்
சகாயமறப்பேனோ சந்திராதித்தருள்ளளவும்
உதவிமறப்பேனோ ஊழியுள்ளநாள்வரைக்கும்
இந்தச்சகாயமதை எப்போதும்யான்மறவேன்
சஞ்சலந்தீரவைப்பாய் தனிமதுரைபாண்டியனே
அவ்வசனங்கேட்டு அழகுள்ளபாண்டியனும்
சோழன்முகம்நோக்கிச் சொல்லுவானொருவசனம்
என்னாலேயாகுமோ இவ்வுலகந்தான்றழைக்க
நம்மாலேயாவதுண்டோ நாடுகள்தழைத்தோங்க
உன்னாலுமென்னாலும் உலகந்தழைக்குமோதான்
தேவாதிதேவர் திருவருள்தானிருந்தால்
நாதாதுதயவு நமக்குத்தானிருந்ததென்றால்

சொக்கரது தயவால் தொல்லுலகந்தான் றழைக்கும்
அவருடையசெயலல்லா லாசனலாவதுண்டோ
தெரியாதோவுந்தனுக்குத் தெளிவறிந்தசோழமன்னா
நாதரேயென்னுடைய நாடுதழைக்கவென்றான்
அவ்வசனங்கேட்டு அருஞ்சோழனேதுரைப்பான்
உமதுதயவாலே உரிமைபட்டவெந்தனுக்கு
நாதருக்குச்சொல்லி நாடுதழைக்கவையும்
சொக்கருக்குச்சொல்லி தேசஞ்செழிக்கவையும்
என்றுமிகவேண்டினான் இராசனந்தபாண்டியனை
அப்படியேநல்லதென்று ஆனதொருபாண்டியனும்
வந்ததொருசோழனுக்கு வந்துமிகவிருந்துசெய்து

பாண்டியனுஞ் சோழனும் சொக்கரிடம்
வந்து சேர்ந்தது.

இருவருங்கூடியே ஈசரதுவாலயத்தில்
சொக்கரதுகோயிலுக்குத் துருதமுடன்வந்தார்கள்
ஈதரதுசந்நிதிக்கு இன்பமுடன்வந்தார்கள்
சுவாமியைக்கண்டு தொழுதடிகளைப்பணிந்தார்
சாஷ்டாங்கதெண்டனிட்டு சரணமென்றடிபணிந்தார்
இருவருமேயடிபணிந்து ஈசனைத்தோத்தரித்து
தும்பைமலர்சூடுகின்ற சொக்கரைத்தோத்தரித்து
ஆலவிடமுண்ட ஐயனைத்தோத்தரித்தார்
நஞ்சையமுதாண்ட நாதனைத்தோத்தரித்தார்
இடறுதனைநீக்கிவிடும் ஈசனேசரணமென்றார்
துன்பத்தைநீக்கிவிடுஞ் சொக்கரேசரணமென்றார்
ஏழைமுகம்பாருமையா ஈசனேசரணமென்றார்
அப்போதுசொக்கலிங்கர் அந்தமொழிகேட்டு

சொக்கலிங்கர் சொல்வது.

குஞ்சிரிப்புக்கொண்டுமே கொடிமுடிகைலாசர்
ஏதுவகையாக இருவருமாய்வந்தீர்கள்
வந்தவிபரமதை வகையாகச்சொல்லுமென்றார்
அவ்வசனங்கேட்டு அழகுள்ளபாண்டியனும்
சொக்கரைதரிசித்து சொல்லுகிறான் ராஜனவன்
மதுரையில்வாழுகின்ற மகாதேவர்ஆண்டவனே
எந்தனுக்குக்குறையில்லை உந்தனது தயவாலே
இச்சோழனுக்கு வந்ததொருதுன்பங்கள்
சொல்லத்தொலையாது துயரமிகத்தோணுதையா
மழைகள்கிடையாமல் வயலுங்கள்பாழாகி

உவர்த்துகெசராருபோ லுலகங்களத்தனையும்
வாழுதகளிக்கிறார்கள் மனிதர்களெல்லோரும்
அன்னங்கொடையாது அரசனாட்டனத்தில்
சோறுகொடையாது சோழனது சீமையிலே
பெரும்வருத்தமுற்றான் வெங்கலிந்தசோழராசன்
தயவுபுரிந்துவந்து தங்கார்க்கவேண்டுமையா
மனதுகளிந்து மழைபெய்யவையுமையா
மாறிசெழிப்பதற்கு நாதரேகன்பாரும்
சுப்பர்க்கவேணுமென்று கர்த்தரேகண்டிட்டோம்

சொக்கநாதர் சொல்வது.

அவ்வசனங்கேட்டு ஆண்டவருமேதுரைப்பார்
அரசர்கேளீங்கள் அஞ்சவேவேண்டாங்காண்
ஏவினவன்றனக்கு எந்தவதிகாரமுண்டோ
அந்தவதிகாரம் அவனவனேசெய்கிறது
வருணபகவானு மனதுவைத்தாராமானால்
பெய்யாமழைபெய்வித்து பெருகவைப்பார்பூமியெல்லாம்
வருணனுக்கதிகாரன் வானவர்கோனிந்திரன்காண்
மேகத்துக்கதிகாரன் மேலான இந்திரன்காண்
தேவேந்திரனைநீங்க ளிருவரும்வணங்கிடுங்கள்
தேவேந்திரனைத் தெரிசித்தீராமாகில்
உங்கள்குறைகளை யுரையுங்களிந்திரற்கு
மனதிறங்கவேண்டி வணங்கினீராமாகில்
வருணனைத்தானழைத்து மழைபெய்யவைப்பான்காண்
மேகத்தைத்தானழைத்து விடைகொடுப்பானிந்திரனும்
இந்திரன்தயவாலே எங்குஞ்செழித்தோங்கும்
அவ்வசனங்கேட்டு அணிமதுரைப்பாண்டியனும்
சொக்கர்விடைகொடுக்கச் சோழனும்பாண்டியனும்
நல்லதென்றுசொல்லி நாதரடிபணிந்து
இருவருமாய்நடந்தார்கள் ஈசுரர்கோவில்விட்டு
ஆலயந்தனைவிட்டு அப்பால்நடந்தார்கள்

இந்திரலோகங்காண்கிறது.

தெய்வலோகம்போகவென்று சுறுதியாய்த்தானடந்தார்
சோழனும்பாண்டியனும் அருசாய்நடந்தார்கள்
இந்திரலோகத்திற்கு இசைந்தேவந்தார்கள்
தேவேந்திரலோகத்திற்கு சுறுதியில்தானடந்தார்
அரமனைபதிதேடி அரசர்கள்தானடந்தார்
வாசலங்கிட்டி வாசற்றேவனிலே
அதிசயந்தனிந்திரு மயக்கார்கொலுமேடை

முப்பத்துமுக்கோடி முனிவர்களுந்தேவர்களும்
நாற்பத்தெண்ணாயிரம் நல்மானரிஷிகளுடன்
கிம்புருடர்கின்னரர் கெருடகாந்தருவருடன்
கின்னரிவீணைகள் கீதங்கள் பாடிநிற்க
மேனகரம்பையும் மெல்லிதிலோத்தமையும்
ஊர்வசிநாட்டியங்க ளுச்சிதமாய்ச்செய்துநிற்க
இந்திராணிதேவியுடன் இந்திரன்கொலுவிருந்தார்
அந்தச்சமயத்தில் அழகுள்ளபாண்டியனும்
சோழனும்பாண்டியனுந் துருதமாய்வந்தார்கள்
இந்திரன்கொலுதேடி இருவரும்வருகையிலே
கண்டானே இந்திரனுங் காவலர்கள்வருகிறதை
பூலோகராசாக்கள் பொன்னுலகம்வருகிறார்கள்
நரமனிதராசாக்கள் நாடிவரக்காரணமேன்
இவர்களாய்வருவாரோ எச்சாரால்வருகிறார்கள்
சொக்கரருள்பெற்று சொர்க்கபதிவாறார்கள்
நல்லதென்றுசொல்லி நலமுடன்பார்த்திருந்தான்

இந்திரனைக்கண்டது.

சொர்க்கலோகவிந்திரனைச் சோழனவன்பார்த்து
மிகவும்பயந்து மேன்மையுள்ளவிந்திரற்கு
அஞ்சிப்பயந்து அடிதொழுதுதெண்டனிட்டான்
சாஷ்டாங்கதெண்டனிட்டான் சசிதேவிநாயகற்கு
தெண்டனிட்டசோழனைத் தேவேந்திரன்வாழ்த்தி
வணங்கியசோழனை வாயாரத்தான்வாழ்த்தி
பொற்பீடம்போடுமென்றார் பூலோகச்சோழனுக்கு
எட்டுப்படியின்கீழிட்டார்கள்பொற்பீடம்
வந்தமகாராசன் மன்னன்மனமகிழ்ந்து
அந்தமுள்ளபீடத்திலமர்ந்தானேசோழனவன்
அதிராசபாண்டியனும் இருமாப்புதானடைந்து
மதுரையாளும்பாண்டியனும் வணங்காமற்றானிருந்தார்
தம்மைப்போலிவனொருவன் ராசனல்லோ இந்திரன்தான்
இந்திரனைநாமும் எப்படி வணங்குவது
பூலோகவிந்திரன்போற் பொன்மதுரையாளுகிறோம்
ஈஸ்வரன்கிருபையினு லிப்பூமியாளுகிறோம்
ஈசன்தயவிருக்க யிவனைவணங்குவதோ
சொக்கர்மருத்துவந்தால் தொழாமலெதிரேநின்றார்
எதிரில்நின்றபாண்டியனை யிந்திரனுந்தான்பார்த்து
வந்திருக்கும்பாண்டியன்றான் வணங்காமலிருப்பதென்ன
நம்மைமதிக்கவில்லை நாடாளும்பாண்டியனும்
எதிராய்மதியாமலிருக்கிறான்பாண்டியனும்

சொக்கர்வருணையிறந் தெருநாமற்போனனே
சாதுருபமவரால் நம்மைமதிக்கவில்லை
பூலோகமன்னனுக்கும் பெருமைகள்தானுமுண்டோ
தெருவம்பனைத்தீராக்குக் கேடுவருந்தெரியாது
இவனுடையகர்வத்தை யினியடக்கவேண்டுமென்று
நல்லதனத்தாலே பிள்ளைவைக்கவேணுமென்று
உபாயத்தாலே தடுங்கவைக்கவேணுமென்று
மாமத்தைக்கொண்டாரும் வானவர்கோனிந்திரனும்
ஆடாதாடுவர்கள் அருகிருக்குங்காவலரே
சரியொக்கபாண்டியற்குச் சரியிடம்போடுமென்றார்
எதிராகப்போட்டதொரு படான ஆசனத்தில்
இருத்துமென்றார்பாண்டியனைக் கொலுமேடையாசனத்தில்
சரியாகவுட்கார்ந்தான் தனிமதுரைபாண்டியனும்
ஆடாதாடுவோர் அரசாளும்மன்னவனுக்கு
வந்தவிதருமன்னனுக்கு மாலையொன்றுபோடுமென்று
கண்காட்டியிந்திரனுங் கன்றுடனேமல்லருக்கு

இந்திரன் கெண்டிமாலை சூட்டினது.

பாண்டியராசனுக்குப் பதிக்கழுத்திகெட்டியொன்று
ஆயிரம்பேர்சுமக்கும் ஆணிப்புதுக்கெட்டியொன்று
கொண்டுவந்துபோடுமென கொடுமதுரைபாண்டியற்கு
சூட்சமாயொருமாலை சோழனுக்குப்போடுமென்றார்
அப்படியேயோடினர்க ளக்கப்பரக்கதானமைந்து
ஆயிரம்பேர்மல்லரவ ராள்பிடித்துக்கீதானகன்றி
நெக்கியெதிர்த்தார்கள நேரானகழுத்திகெண்டி
இத்தோபாண்டியன்றன் சால்நடுங்கிவான்
தூக்கிகொண்டுவந்தார்கள் சூரர்தமல்லர்களும்
இந்திரன்கண்காட்ட எதிர்வந்தார்மல்லர்களும்
பாண்டியற்குவெகுமதியாய்ப் பார்மன்னனருளென்றார்
போட்டார்கள கழுத்திலேதான் போர்மல்லராயிரம்பேர்
அப்பெரியமாலையைத்தான் அழகுள்ளபாண்டியனும்
காதாதுதிருவையிறல் நடுக்கங்களில்லாமல்
சொக்கனைத்துதிசெய்து தோளிலேதாங்கிக்கொண்டான்
மார்பைகெளித்துமே மாலையைத்தாங்கிகொண்டான்
கண்டார்களெல்லோருங் கனமானபாண்டியனை
தேவேந்திரன்கண்டான் சிறப்புள்ளபாண்டியனை
இவனுலேயொன்றுமில்லை பிசாசுதன்பலந்தான்
அறிவோமிவனுடைய ஆங்காரவலுமையென்று
பாண்டியன்மேலேமெல்லப் பகைவைத்தானிந்திரனும்

ஒருவருக்குந்தெரியாம லுள்ளத்தில்கபடுவைத்தான்
பாண்டியன்முகம்நோக்கி பண்புடனே தான்சொல்வான்
சோழனுநீருமந்தச் சொர்க்கபதிவந்ததென்ன
வந்தகாரியமதை வகைபிரித்துச்சொல்லுமென்றார்
அப்போது பாண்டியனும் அருள்புரிந்தே தான்சொல்வான்
எந்தனதுகாரியமா யிவ்விடத்தில்வந்ததில்லை
சோழனுக்காயிங்குவந்தேன் சொர்க்கபதியிந்திரனே
அவ்வரசனலுவல்கொண்டு அமரபதிவந்தேனென்றான்
தொந்தரைகள்படுகிறானே சோழனிந்தமன்னவனும்
மழைமாரியில்லாமல் வருத்தங்கள்மிகவாகி
கம்பு தேராச்சியத்தில் கருகுதேபூமியெல்லாம்
பரிசனங்களெல்லவரும் பரதேசியானார்கள்
பன்னிரண்டுதன்வருடம் பாரில்மழைகிடையாது
அந்தவிசனத்தாலே அடுத்துவந்தபெண்ணையும்
என்றநிலையாகாதென்று ஈசரண்டைபோயுரைத்தேன்
உம்மண்டைபோகவல்லோ உத்தரவுசெய்தார்காண்
ஈசரிடைபெற்றுமல்லோ இவ்விடத்தில்வந்தோம்யாம்
உம்மாலேயானும்நல்ல வுதவிபெறவேண்டுமென்றான்
அந்தமொழிகேட்டு ஆயிரங்கணிந்திரனும்
சோழன்முகம்பார்த்துச் சொல்லுவாரிந்திரனும்
எதுக்குமஞ்சாதே யின்பமுள்ளமன்னவனே
ஈசர்தயவாலே இனியசவுக்யமுண்டு
அப்படியேசெய்விப்பேன் அஞ்சாதேசோழமன்னே
நன்முறைமைதானிருக்க நீதியுள்ளமன்னவனே
[illegible]வார்த்தைக்கு நானென்னபேசுவேனோ
அப்படியே[illegible]டப்பேன் அரசேநடவுமென்றார்
தேவேந்திரன்சொல்லித் திடுக்கிட்டெழுந்திருந்து
சாஷ்டாங்கதெண்டனிட்டுச் சரணமென்றடிபணிந்தான்
வாழ்த்திவிடைகொடுத்தார் வானவர்கோனிந்திரனும்
உத்தரவுபெற்றானே உலகாளுஞ்சோழமன்னன்
பாண்டியனுமப்போது பக்குவமாயெழுந்திருந்து
இந்திரனேவிடைதாரு மெங்களிருவருக்கும்
போய்வாருமென்றுசொல்லி போகவிடைகொடுத்தார்
ஆனந்தமாய்பூரித்து அரசர்களிருவருமாய்
தெய்வலோகம்விட்டுமல்லோ திரும்பினார்பூலோகம்
மதுரைவளநாட்டில் வந்தார்களிருவருமாய்
சோழனுக்குவெகுமதிகள் செய்ததந்தபாண்டியனும்
அனுமதிகள்பெற்றுக்கொண்டு அனுப்பிவிடைகொடுத்து
பாண்டியன்விடைபெற்றுப் பாரமன்னன்சோழனவன்
சொக்கரைத்தரிசித்துச் சோழன்நடந்துவிட்டான்

தன்னுடையராச்சியத்திற் றனஞ்செயனும்போய்நடக்க
இப்படியாய்ச்சோழ னிருக்குமந்தவேளையிலே

இந்திரன் கோபித்துச் சோழன் பெருமைபடவும் பாண்டியன் சிறுமைபடவுஞ் செய்தது.

ஆகாயவிந்திரனு மன்புடனேதுசெய்தார்
பாண்டியன்வந்ததுவும் பார்சோழன்வந்ததுவும்
தன்னைவணங்காமற் றயிரியமாய்ப்போனதுவும்
ஏறுனபாண்டியன்றா னம்மைவணங்காததினால்
மதியாமற்போனவனை மட்டடக்கவேணுமென்று
கோபங்கள்கொண்டாரே கொழுந்தனல்போலிந்திரனும்
எரிபக்ககண்களுடன் இந்திரனேதுசொல்வார்
மேகங்களேழையும் மேன்மையுடன்வரவழைத்து
சப்தமேகமத்தனையுஞ் சதிராய்வரவழைத்து
வருணபகவானை வரவழைத்திந்திரனும்
கேளுங்கள்மேகங்களேகீர்த்தியுடனென்வார்த்தை
இன்றுமுதலாக ஈடழிவான்மதுரையிலே
கால்வைக்கக்கூடாது கருமேகங்களெல்லாம்
அன்னீதவான்மதுரையிலே அடிவைக்கலாகாது
தூரல்விழப்போறீர்கள் துன்மார்க்கன்மதுரையிலே
எடுத்தடிவையாமல் இடைந்துமழைபெய்யுங்கள்
அவனுடையபூமியினி லடிவைக்கலாகாது
மதுரையிலேநீங்களும்போய் மழைபெய்தீராமானால்
கால்விலங்குங்கைவிலங்கும் கழற்றுப்பெருவிலங்கும்
தாழ்விலங்குந்தோள்விலங்கும் தரிக்காப்பெருவிலங்கும்
விலங்குகள்போட்டுமல்லோ வெட்டியெரிந்திடுவேன்
எனவார்த்தைதனைத்தடித்து வருஷிக்கப்போறீர்கள்
சோழனதுசீமையிலே சொர்ணமழைபெய்திடுங்கள
மாதமும்மாரி வருஷியுங்கள்சோழனுக்கு
முப்போகந்தான்விளைய மும்மாரிபெய்திடுங்கள்
எக்காலுஞ்சோழனுக்கு இடையூறுவாராமல்
அரசனுடசீமையிலே அமர்ந்துமழைபெய்திடுங்கள்
என்றுவிடைகொடுத்தா ரிந்திரனப்போது
நல்லதென்றுசொல்லியல்லோ நலமாகமேகமெல்லாம்
மதுரையைநாடாமல் வருகிறதேமேகமெல்லாம்

சோழராஜன் பெருமைப்பட்டது.

சோழனாடு தனிலே சொலிக்கிறதே பெருமைகள்
கடலிரைச்சல்போலாக கம்பிறதே பேரிகையெல்லாம்
குமிறியிடித்துக் குடங்கொண்டுபொழிகிறதே
இரைச்சலுடனாக ஏகவெள்ளம்பொழிகிறது
சோனைமழைகளது சொரிகிறதே பூமியெல்லாம்
நல்லமழைகளாலே நாடுசெழித்ததுவே
பூமிகுளிர்ந்ததங்கே பொய்கைகள் நிரம்பியது
ஏரிகுளம்நிரம்பி புரளுதேயேகவெள்ளம்
மடுக்களுளாம்நிரம்பி கால்வாய்கள் தானிரம்பி
ஆறுகள்நிரம்புவதா லடைபடுதுவெகுசனங்கள்
கழனிபல்லம்நிரம்பி கால்வாய்கள் தானிறம்பி
ஊற்றுகள் தான்சுரந்து ஓடிற்றேசலப் விசையாய்
தடாகங்கள் தானிறம்பித் தாமரைப்பூத்ததுபோல்
வயல்கள்நிறம்பியல்லோ வாய்க்காலுந்தானோடி
உலர்ந்தமரங்களெல்லாம் உயிருண்டாய்த்துளிர்த்ததுவே
அடியற்றமரங்களெல்லாம் அன்பாய்த்துளிர்த்ததுவே
காடுசெடிகளெல்லாம் கனமாகவே தழைக்கும்
செடிகள்மரங்களெல்லாம் செழிப்பாய்வளர்ந்திருக்கும்
பூவாமரங்களெள்ளாம் பூத்துச்சொரிந்தனவே
செந்நெல்விளைந்ததுவே தேசஞ்செழித்தனவே
கிள்ளப்பழுத்ததுவே கிளிகள்வந்துசேர்ந்ததுவே
அள்ளப்பழுத்ததுவே அணில்கள்வந்துசேர்ந்ததுவே
சோலைகள்சாலைகளுஞ் சூழ்ந்ததடாகங்களும்
குருவியடித்தனவே குயில்கள்வந்துபாடிவரும்
தாராவும்மயில்களும் தாவிவிளையாடிவரும்
குயில்களிரைச்சலிடுங் கோகிலங்கள்சத்தமிடும்
அன்னங்கள்பேடையது அநேகம்வந்துசேர்ந்ததங்கே
பண்டுபழங்கள்தின்று களித்தனபறவையெல்லாம்
ஏர்கட்டிவிழுவாரும் இனாற்றுநடுவாரும்
பயிரிடுங்குடிகளெல்லாம் பலப்பட்டார்பூமியிலே
ஓடுங்குடிகளெல்லாம் ஊர்வந்துசேர்ந்தார்கள்
பரிதேசியர்தேசி பஞ்சைபரதேசியெல்லாம்
சோழராஜன்பட்டணத்தில் சுகப்பட்டுவாழ்ந்தார்கள்
பிச்சைக்காரரெல்லோரும் பெருமையடைந்தார்கள்
சோழமண்டலங்களெல்லாம் சுகமாய்ச்செழித்தனவே

சோழராஜன் தொலைத்தான் விசனமெல்லாம்
ரெண்டுவிடைக்காளை இருவைக்கடலானான்
முத்திரமனைச்சனியிலே எந்நாளுந்நிலைத்திருப்பான்
மகுடமணி விளங்கிக்கும்மண்டலத்தில்
சோழமகாராஜன் தொலைத்தான்விசனமெல்லாம்
அப்படியாகவாழ்ந்தான் அழகானசோழமன்னனே

பாண்டியன் வறுமையடைந்தது.

பாண்டியனாடார் பரதேசம்போனார்கள்
மழைகளிடையாது மதுரைநகர்சீமையிலே
தூறல்கிடையாது தென்மதுரைபூமியிலே
தூறல்விழுவதில்லை சொக்கர்மதுரையிலே
காய்ந்துலர்ந்துபோயினவே கனமதுரைப்பட்டணத்தில்
எரிந்துபுகைந்ததே சாவிகிடையாமல்
குடிக்கநீர்கிட்டாது குளங்கள்மடுக்களெல்லாம்
காகங்குடிப்பதற்குக் கண்டிசலுங்கிட்டாது
ஆறுகள்குளங்களெல்லாம் அடங்கலும்வரண்டனவே
ஏரிகள்வரண்டனவே எறக்காலாழமட்டும்
பூமிக்குள்குடைப்பெழும்பிப் பொங்கிற்றேதணலாக
விளைவுகள் கிடையாது வேந்தன்மதுரையிலே
கிளைவுகள்கிடையாது கனமதுரைபூமியிலே
பொன்மதுரைநாட்டிலே புழுதியடைந்ததுவே
சாகுபோதுலர்ந்தனவே தழைத்தமரங்களெல்லாம்
பூமியிலுலர்ந்தது பூண்டுகிடையாது
பறவைகள்கிடையாது பாண்டியன்தேசத்தில்
குடிவலசைவாங்கினார் கொடமதுரையுள்ளவர்கள்
பஞ்சைபறதியாய்ப் பரதேசம்போகிறார்கள்
அன்னங்கிடையாது அழகுமதுரையிலே
மதுரையைச்சுற்றி மகாவனங்கள்செடிகளெல்லாம்
காய்ந்துமிகத்தீய்ந்து கரும்புகைச்சல்கொண்டனவே
தங்கநிழல்கிடையாது தனிமதுரைபூமியிலே
வரிசையுள்ளவர்கள் உறக்கங்கள்கொண்டார்கள்
பாழடைந்ததுகமானார் பாண்டியநாட்டிலுள்ளோர்
அன்னவிசாரம் அதுவேமிகுதாக்க
பன்னிரண்டுவருஷம் பாரிக்கருப்பாயிற்று
சீரப்பெலித்தார்கள் சல்லடைக்கண்ணானார்கள்
பெண்டுபெண்பிள்ளை புருஷர்களொருதேசம்
திக்குகள்கெட்டுத் திசைமாறிப்போனார்கள்
அப்படியிருக்கு அணிமதுரைப்பூமியெல்லாம்
இந்திரனாலே இடருகள்சேர்ந்தனவே
ஆயாசத்துடனே அணிமதுரைபாண்டியனும்

மழையில்லாநாடு வையகந்தானுமோ
கான்றவிசனமா யிருக்குமந்தவேளையிலே
மேகம்பொழியும் தனிச்சோழன்நாட்டிலே
மேகங்குமிறி மேலாகப்போய்விடுமாம்
மதுரையைநாடாமல் வகையுடனேபோய்விடுமாம்
இப்படியாய்போடும்போது இதலேயாருமேகம்
குட்டிமேகமொன்று குறுக்கிட்டுவோடும்போது
வருகிறதிசைதனிலே மதுரையென்றுதெரியாமல்
பொழிந்துகொண்டேயோடிற்று போகும்திசையிலே
அந்தமழைவெள்ளம் அணிமதுரைபெருகிற்று
வெள்ளம்புரண்டுது வேந்தன்மதுரையிலே
வைகைப்பெருக்கெடுத்து யாவெள்ளமோடுவதை
அருகன்பாண்டியனும் அவசரமாயெழுந்திருந்தான்
துரிதமாயெழுந்திருந்தான் சுக்கிரப்பாண்டியனும்

பாண்டியன் வைகையாற்றை அணைகட்டியது.

ஓடுகிறவெள்ளத்தை உள்ளடக்கவேணுமென்று
அப்புறம்போகாமல் அணைகட்டவேணுமென்று
ஆராதாருவனே அணிமதுரைப்பட்டணத்தில்
வீட்டுக்காரள்தான் விடுபட்டுவரவேண்டும்
ஆளனுப்பாவிட்டில் ஆக்கினைசெய்வேனென்று
அணைகட்டவரச்சொல்லி அடியடாதமுக்கென்றார்
அப்படியேதானடித்தான் அணைதாருசாம்புவனும்
அந்ததமுக்கடிக்க அணிமதுரையுள்ளவர்கள்
வீட்டுக்கோரர்கள் விடுபட்டுவருகிறார்கள்
அவரவர்கள்தம்முறைக்கு ஆளாகுவர்வாறார்கள்
மண்வெட்டிக்கொண்டு வருகிறார்களணைகட்ட
பங்குள்ளவிதமாகப் பாறைகொண்டோடிவந்தார்
அவரவர்க்குப்பங்கு அளந்துகொடுத்தார்கள்
அளந்திட்டபங்குகளில் அதிலேகுறைவுபட்டால்
பங்குவிதக்காரனைப் பட்டாவுக்கிறையிடுவேன்
என்றுதிட்டஞ்செய்தான் இராசனந்தபாண்டியனும்
அவரவர்கள்பங்குவீதம் அணைவருங்கட்டும்போது
மதுரையிலேபொருந்தி வாணிச்சியென்பவளாம்
அவளுக்குயாதொரு ஆண்பிள்ளைதானுமில்லை
அவளுக்கொருபங்கு அணைகட்டச்சொன்னார்கள்
பிட்டுசுட்டுவிற்று பிழைக்குமந்தவாணிச்சி
என்னசெய்வேனென்று எண்ணமிட்டாள்வாணிச்சி
ஆளுங்கிடையாது ஆருமற்றபாவிநான்

காணக்கிட்டமிருபத்தும் எப்படிக்குச்செய்வேன்யான்
அணைக்கட்டவெந்தனுக்கு ஆளுங்கிடையாது
ஆளில்லையென்றால் அரசனுங்கேட்பானே
வல்லுவிசனமிட்டு எண்ணியிருக்கையிலே

வாணிச்சிபிட்டுக்கு சொக்கர் மண்சுமந்தது.

அவளுடையவிசனத்தை யாற்றவேணுமென்று
அட்டாளுஞ்சொக்க ரையரவரேதுசெய்தார்
அவளுக்குஆளாகி அணைகட்டவேணுமென்று
ஒட்டனைப்போல யுருவெடுத்துச்சொக்கலிங்கர்
ஆரடாஒட்டாநீ அணைகட்டவந்தபேர்
அன்பந்துக்காளாகி யெனக்கணைகட்டுவாயா
கட்டுவேனென்றார் கனமதுரையொட்டனவர
கேட்டதொருகூலி கிருபையுடன்தருவேனென்றார்
அவ்வார்த்தைதக்கேட்டு அந்தவொட்டனேதுசொல்வார்
கூலிக்குபிட்டுகேட்டு கொம்பனையேநீகொடம்மா
உதிர்ந்துவிழும்பிட்டதனை உத்தமியேநீகொடுத்தால்
பிட்டுக்குமண்சுமந்து போடுகிறேனணையாக
அப்படியேநல்லதென்று அவ்வாணிச்சிக்கிழவி
பிட்டுசுடும்போது பிட்டுமுதிர்ந்ததுதான்
உதிர்ந்தபிட்டைதானெடுத்து உத்தமியுங்கொடுத்தாளே
அக்திமடியில்வைத்து யீஸ்வரனொட்டனவர்
வாணிச்சிபக்குக்கு வந்தாரேயணைகட்ட
உதிர்ந்தபிட்டைதின்று ஒருகூடைமண்சுமந்து
போடுவாரொருதட்டு பிட்டுஞ்சரியாகும்
மறுபடியுந்தானவருவார் வாணிச்சியண்டையிலே
பிட்டுசுடுவாளாம் பொடியாயுதிர்ந்திடுமாம்
உதிர்ந்ததொருபிட்டுக்கு ஓடிவந்துநிற்பாரும்
பிட்டெடுத்துக்கொடுப்பாள் போனவொட்டனுக்கு
ஒருதட்டுமண்ணுக்கு வுதிர்ந்தபிட்டுசரியாகும்
வாணிச்சி அண்டைக்கு வந்துநிற்பாரொட்டனவர்
பிட்டுசுடும்போது பொடியாயுதிர்ந்திடுமாம்
உதிர்ந்ததொருபிட்டுக்கு ஒட்டன்வந்துநிற்பாரும்
பிட்டுக்கொடுப்பாளாம் போவாரும்தின்றுகொண்டு
ஒருதட்டுமண்போடுவது உதிர்ந்தபிட்டுசரியாகும்
மறுபடியும்வாராரும் வாணிச்சிபிட்டுக்கு
திருப்புட்டுசுட்டாலும் உதிராதிருப்பதில்லை
கட்டப்பட்டபிட்டைத்தானுஞ் சொரசொரென்றுதிர்ந்திடுமாம்
உதிர்ந்ததொருபிட்டுக்கு ஓடிவந்துநிற்பாரும்
பிட்டுதின்றுகொண்டே போடுவாரொருதட்டு

பிட்டுவிலையாகவில்லை ஒட்டன்வேலைசாயவில்லை
பாதியணையாயிற்று பாதியினங்கட்டவில்லை
அவரவர்கள்பங்குக்கு அணைகட்டியாயிற்று
வாணிச்சிபங்குக்கு வரப்புகட்டிதீரவில்லை
பிட்டுகளைத்தின்கிறதும் போகிறதும்வருவதுமாய்
ஒட்டன்திரிவதிலே உதிர்ந்தபிட்டுசரியாச்சு
பொழுதுமறைந்தது பொன்மதுரைபாண்டியனும்
கட்டினஅணைகளை கனமுடனேபார்த்துவந்தான்
வாணிச்சிபங்குக்கு வரப்பினுங்கட்டவில்லை
ஆருதடாயிந்தபங்கு அணைகட்டிதீரவில்லை
எவனுதடாயிந்தஅணை யென்றனேபாண்டியனும்
அரசனுக்குசொல்லுகிறா ரணைகட்டுமன்னவர்கள்
வாணிச்சிபங்குக்கு வந்தானேயொட்டனவன்
அவனுடையபங்கிதுதான் அணைகட்டவில்லையென்றார்
கோபங்கள்கொண்டானே கொற்றவனார்பாண்டியனும்
எங்கேயடாஒட்டனவ னிழுத்துக்கொண்டுவாருமென
ஒட்டனைப்பிடித்துவந்தார் உலகாளும்ராசரண்டை
கண்கள்சிவப்பேறிக் கனமதுரைபாண்டியனும்



சொக்கர் பிரம்பாலடிப்பட்டது.

பிட்டுக்குமண்சுமந்த பித்தனென்றறியாமல்
ஒட்டனென்றெண்ணியல்லோ ஓங்கியேயடிக்கலுற்றான்
கைப்பிடித்தபிரம்பதனை கரகரென்றுதான்சுழட்டி
ஒட்டன்முதுகின்மேல் ஓங்கியேயடித்தானே
அந்தஅடிபடவே ஐயரந்தசொக்கருக்கு

வருந்தல்கள்கொண்டாரே மதுரைசொக்கநாதருந்தான்
அந்தவடித்தான் அனைவருக்கும்பட்டனவே
அவரவர்கள்தம்முதுகில் அடித்தழும்புகொந்தனவே
இந்துதிசைகளும் திசாந்தரங்களெல்லாம்
அண்டங்கள்தீவுகளும் ஆகாசமெவ்விடத்தும்
சகலஜீவஜெந்துக்களும் தழும்புமிகவுண்டாச்சு
பாண்டியனும்முதுகின்மேற் பாரத்தழும்பாச்சு
வல்லவரும்பயந்தா ரிந்தவடியாலே
பாண்டியனுமப்போது பயந்துநடுநடுங்கி
எங்கேயந்தவொட்டனென்று எடுத்துப்பார்க்கும்போது
மாயமாய்த்தான்மறைந்தார் வந்ததோரொட்டனவர்
எங்கெங்குந்தேடினன் இனிமதுரைப்பாண்டியனும்
காணுதிலே கனகத்தாளடிவிழுந்தான்
வந்தவொட்டனல்ல மாயாண்டிசொக்கரவர்
ஆண்டவராகவேனும் ஆளடிமைசெய்யவந்தார்
தெரியாமற்போச்சதென்று சிந்தைதமிகவாடி
தீவினைக்காளானேனும் தெய்வமென்றுபாராமல்
வல்வினைக்காளானேனும் மகாதேவனென்றறியாமல்
இந்தவினைப்பயனை எப்போதுலைத்திடுவோம்
வந்ததுநமக்குமல்லோ மதிமோசமென்றுசொல்லி
எந்தவிதத்திலேயும் ஈடேறப்போறதில்லை
தெரிந்ததுநமக்கென்று தென்மதுரைபாண்டியனும்
மெத்தவிசனமாய் விதித்துவந்துவிட்டான்
ஒட்டனென்றஉருவு உத்தமனார் தான்மறைந்து
ஆலயத்தில்வந்தாரே அட்டாளும் சொக்கலிங்கர்
வருந்தத்துடனேயவர் வந்துநின்றாராலயத்தில்
அப்போதுமீனாட்சி யன்னையிலேயோடிவந்து
ஏதுகாண்சுவாமிநீரு மிப்படிக்குவந்ததென்ன
அலையலைவந்தீர் அக்குறையைசொல்லுமென்றார்
கேளுமென்றுபகியே ஒளிமொழியேமீனாட்சி
வாணிச்சிக்காகவல்லோ மண்சுமக்கப்போயிருந்தேன்
பிட்டுக்குமண்சுமக்கப் பிரம்படிபட்டுவந்தேன்
அடித்தான்பிரம்பாலென் னங்கந்தழும்பாக
கொடுத்தான்முதுகின்மேற் கொடும்பாவிபாண்டியனும்
சகாயஞ்செய்யப்போனேன் அபாயம்வந்துநேர்ந்தது
அபாயமென்னைசெய்தவனை ஆதரிக்கப்போறதில்லை
என்றுரைக்கசொக்க ரெடுத்துரைப்பாள்மீனாட்சி
அறியாமற்செய்தபிழை பெரியோர்மனம்பொறுப்பார்
மறுரூபங்கொண்டல்லோ மண்சுமக்கப்போனதினால்
ஆளடிமையென்றுசொல்லி அடித்தான்பிரம்பாலே

ஐயனென்றுதானறிந்தா லடிபணிந்துதொழுதிடுவான்
ஆதரிக்கவேண்டுமென்றாள் அங்கயற்கண்மீனாட்சி
அவ்வசனங்கேட்டு அழகுசொக்கரேதுசொல்வார்
என்னையடித்தஅடி எல்லோர்க்கும்பட்டதுகாண்
உலகத்துக்கெல்லாம் உரைத்தேபிரம்படிதான்
சித்தர்கள்முனிவர்கள் தேவருக்கும்பட்டதுவே
வானரிஷிகளுக்கும் மாயனுக்கும்பட்டதுவே
சப்தரிஷிகளும் தபோதனர்க்கும்பட்டதுவே
சகலஜீவஜெந்துக்கும் தழும்புவந்துநேர்ந்ததுவே
கன்னியர்கள்கெர்ப்பம் கருவுக்கும்பட்டதுவே
இந்தப்பழிபாவம் எப்படிதொலையுமடி
இப்பழிக்குபெண்ணே மைந்தன்வரம்நான்கொடுக்கேன்
கருவுகரிக்கவேதான் கன்னியரேநான்கொடுக்கேன்
அந்தப்பழிபாவம் அத்தோடேதொலையுமடி
என்றுமிவருரைக்க ஏந்திழையும்பேசாமல்
மௌனமாய்த்தானிருந்தாள் மதுரைமீனாட்சியரும்
இப்படிசிலகாலம் இருக்குமந்தவேளையிலே
பாண்டியநாடு பரிசனங்களெல்லவரும்
அரசனதுநாடு அருமைமழையில்லாமல்
தத்தளித்துப்போகிறதே தனிமதுரைபூமியெல்லாம்
அரனுரைத்தண்டிக்க அக்கொலைப்பாதகனும்
கம்முதேநாட்டிற் கதறுதேபூமியெல்லாம்
மைந்தருமில்லை மகுடமுடியரசனுக்கு
பிள்ளைகளுமில்லை பேரானமன்னனுக்கு
அப்படியாய்துன்பம் அரசனும்பட்டிருந்தான்
ஆரையும்வணங்காத அந்தசித்ராங்கதனும்
சிரித்தேனெனச்சொல்லி பெருந்தவரைபோயடுத்தான்
தெய்வமேகதியென்று தேசத்தையாண்டிருந்தான்
சொக்கரேகதியென்று தோத்திரங்கள்செய்திருந்தேன்
பன்னிரண்டுதன் வருடம் பாரில்மழையில்லாமல்
துன்பங்களுடனேயல்லோ துரைத்தனமும்பண்ணிவர

சொக்கரும்மீனாட்சியும் கானகமடைந்தது.

மதுரையிலேவாழும் மகாதேவர்சொக்கலிங்கம்
அங்கயற்கண்மீனாட்சி அம்மனும்சொக்கருமாய்
இருவருமப்போது ஏகாந்தவேளையிலே
தேவியரைப்பார்த்து சுவாமியவரேதுசொல்வார்
பெண்ணேமீனாட்சி பொற்கொடியேஆலயத்தில்
தணலாயெறிகிறது தனிக்காற்றடியாமல்
ஒடுக்கங்களாகிறது உன்மதுரைப்பட்டணத்தில்
காற்றுகுளிர்ந்தடிக்கக் கனிவிருட்சங்கிடையாது

ஒட்டக்கத்திமேவண்டி உலாவியேவந்திடுவோம்
எருத்துவண்டிக்குதிரை காணகத்திற்போய்வரலாம்
மதுரையைச்சுற்றி வருவோம்நாம்பெண்மயிலே
வாருமென்றுசொக்கர் மயிலினைத்தானழைக்க
அப்படியேநல்லதென்று அங்கயற்கண்மீனாட்சி
சம்மதிப்பட்டு ரதியும்புருடனுமாய்
இடபத்தின்மேலேறி ஈஸ்வரனுமீஸ்வரியும்
மருதின்மேலேறி யிருவரும்வெளியானார்
ஆலயத்தைவிட்டு இருவரும்வெளியானார்
மதுரையைவிட்டு மகாதேவர்வெளியானார்
மதுரையைச்சுற்றி வந்தார்களிருவருமாய்
பட்டணங்கள்சுற்றி பார்த்துவருகையிலே
அழகுமறைந்தது அழகானதென்மதுரை
அண்டவொருநிழலும் ஆதரிக்கக்கிடையாது
தோட்டங்கிடையாது துறவுகள்தூர்ந்திருக்கும்
நிற்கநிழலுமில்லை நிலத்திற்றரிப்போமென்றால்
காணசமகாலத்தையும் கட்டையாயுலர்ந்திருக்கும்
செடிகள்கிடையாது செட்டுகள்கிடையாது
தழைகள்கிடையாது சற்றேயிருப்போமென்றால்
வெப்பமுறைக்கிறது வெண்கானல்வீசுமாம்
வேர்வைபொழிகிறது விமலருக்கும்பார்வதிக்கும்
அண்டமுடிகூடவில்லை அக்கினிவாடையது
அக்கினிவாடையது அனல்கொண்டுவீசுதையா
நடுக்காட்டில்வந்தவர்கள் நாதருந்தேவியுமாய்
அந்தநடுக்காட்டில் அலைந்துவருகையிலே
அங்கேயொருவில்வமாம் அடர்ந்துதழைத்திருக்கும்
பசுமையாகத்தழைத்துப் படர்ந்துநெருங்கிருக்கும்
சந்துகள்தெரியாமல் தழைத்திருக்கும்வில்வமரம்
என்னேரமுஞ்சலங்கள் இலையில்படர்ந்திருக்கும்
காய்த்துப்பழுத்துக் கனிகளுதிர்ந்திருக்கும்
பூத்துப்பழுத்துப் புஷ்பங்கள்பரிமளிக்கும்
தென்னலதுவீசும் தேகங்குளிர்ந்திருக்கும்
அந்தமரமொன்று அவ்விடத்திற்றழைத்திருக்கும்
அவ்விடத்தில்வந்தார்கள் ஆறுமுகையவரும்
அந்தவநிசயத்தை அன்புடனேகண்டுவிட்டார்
சோபந்தெளிந்து தேகமுந்தான்குளிர்ந்து
இந்தநடுக்காட்டி லிதுதழைத்தவநிசயத்தை
கண்டறிவோமென்று கடுகியேயிறங்கி
எருதைநிழலில்விட்டு இறங்கினார்மரத்தருகில்
ஆயாசந்தீர்வதற்கு அவ்விடத்திலுட்கார்ந்தார்
சவுக்கியமானார்கள் தங்கள்சரீரத்தில்

இருவருமுட்கார்ந்து ஏகாந்தமாயிருக்க
பட்டம்பகலிலே பாங்கானவேளையிலே

நீர்காக்கையைக்கண்டது.

அங்கேயொருநீர்க்காகம் அலைகடலில்போய்முழுகி
கடலில்முழுகியே கடல்ஜலந்தனைத்தான்வாரி
செப்படையில்நிறைய சலங்கொண்டுதான்வந்து
கடல்நிரைக்கையிலே காகமதுகொண்டுவந்து
வில்வமரத்தின்மேல் மேலாகத்தான்பறந்து
மேலிருந்துவூசிற்றும் மேன்மையுள்ளகாகமது
மழைமாரிபோலே வருஷிக்குங்காகமது
வருஷித்தசலங்கள் மகாதேவர்மேல்படவே
குளிர்ந்ததுதேகங் கொடிமதுரைசொக்கருக்கு
அங்கயற்கண்ணம்மனுக்கு அங்கங்குளிர்ந்ததுகாண்
எந்தஜலமென்று ஏறெடுத்துப்பார்த்தார்கள்
நீர்க்காகஞ்சலம்பொழிந்து நின்றுபறந்ததுவே
அந்தநல்லகாகத்தை ஆண்டவனார்தான்பார்த்து
பார்த்தாயோபெண்ணேநீ பட்சியிடதன்னறிவு
கண்டாயோபெண்ணேநீ காகத்தின்தன்னறிவு
இந்தமரத்துக்கு இக்காகம்நீர்தெளிக்க
எதனால்தெளிக்கிறது இதையறியவேண்டுமென்று
காகத்தைதான்கேட்டு காரியமறிவோமென்றார்
அப்படியேவழையுங்கள் அறிவுள்ளகாகமதை
என்றுஉமையுரைக்க எல்லாருமப்போது
ஆகாயத்திற்றான்பார்த்து அந்தநீர்க்காகமதை
கைகாட்டித்தானழைத்தார் கைலாசநாதருந்தான்
கண்டதுகாகம் கைலாசநாதரென்று
அஞ்சிப்பயந்து ஆகாயம்விட்டிறங்கி
தாய்தகப்பன்வந்தாரோ தற்கார்க்கநம்மையென்று
சீக்கிரமாய்தானிறங்கி திட்டெனவேயோடிவந்து
முக்கால்வலம்வந்து முடிவணங்கிதெண்டனிட்டு
நாற்கால்வலம்வந்து நமஸ்கரித்துதெண்டனிட
தெண்டனிட்டபட்சியை சிவனாருந்தான்வாழ்த்தி
இந்தமரத்துக்கு இறைப்பதென்னநீசலத்தை
இந்தமரத்திலே இத்தனைவருத்தமென்ன
வருத்தத்துடனேநீ வந்துதெளிப்பதென்ன
சொல்லுமென்றுகேட்டார்கள் சொக்கரும்அம்மனுமாய்
கண்டதுகாகம் கனக்கமிகப்பயந்து
சொல்கிறதுகாகஞ் சொக்கரவாகேள்விபட
தங்கநிக்கேயுகந்த வில்வமரமென்றுசொல்லி
விமலருக்குகந்த வில்வமரமென்றுசொல்லி

அதனாலுடல்நீரை அள்ளிவந்துயான் தெளித்தேன்
நாடோறும்யான் தெளித்தேன் நாதனுக்கேற்றதென்று
இதுகாண்டெய்வத்துக்கு ஈஸ்வரனார் கட்டளைதான்
அவ்வார்த்தைதனைக் கேட்டு அரனாரும்அம்மனுந்தான்
பூரித்திருந்தாரும் புத்தியுள்ள காகமென்று
இணங்கமாய்ப்பூரித்து அறிவுள்ள காகமென்று
எட்டித்தழுவி காகத்தை தானோக்கி
நாதனுக்கேற்றதொரு இந்தமரமென்றறிந்து
களையாகவந்தவர்க்கு களையாற்றவைத்தாயே
இந்தசகாயமதை எங்களுக்குச்செய்தாயே

சொக்கர் நீர்காக்கைக்கு வரங்கொடுத்தது.

உனக்கொருசகாயம் உதவிசெய்வேனென்றுசொல்லி
என்னவரம்வேண்டும் இன்பமுடனுந்தனுக்கு
கேட்டவரம்தருவேனென்றார் கிருபைமிகக்கூர்ந்து
அப்போதுகாகந்தான் அரனாரைச்சேவித்து
சொல்லுகிறதுகாகந் சொக்கருக்குதெண்டனிட்டு
கைலாசநாதரே கண்மூன்றுடையவரே
என்மனதிலிருக்கின்ற எண்ணத்தைசொல்லுகிறேன்
கன்னிப்பெண்ணாகி கனமதுரைபாண்டியனை
சேரவேண்டுமென்று சிந்தையில்நினைந்திருந்து
என்னுடையபாலனுக்கு இசைந்துபட்டந்தரவேணும்
இந்தவரமெனக்கு அருள்புரியவேண்டுமையா,
சாகமதுசொல்வதைக் கண்டபோசொக்கலிங்கம்
அதிலொருவார்த்தை அன்பானகாகமேகேள்
கன்னிப்பெண்ணாகி கனமதுரைபோனால்
பன்னினைச்சேர்ந்தாலும் மலடியாய்ப்போய்விடுவாய்
உனைப்பெண்ணாக்கி ஒருமாதங்கெர்ப்பமதாய்
அனுப்பிவைப்பேனுன்னை அரசனதுமதுரையிலே
ஆரென்றுகேட்பான் அணிமதுரைபாண்டியனும்
அருமற்றபாவிநான் அண்டவந்தேனுமையென்று
சொல்வாயேயாமாகில் தோழியாய்வைத்துக்கொள்வான்
தாதியாயிருந்தாயானால் கையிலேவந்தணைத்தான்
அணைந்தாசைதீர்ந்திடுவாய் அறிவையுள்ள பாலனுக்கு
பட்டந்தரிப்பான் பட்டணத்திலொருபங்கு
அந்தவரமளித்தேன் அப்படியேகடவுமென்றார்
சம்மதித்துக்காகந் சந்தோஷங்கொண்டதுவே
காகத்தைபெண்ணாக்கி கருப்பமுண்டாச்சு
நீர்காக்கையென்று நேரிழைக்குபேர்கொடுத்து
கடவுமென்றுபேர்கொடுத்து நாரதரவர்போய்விட்டார்

நீர்காக்கை பெண்ணாகி பாண்டியனையடுத்தது.

அப்போது நீர்காக்கை யரிவையெந்தப்பெண்ணணங்கு
மதுரைநகர்தேடி வந்தாளே பெண்மயிலாள்
பாண்டியனிடத்தில் டக்குலமாய்வந்துநின்றாள்
அப்போதுபாண்டியன் அரிவையரைத்தான்பார்த்து
சுந்தரமும்வடிவுமுள்ள தோகையரைத்தான்பார்த்து
ஆரடிபெண்ணே நீ யறியவுரையுமென்றார்
அவ்வசனங்கேட்டு ஆரணங்கேதுசொல்வாள்
ஆருமில்லைபரதேசிஅண்டிவந்தேனும்மையென்றால்
ஒருமாதங்கெர்ப்பம் உத்தமியாளெந்தனுக்கு
ஆருமற்றனாதனைநீர் ஆதரிப்பாயெந்தனுக்கு
அவ்வசனங்கேட்டு அந்தமுள்ளபாண்டியனும்
கெர்ப்பமானமங்கை கிளிமொழிபாலாகையினால்
காப்பாற்றவேண்டுமென்றால் கன்னியரேயஞ்சாதே
அப்படியேசெய்வேனென் றரிவையரைகூட்டிப்போய்
தன்னுடையதேவியண்டை தாதியாய்வைத்துவிட்டான்
சகலவிசாரணைக்குந் தாதியாய்த்தானிருந்தாள்
அழகுந்திருமேனி அலங்காரமாயிருப்பாள்
புத்தியுள்ளகுணவதியாய் பூஷணலங்கிருதையாய்
பாண்டியன்தேவிக்கு பட்சமாய்த்தானிருந்தாள்
சுந்தரமுமெவ்வர்ணம் சொல்லத்தொலையாது
வாலிபமாய்பெண்மயிலும் மன்னவனார்தேவியண்டை
அதிகாரமும்பெற்று அவளிடத்திலிருக்கையிலே
வசந்தமானகாலம் வந்துமிகநேரிடவே
மன்மதவேதனையால் மன்னனந்தபாண்டியனும்
தன்னுடையதேவியாந் தையலரன்மனைக்கு
மாளிகைதேடி வரும்போதந்தவேளையிலே
வாசற்படியிலே மயில்போலதாதியவள்
பொற்பதுமைபோல பொன்னுடரமெல்லாம்
நின்றாளேநீர்காக்கை நேரிழையைத்தான்பார்த்து
அதிகமயல்கொண்டானே அந்தமுள்ளசக்கிரிமேல்
அவளுமிவர்பேரில் ஆசைகொண்டுநின்றாளோ
ஒருவர்க்கொருவர் உடன்பட்டிருவருமாய்
ஆசையுடன்சேர்வதற்கு அரிவையரைத்தானழைத்தார்
அதற்காகநீர்காக்கை அரிவையருஞ்சம்மதித்து
என்வயிற்றிலேபிறக்கும் இனிதானமைந்தனுக்கு
பட்டங்கொடுப்பீரோ பாண்டியரேயென்றுநும்
நாலிலொருபங்கு நடத்துவேன்மங்கையரே
அப்படிக்குசம்மதித்தார் அரிவையிடமாது
ஆருமறியாமல் அங்கொருவர்காணாமல்

கூடியணைத்தான் கோலவிழிமாதரசை
ஆசைகளித்தாளே அரசுகொடுத்தவாரத்திலே
சார்த்துடனேசேர்ந்து துரிதமுடன்பாண்டியனும்
மக்கியன்னடபாண்டியனுஞ் சீக்கிரமாய்நடந்திட்டார்
இப்படி இக்காலம் இருக்குமந்தவேளையிலே
அப்போது நீர்காக்கை அரிவையிளம்பிறையும்
மாதமுமப்பத்தாச்சு வருந்திமிகத்தவித்து

நீர்காக்கை நீன்முகனைப்பெற்றது.

பிள்ளையைப்பெற்றாள் பேருள்ளமதுரையிலே
மைந்தனைப்பெற்றாள் பேருள்ளமதுரையிலே
தாதிவயிற்றிற் சந்ததிபிறந்ததென்று
தக்கோதாவூர்கொண்டு சர்க்கரைவழங்குகிறார்
நீர்காக்கைபெற்றெடுத்த நோணபாலனுக்கு
நீன்முகனென்று நேர்த்தியாய்பேருமிட்டார்
பிள்ளையில்லாமாளிகையிற் பிள்ளைபிறந்ததென்று
பாண்டியன்தேவி பட்சமாய்த்தான்வளர்த்தாள்
பிள்ளையும்வளர்ந்தது பேரானமாளிகையில்
தாதியின்பிள்ளையென்று சதங்கைகொலுசமிட்டார்
காப்புகடகமிட்டு ஆபரணந்தான்பூட்டி
வயதுமைந்தாக வளர்ந்துவரும்நாளையிலே
ஐந்துவயதாகி அமர்த்தினார்பள்ளியிலே
பன்னுதமிழ்வித்தை படிக்கவைத்தார்பள்ளியிலே
அம்புபிடிக்கறிந்தார் ஆயுதம்பிடிக்கறிந்தார்
சகலமுங்கற்று சாமர்த்தியமானபின்பு
அவனுக்குவேறே அரண்மனையமர்த்திவைத்தார்
வெள்ளாட்டிபெற்றெடுத்த வீரியனாநீன்முகனும்
அப்படியாயிருக்க அவனேதாருபாண்டியனும்
மைந்தப்பிள்ளையில்லையென்று ராஜனந்தபாண்டியனும்
சிங்காதனத்திற் செங்கோலுந்தான்பிடிக்க
பட்டணத்தையாளவதற்குப் பாலனில்லையென்றுசொல்லி
விசனத்தைக்கொண்டாரும் வேந்தனந்தபாண்டியனும்
சித்ராங்கதனுடனே சேர்ந்திருந்தபாண்டியர்கள்
ஆறுபிரம்பேர்கள் அணிதிரளம்பாண்டியர்கள்
பிள்ளைகளில்லாமற் பெருமலடாய்ப்போனோமே
ஆறுபேர்க ளிளைதுரும்பாலடுசேதும்
அவர்களுடன்கூட ஆறார்கள் தான்மலடு
பாண்டியர்களேழ்வரும் பட்டத்தாளோதான்மலடு
கொட்டாய்நிறைந்திருந்த குதிரையெல்லாந்தான்மலடு
பட்டிநிறைந்திருந்த பசுக்கள்தான்மலடு

4

பொழுது வம்மிறைக்கிறது செல்லுங்காண் மயிலே
வழிமீதே நின்று வசிகளெல்லாங்காண் மயிலே
பெருமிதமே கேட்கிற பொருளுங்காண் மயிலே
பெருமிகாணிருக்குஞ் செல்வமுங்காண் மயிலே
கொல்லைக்காணிருக்கும் புன்செய்நிலங்காண் மயிலே
வாசலிலேதானிருக்கும் வாழைமரங்காண் மயிலே
அழகிலிருக்கும் அறுபட்டதுகாண் மயிலே
வாரின் பாவாடை வாழ்வுங்காண் மயிலே
மாமகனுமில்லையல்ல மணவாளனாரே
பிள்ளைகளில்லையல்ல பெருமணவாளனாரே
மைத்துனர் முகுந்தனென்று மதிக்கிறது பாண்டியர்கள்
காலைக்கே போட்டுவைப்பார் சந்திரகட்டிவைப்பார்
கடாவிருக்குமனைகளை கல்லுதல்லமெல்லாம் கொடுக்கிறார்
தவிக்குமவருமேவர்க்கு தண்ணீர்ப்பந்தல் போட்டுவைப்பார்
பசிக்குமவர்களுக்கு பாலமிர்தஞ்செய்துவைப்பார்
ஆலயங்கோட்டையும் அன்னசத்திரங்கட்டிவைப்பார்
கோவில்கட்டுவார் கோபுரங்கள் கட்டிவைப்பார்
காடுகள் கோயில்கட்டு காணிக்கையும் பரிவைப்பார்
செல்வக்கிளையுடன் செல்வமென்றுகைகொடுப்பார்
அருள்கள்கொண்டவுடன் அர்ச்சனைகள்செய்திருப்பார்
மணவாளனுக்கு சொல்லுவது கேட்டு நிற்பது விண்ணிலே
கலைக்கிற்குப்போகவென்று தங்கள் மனதிலெண்ணி

மின்முகனுக்குப்பட்டங்கட்டிப் பாண்டியர்

கலைக்கிற்குப்போனது.

வெல்லமாட்டுப் பெற்றெடுத்த வேல்வேந்தன் மின்முகனை
மதுரையைப்பாரவருக்கு மகனுக்குப்பட்டங்கட்டி
மின்முகனைத் தலைமுத்தமிட்டு முடிசூட்டிப் பட்டங்கட்டி
ஆசிகொடுத்தருளி அருளைப் பெற்றுச் செய்யவேணுமென்று
மக்களை வந்தனைகள் பெற்று வருகிறநாள் வரைக்கும்
எல்லாப் பேரும் பெண்களும் இளம்பட்டங்கட்டி வைத்தார்
ஆசிபெற்ற மண்டபங்கள் கோபுரங்கள் மேலாகும்
அவனிடம் அடைக்கலம் அரிசனமும் செய்வோமென்று
போகிறார்கள் பாண்டியரும் பொன்னரசுவைத்தாண்டு
வளநாட்டை வகுத்துப் பாண்டியர்கள்
வாரிசெடுத்தல் மாலைதானடைந்து
திருமஞ்சனக்குளத்தைச் சேர்ந்தார்கள் பாண்டியர்கள்
திருப்பாண்டியரும் மனமுடைந்திருக்கும்
தண்ணீர் தீர்த்தம் கையிலெடுத்துக்கொண்டார்
பாபவிமோசனம் பாதகமழிந்ததுவே

வாத்தியங்கொண்டுபோ பாளையமிறங்தார்கள்
பதினெண்கொண்டுபோ பூமிபறந்தார்கள்
பாளையப்பட்டிவரும் பட்ட குதிரைகளானே
ஆறுபேருடன் அந்நகர்செல்கிறது
ஏந்தநாடுமெருத்து கரிமேல்போர் தும்பிக்கையில்
தும்பிக்கைகாட்டிச் செய்கிறதுபெருந்தலை
அப்படியாகவேவந்த னேலைத்தலைப்பன்றுவிருன்
அர்ச்சனாபுரமதனில் ஆதிகம்பிலே
அணியாதத்திருவும் அம்பானைதேனயிலே
பிந்திருநாளுக்குப் புறப்பட்டார்சொக்கலிங்கர்
தேவாதிதேவருடன் தெருவத்தியலங்காரத்தே
அசகாரென்றசத்தம் அதிகடல்போல்கொட்டிவிட
கிலுகிலுவென்றசத்தம் தேவருக்குக்காதடைக்கும்
சத்தசத்தங்கேட்டு அங்கபத்தன்னை நிசொல்வார்
காண்கவாரியென்குறுவேல வன்றையகர்த்தாவே
அரகரவென்றசத்தம் அதிகடல்போற்கேட்கிறது
கிலுகிலுவென்றசத்தம் செவியடைத்துபோகுதையா
இத்தனைத்திகைத்த இறைச்சலென்ன ஆண்டவனே
என்றுதான்கேட்டவனே இன்பமாதுசொல்வார்
ஆறுபேரப்பாண்டியர்க வரியத்தலம்பன்றுசிறோர்
மதுரைநாடாளும் வரழுபாண்டியர்கள்
பதினெண்கொண்டுபோ பொருத்திதலைப்பன்றுசிறோர்
கோவிலுக்குப்போகிறார் கொம்பனையேபெண்ணழகா
இவ்வார்த்தைதான்கேட்டு சவ்வரியுமேதுசொல்வார்
தலைபன்றுடமிருந்தான் கவரியோனாம்பேர்
சித்திரதலைப்பன்றுவார் [illegible] போகப்போவர்
அம்மனுடனே அவருக்குடைக்கார்
ஆறுபேர்களருந்தவசுபார்த்தார்கள்
பற்றுப்போனதுவும் பெருங்கையாமென்றிக்கதும்
புல்றாப்போனதுவும் பழுதிபடைத்ததுவும்
யானைகலசுகிலே யருத்தவசுபன்றுவதாம்
உற்றதைப்பார்த்தாளே உத்தமியாளின்வரியும்
ஆபாபாறுமே ஆறுபேர்க்கும்
புத்திரனளித்தல்லிம் போகயோக்யமந்து
ஆறுகேள்பெண்மயிலே அரசர்செய்தகாரியமெல்லாம்
கூவிதுறைத்தார்கள் குறைபறக்காமிட்டார்
அக்காடிகூடைதனை அதிலேவிட்டவர்கள்
பட்டணைகொக்கனிலே பதனைக்கலந்தவர்கள்
பசித்தார்முகம்பாரார் பாலடைக்குபல்வாரார்
தவித்தார்முகம்பாரார் தாகங்கொடுக்கமாட்டார்

ஆண்டிபரதேசியைப்போல் அங்கொருநாள் வடிவெடுத்து
பாண்டியராசாக்கள் பருமுத்தளக்கையிலே
சிவதருமமென்று சேர்ந்துவந்துபிச்சையென்றேன்
பதரானமுத்தெடுத்துப் பாவியெனக்கிட்டார்
சிப்பிமுத்துபோட்டார்கள் தோஷியந்தபாண்டியர்கள்
பதரிட்டபாவிகட்குப் பாலன்கொடுப்பதில்லை
பிட்டுக்குமண்சுமந்தேன் பிரம்படியும்பட்டவனந்தேன்
என்னதவம்பண்ணினாலும் எதாலும்பிள்ளையில்லை
எழுபிறப்பிலேயு மிப்பிறப்புபிள்ளையில்லை
என்றதுதான்கேட்டு ஈஸ்வரியாளேதுசொல்வாள்
அப்பாவஞ்செய்தாலு மீஸ்வரனேமனமிரங்கி
புத்திரனளிக்கவேணும் புகழானபாண்டியற்கு

பாண்டியற்கு ஈஸ்வரி புத்திரவரங்கொடுத்தது.

உன்சித்தமிரங்காமற் போனாலுமீஸ்வரரே
ஒருபெண்ணாகிலுமளிப்பேன் புகழானபாண்டியற்கு
அங்கயற்கண்ணம்மையவ ளதிகமனமகிழ்ந்து
தோள்சதையைக்கிள்ளியம்மை தூரவெறிந்துவிட்டாள்
அல்லியுங்கொடியு மடர்ந்ததொருபொய்கையிலே
செந்தாமரைவெண்டாமரை சேர்ந்ததொருபொய்கையிலே
வானவருமிந்திரரும் வந்திருக்கும்பொய்கையிலே
சந்திரருஞ்சூரியரும் சந்திபண்ணும்பொய்கையிலே
தாமரைப்பொய்கையிலே தண்ணீர்தடாகத்தில்
அல்லியிலைமேலே வந்துவிழுந்ததுகாண்
கையாகிக்காலாகிக் கண்ணுமுகவுருவாகி
குவ்வாகுவ்வாவென்றுசொல்லி குழந்தையழுகிறது
சந்திரனைப்போலத் தளும்புதுகாண்பொய்கையிலே
சூரியனைப்போலத் துலங்குகிறதக்குழந்தை
மேகத்தாமின்னலைப்போல் மின்னுகிறதக்குழந்தை
குன்றுமேற்சந்திரனுங் குதித்தெழுந்தபாவனைபோல்
இருண்டிருந்தசோலையிலே திரண்டெழுந்தசூரியர்போல்
இப்படி பாகவேதா னிருக்கிறவேளையிலே
அங்கயற்கண்ணம்மையவ ளதிகமனமகிழ்ந்து
குழந்தைதனக்கேற்றபடி குலாவிவரங்கொடுத்தாள்
ஏழாம்பிராயந்தனில் இளவரசுபட்டமென்று
பன்னிரண்டாம்பிராயத்திற் பார்த்தனுக்குமாலையிட்டு
எல்லையரசாளுகைசந்துவரங்கொடுத்தாள்
அம் மன்கழுத்தினி லணிந்தபதக்கமுடன்
சுவாமிகழுத்திற் றரித்தபதக்கமுடனே
வாங்கிதரித்தாளே வரிசையுள்ளகுழந்தைக்கு

அல்லியென்றுபேருமிட்டு அங்கையற்கண்ணம்மாள்
பாண்டியரைக்காணழைத்து பார்வதியேதுசொல்வாள்
ஆறுபேர்களே அணிதிரளாம்பாண்டியரே
அல்லியின்மேலே அழகுமைந்தனிருக்கிறது
அருமையதுபெண்ணுமது ஆறுபேரவருக்கும்
உடன்பிறப்பாய்வாருமென்று ஈஸ்வரியுந்தானுரைத்து
அப்போதுபாண்டியரும் அரனாரைத்தான்வணங்கி
நவகிலைகலைந்து தாமெழுந்தார்பாண்டியரும்
அல்லியின்மேலே அமர்ந்திருந்தகுழந்தையைத்தான்
தாங்கள்பெற்றதுபோலே தழுவியெடுத்தார்கள்
வாரியெடுத்தார்கள் மார்போடணைத்தார்கள்
மதுரைநகர்நோக்கி வருகிறார்பாண்டியர்கள்
ஆளோடவிட்டார்கள் அறிக்கைவிட்டார்பாண்டியர்கள்
மைந்தனைப்பேருபெற்று வருகிறார்பாண்டியர்கள்
புத்திரனைப்பேருபெற்று புண்ணியர்கள்வாறார்கள்
நீன்முகராசனுக்கு நீதியுடன்சொல்லுமென்று
ஆளனுடன்சொல்லியே சேதிவிட்டார்பாண்டியர்கள்
ஒற்றனொருவனுந்தா னுத்தமர்க்கேசேதிசொன்னான்
கேட்டநீன்முகனுங் கெர்வமதிகமாகி
ஆடாதாடுவரோ அலங்காரமல்லர்களே
பாண்டியராசனுடன் பாங்கானவார்த்தைசொல்லும்
நீன்முகராசனிவ னிலைகொண்டராச்சியத்தை
நீங்கள்தரித்தாலைத்த நின்னையப்பட்டமது
பட்டங்குறைவுமில்லை பாருலகம்வருவதில்லை
மதுரைக்குவந்தாலே வல்லுயிரைவாங்கிடுவான்

நீன்முகராசனுக்குப் பாண்டியர்கள் பகுதிகட்ட
நிர்மானித்தது.

நீங்களெங்கேயிருந்தாலும் எங்களுக்குப்பகுதிகட்டி
வருஷந்துக்கொருதரம் வரப்பனுப்பும்பாற்குடங்கள்
ஆறுயிரம்பாற்குடங்க ளனுப்பவேண்டுமெந்தனுக்கு
அனுப்பாமற்போனக்கா லாக்கினைகள்செய்திடுவேன்
நீன்முகராஜன் நிச்சயமாய்ச்சொன்னனென்று
பாண்டியராஜனுக்குப் பாங்குடனேசொல்லுமென்றான்
ஒற்றனொருவனுமே யோடினான்ராஜரண்டை
ஆறுபேர்பாண்டியர்களையருக்கேகண்டவிட்டு
நீன்முகன்சொன்னதொரு சேதியைச்சொல்லலுற்றான்
உங்களால்வந்தவினைக் காரென்னசெய்வார்கள்
அவனைவெறுக்கவென்றா லதிகமானபாவம்வரும்
வடமதுரைபட்டணத்தில் வந்துகுடித்தனமாய்

உழவுகுடித்தனமாய் உத்தமர்கள்வாசம்பண்ணுர்
வருஷத்துக்கொருதரந்தான் வரவிடுவார்பாற்குடங்கள்
இந்தவிதமாகவே யிருந்தார்கள்பாண்டியர்கள்
சொக்கருளாலே சுந்தரியாளல்லியற்கு
மாணிக்கத்தொட்டிலிட்டு வளர்த்தார்கள்பாண்டியர்கள்
ஒருமாதமிருமாத மொன்றிரண்டுமூன்றுச்சு
சிற்றாடைகட்டுவாளாஞ் சிறுகம்பிசீக்கவிடுவாள்
பாவாடைகட்டுவாளாம் பந்துவிளையாடுவாளாம்
அம்மானைபந்துகளுங் அழகானபுள்ளடிப்பாள்
ஐந்தாம்வருஷத்தி லழகானபள்ளிவைத்தார்
எழுபிராயமட்டும் இளங்கொடியாள்தான்படித்தாள்
ஆறுசாஸ்திரநான்குவேத மறுபத்துநாற்கலைக்கியானம்
அம்புவித்தைவில்வித்தை ஆஸ்தானவித்தைதயெல்லாம்
கணலாவுபந்தியங்கள் கற்றுக்கொண்டாளல்லியரும்
பள்ளியின்கணேறி பகற்படமொப்புவித்து
பாலமிர்தமுண்ணுகைக்குப் பதுமினியாள்வருகலுற்றாள்
அப்போதுமீன்முகன்று னுறுப்பவரன்னடை
ஆயிரந்தூதுவரை அனுப்பினுன்மீன்முகனும்
ஆயிரங்குடத்தி லப்பட்டமானபாலாம்
வாங்கிவரச்சொல்லியே வரவிட்டான்தூதுவரை
மலைகளுடன்தலைதொடுத்து மல்லர்வெளிப்பட்டார்கள்
காற்றிலும்வேகமாக கடுந்தூதர்வாறுர்கள்
தங்கக்குடமெடுத்துத் தானவர்தாமல்லரெல்லாம்
பாண்டியராசனண்டை பாங்குடனேவந்தார்கள்
பசுநிகளைக்கட்டுமென்று பாற்குடங்கள்முன்னேவைத்தார்
அரண்மனைக்குப்போகவேணும் மனுப்புங்கள்பாலையெல்லாம்
இவ்வார்த்தைதான்கேட்டு அஞ்சிப்பயந்தெழுந்து
காராவின்பசும்பாலை கறந்துமேபாண்டியர்கள்
ஆறுபிரங்குடத்தி லன்பாய்நிரப்பிவைத்து
மஞ்சள்துணிமேற்கட்டி மாலைகளைச்சுற்றிவைத்தார்
பாற்குடங்கள்தனையவர் பார்த்திருத்துவைத்தார்கள்
வரிசைவரிசையாக வைத்தார்கள்பாற்குடத்தை
பதினுயிரந்தூதருந்தம் பாலமுதுபோசனங்கள்
போசனஞ்சமைக்கலுற்ருர் போனபாண்டியர்கள்
அரிப்பதும்பொரிப்பதும் அடிசில்சமைப்பதும்
இந்தவிதமாகயிருக்கின்றவேளையிலே
அந்தச்சமயந்தி லல்லியம்மாள்வந்துவிட்டாள்
பதினுயிரந்தூதுவரைப் பாற்குடங்கள்பார்த்தானே
அரிப்பதுவும்பொரிப்பதுவும் அடிசில்சமைப்பதுவும்

[illegible]தயிற்ச்செண்டு எதுசொல்வாளல்லியம்மா
ஒருவருக்குண்டோ இல்லை உச்சிதக்கட்டங்கள்
[illegible]று மிசயமா வெங்களுக்குத்தோற்றுது
[illegible]கவுறக்குறையா வெங்கிருந்தவர்கள்
ஒருவருக்குண்டோ இல்லை உச்சிதமானவரை
[illegible]வார்த்தைதான்கேட்டு எதுசொல்வார் பாண்டியர்கள்
அவ்வார்த்தையுந்தனக்கே வைடுதன்னைப்போடியம்மா
பலமுறையுண்டேயும் பார்க்கப்போவென்றார்
அவ்வார்த்தைதான்கேட்டு அல்லியனைதுகொத்து
[illegible]சொல்லாமற்போனால் சிராணபாண்டியரே
நான்வல்லமைகாணோ கல்லோடேமோதிடுவேன்
கொடுமையைத்திடுவேன் செல்வழிந்துபோய்விடுவேன்
மண்பெடுத்திடுவேன் வைகுந்தஞ்சேர்ந்திடுவேன்
அவ்வார்த்தைதான்கேட்டு ஆறுபிரவர்சொல்வார்
ஆறுபிரவருமே ஆண்மலடாய்பெண்மலடாய்
மைந்தனைவேண்டியல்லோ மகாதவஞ்செய்தோமம்மா
கண்ணைதவம்பண்ணினாறு மேதானும்பிள்ளையில்லை
மகாமுனிவர்தவசுபண்ணும் மலையைத்தான்தேடி-
நாங்கள்தவத்திற்கு நகர்விட்டுப்போவதற்கு
வெள்ளாட்டிபெற்றதொரு வீராணன்முகனை
பட்டத்திருத்திவைத்து பாரத்தவசுபண்ணும்
இருவதுபாலதத்திற் சேர்ந்ததவம்பண்ணுமம்மா
சொக்கநாதர்மேலே சிவகாமிதாயாலே
அல்லியிதேமேலே ஆணைகட்பெற்றெடுத்தோம்
வயிற்றிற்பிறந்ததில்லை வன்மைகொடுமைசெய்ததில்லை
குடலிற்பிறந்ததல்ல குலக்கொடுமைசெய்ததில்லை
ஒதுகின்றதண்ணியிலே யுள்ளேமணற்சேருமுண்டு
அடிக்கிறகாற்றுதனி லைகாற்றுருப்புமுண்டு
காலகாலகண்டருக்குங் கண்டத்திற்கறுப்புமுண்டு
குண்டுமணிக்காகுலுங் கொஞ்சங்கறுப்புமுண்டு
சந்திரர்க்குமாசியுண்டு சற்றேகருப்புமுண்டு
உனக்கு மயிரேகருப்பொழிய மற்றகருப்புமில்லை
பருவக்கருப்பொழிய பிசேனைகருப்புமில்லை
அல்லியிலேயேமேலே ஆணைக்கேபிறந்தாய்
வரத்தினற்பேறுபெற்று வந்தாயம்மாதென்மதுரை
வெள்ளாட்டிபெற்றெடுத்த வீராணன்முகனும்
ஊரில்வைரவொட்டாம லோட்டிவிட்டானப்புறத்தே
உழவுகுடியாக ஊரிற்பிழையுமென்றான்
ஆறுபிரம்பாண்டியர்க்கு ஆறுபிரம்பாற்குடமும்

வருஷத்திற்கொருதரந்தான் வாங்குகிறான்பகுதியவன்
உன்னைப்பெறவேண்டி ஊரிழந்தோம்பதியிழந்தோம்
சீமையிழந்தோமம்மா துரைத்தனமுந்தானிழந்தோம்
ஏழுவருஷமம்மா இப்படியனுப்புகிறோம்
இந்தவருஷமுமே இங்குவந்தார்மல்லரவர்
பாற்குடம்நிறப்பிவைத்தோம் பாலமிர்தஞ்செய்கிறார்கள்
நீ-பாலமிர்தமுண்டலவே பள்ளிக்குப்போமென்றார்

அல்லியம்மாள் மல்லர்களை அவமானஞ்செய்தனுப்பியது.

அவ்வார்த்தைதான்கேட்டு அல்லிமிககோபமதாய்
எட்டிப்பழம்போலே இருகண்சிவந்தாளே
கோவைப்பழம்போலே கூரியகண்சிவந்து
வெள்ளாட்டிபையலுக்கு வீரியங்களுமுண்டாமோ
எருதுபசுவாமோ இளைத்தபசுவுமுண்டோ
உயரப்பார்த்தாலும் ஊர்க்குருவிபருந்தாமோ
கொசுவும்பருந்தாமோ கூடப்பறக்குமோதான்
விரலேவுரலானால் உரலென்னசொல்லுமையா
வெள்ளாட்டிபையலைத்தான் வெட்டித்தலைதள்ளாமல்
பாண்டியராசர்களே பாராளவைத்தீர்களே
உங்களைப்போல்ராசாக்கள் உலகத்தில்காணேனென்
என்றுமிகக்கோபமுடனெழுந்தாளேயல்லியம்மாள்
எழுந்திருந்தஅல்லியம்மாள் இயலானபாற்குடத்தை
இடதுகால்தன்னாலே எட்டியுதைத்தாளே
ஆறுயிரம்பாற்குடத்தை அகங்கொண்டுதடிவிட்டாள்
ஆரடாமல்லர்களே அழையும்பிடாரனைத்தான்
ஓடியழைத்துமே ஒருகொடியில்வாருமென்றாள்
அங்கிருக்கும்மல்லர்கள் அதிதுரிதமாயோடி
பாம்புப்பிடாரனைப் பரிந்தேயழைத்துவந்தார்
வாழ்வரசியல்லியற்கு வந்துதெண்டம்பண்ணினார்கள்
எம்மையழைத்ததற்கு ஏதுகருமமென்றார்
காட்டுக்குப்போய்நீங்கள் கண்ணிபுத்துமருந்துவைத்து
கருநாகஞ்செந்நாகங் காலக்காட்டிவிஷங்களுடன்
மண்ணுளிதாசிரியு மலையேதிவிரியனுந்தான்
ஊதிவிருட்டிபாம்பு முயர்வானநாகங்களும்
நீக்கத்திருட்டிகளும் கீறியுள்ளபாம்புகளும்
வண்ணவண்ணப்பாம்புகளும் வகையாகத்தான்பிடித்து
ஓட்டநடையுமாக ஒருகொடியில்வாருமென்றாள்
அவ்வார்த்தைதான்கேட்டு அந்தப்பிடாரரெல்லாம்
ஓட்டம்நடையுமாக ஓடினார்கானகத்தில்
காட்டுக்குப்போனார்கள் கண்ணிபுத்துமருந்துவைத்தார்

வன்னவன்னப்பாம்புகளை வரிசையுடன்பிடித்தார்
கொடிகளாகிய பாம்பை பிடித்தார்கள்பிடாரரெல்லாம்
ஏற்றிசுமந்தாண்டி கடுகியோடிவந்தார்
அல்லியரசாணி ஆரணங்குமுன்புவந்தார்
பெட்டியிற்பாம்பையெல்லாம்பொற்கொடியாள்முன்னேவைத்தார்
அல்லிப்பெருமாளும் ஆரணங்கேதுரைப்பாள்
பாற்குடந்தன்னிலே பாம்பையடையுமென்றாள்
பத்துசவர்ணச்சேலையினாற் பானைகள்வாய்கட்டுமென்றாள்
ஆறாயிரங்குடத்தி லடையுமென்றாள்பாம்பையெல்லாம்
பத்துசவர்ணச்சீலைகட்டி பார்தீர்த்துவைத்தார்கள்
அல்லிப்பெருமாளு மாரணங்கேதுரைப்பாள்
அம்பட்டரைத்தேடி அழையுமென்றாளல்லியரும்
ஓடியழைத்தல்லவோ ஓட்டம்நடையாகவந்தார்
ஆறாயிரந்துலுவரை அழகுமொட்டைசெய்யுமென்றாள்
தாடிசிரைத்தவரை தலைபோடிபண்ணுமென்றாள்
மீசைசிரையுமென்றாள் முன்போடிபண்ணுமென்றாள்
கரும்புள்ளிசெம்புள்ளியுங் கலந்தழகாய்குத்துமென்றாள்
அல்லியின்சொற்படிக்கே அழகுமொட்டையிட்டார்கள்
மீசைதாடிசிரைத்து முகமனைத்தும்பொட்டுமிட்டார்
ஆறாயிரந்துலுவரே அன்பானவார்த்தைகேளும்
தென்முகராசனுக்கும் பட்சமுள்ள அல்லியம்மாள்
இந்தவரிசைகளை யனுப்பினளென்றுசொல்லும்
கொண்டைக்குத்தூண்டிமுள்ளு தொப்புளுக்குவீராணி
அவன்மண்டைக்குக்கோடாலி மார்புக்குசெப்புலக்கை
கழுத்தடியிற்கத்தியவள் காமாட்சியம்மையென்று
வெட்டியறுக்கவந்த உண்மைப்பரஞ்சாதி
தலைமாட்டிற்பாம்பல்லவோ தாயாரந்தஅல்லியென்று
சொல்லுங்கள்துலுவரே துரைராசன்தென்முகற்கு
வெள்ளாட்டையனுக்கு விக்கதையைசொல்லுமென்ன
ஆறாயிரந்துலுவர்க ளக்குடமெடுத்துக்கொண்டார்
வருகிறார்மதுரையது வடமதுரைதான்விட்டு
தேனுமதுரையது தென்மதுரைவருகிறார்கள்
செந்துத்திருக்கடுத்து கேசோபிம்பிதிவிட்டு
மகாராசன்கொலுதனிலே வந்தார்கள்துலுவர்கள்
அப்போதுதென்முகனும் அப்பியங்கமாடுதற்கு
சனியெண்ணைமண்டபத்தில் தானமர்ந்தான்வாழ்மார்பன்
எண்ணெயிட்டுக்கொண்டே யிருக்கிறவேளைதனில்
பாற்குடத்தைமுன்னாலே பார்பிறக்கிவைத்தார்
வரிசைவரிசையாக வைத்தார்கள்பாற்குடத்தை
வைத்திருந்ததுலுவரெல்லாம் வரிசையாய்நின்றார்கள்

கண்ணைத்திறந்தல்லவோ கட்டழகன்பார்த்தானே
இதுவென்னவதிசயங்கள் ஆர்செய்தவன்மையிது
என்றுகாட்டிப்பழம்போலே இருவிழிகண்சிவந்தான்
கோவைப்பழம்போலே கூர்விழிகண்சிவந்தான்
உருக்கியசெம்பொன்னதில் உதிரம்போல்கண்சிவந்தா
இப்படிசெய்தவரை யெனக்கறியச்சொல்லுமென்றான்
பாய்வார்த்தனுப்பாமல் பாம்பையடைத்ததென்ன
ஆரடாதூதவரே அறியவுரையுமென்றான்

நீன்முகராசனுக்குத் தூதர்கள் சேதிசொல்லுதல்.

அவ்வார்த்தைகேட்டவர்க ளஞ்சியுரைக்கலுற்றார்
ஐயாவேகீர்கேளும் அடியேனொருவார்த்தை
ஆறுபிரம்பாண்டியர்க்கே அரியவொருமகளாம்
அல்லியிலையேலே ஆணங்குபெண்பிறந்தாள்
ஏழுபிராயமுண்டு இளங்கொடியாள்கன்னிகைக்கு
பாண்டியராசனைநாம் பகுதிபோய்கேட்டவுடன்
பகுதியுங்கட்டினார்கள் பாற்குடங்கள் தானிறைத்தார்
எங்களுக்குச்சாப்பாடு இன்பமுடனேசமைத்தார்
அவ்வளவில்லல்லிநல்லா ளானந்தவாழ்மாரி
பள்ளிக்கூடத்துக்குப் பாலமதுண்ணவந்தாள்
எங்களைக்கண்டவுட னென்றுதான்கேட்க
பாற்குடங்களேதையா பாண்டியரேசொல்லுமென
அவ்வளவிற்பாண்டியர்க ளஞ்சிப்பயந்துரைப்பார்
உமக்குப்பட்டங்கரித்துப் பாரதவம்போனதுவும்
அல்லியரைப்பெற்றதொரு அதிசயத்தைச்சொன்னார்கள்
அதுகேட்டுஅல்லியவ ளதிகமானகோபமதாய்
வெள்ளாட்டியையனுக்கு வீரியங்களுண்டாச்சோ
ஆறுபிங்குடத்தை அரைநொடியிலிரடிவிட்டாள்
பாம்பைப்பிடித்துவந்து பாற்குடத்திலேயடைத்தாள்
வாருமென்றுளம்பட்டரை மதுங்கவடியுமென்றாள்
தலைபோடிபண்ணினார்கள் தனிப்பொட்டுமிட்டார்கள்
தையலிடம்வந்தவர்கள் தலைபோடியானார்கள்
கரும்புள்ளிசெம்புள்ளி கலந்துறகாய்பொட்டுமிட்டு
தொண்டைக்குத்தாண்டிமுள்ளு தொப்புளுக்குவிராளி
மண்டைக்குக்கோடாலி மார்புக்குசெப்புலக்கை
கழுத்தடிபிடித்தியென்றாள் காமாட்சியம்மனைக்கன்றாள்
னாட்டியதுக்கவந்த உண்மைபரஞ்சோதியென்றால்
உந்தனுக்குசொல்லுமென்று உத்தமியனுப்பிவைத்தாள்
தருமதுரைமகாராசாத்தி தப்பவிட்டாளெங்களைத்தான்
பிழைத்துவந்தோங்கள் பெரியோர்கள்புண்ணியந்தான்
என்றுசொல்லக்கேட்டு எழுந்தானேநீன்முகனும்

நீன்முகராசன் அல்லியின்மேற் படையெடுத்தது.

ஓடாதூதாவீர அழையுங்கள்மந்திரியை
இக்கட்சணமே கூடாரம்போடுமென்றான்
நீன்முகவெளிகூடாரம் இயலுடனேபோடுமென்றான்
பாளையங்களுள்ளதெல்லாம் பயணமிட்டுவாருமென்ன
சல்லடைக்கொடிபோட்டு சண்டைமுரசடியுமென்றான்
தேரையலங்கரித்து சீக்கிரமாய்வாருமென்றான்
ஆறாயிரமந்திரிகளானவரும்பயணமென்றான்
யானைசேனைபரிவாரம் அடங்கலும்பயணமென்றான்
காலாள்பரிசேனை கடுகியேபயணமென்றான்
ஆறாயிரம்பாண்டியரை அதம்பண்ணிப்போட்டுவிட்டு
அல்லியெனும்பெண்ணை அரைநொடியிற்பிடித்துவந்து
தலைபோடிபண்ணியே தம்பலஞ்சுமக்கவைப்போம்
என்னைவிட்டான் தனக்கிக இயலாபரைப்பிடிவேன்
அப்போதுல்லாசமா யாடுவேனையீதெகம்
என்றுரைத்தானே இப்புள்ளின்முகனும்
கட்டிவைத்தகசையல்ல கைதனிலேவில்லுமல்ல
முகத்திலேமீசையல்ல முன்கட்டுச்சீலையல்ல
தலைமேலேபாகையல்ல தரித்ததுஆடையல்ல
என்றவனும்மாலைபகட்டி எழுந்தானேநீன்முகனும்
முகத்திலுருமாலை முகம்புகாய்த்தான்கட்டி
அம்புவில்லுந்தானெடுத்தான் அம்புறாத்தூணிமுதுகணிந்து
பாக்குகச்சைதானணிந்தான் கத்திவாளிதோளிலிட்டான்
தேரைச்சுற்றிநமஸ்கரித்து தேரின்மேலேறினானே
ஏறினான்தேர்மேலே எடுத்தார்நெடுங்குடைகள்
கனல்தனக்கெடுத்தார் கறுப்புநல்லகூடாரம்
கறுப்புநிஜான்சிகப்புநிஜான் கலந்துபறக்கிறது
அடிபடுதாரைமுரசு அனைவருங்கிடுகிடென
கோடைகாலத்திடிபோல குமுறுதேபேரிகைகள்
வெங்கலபேரிகைகள் விருதுமுழக்கமுடன்
அமரதந்தேசமகரும் அஸ்திரமாய்வருகிறார்கள்
கலிங்கர்தெலுங்கருடன் கன்னடர்களவருகிறார்கள்
துலுக்கர்மலுக்கருடன் சோனகரும்வருகிறார்கள்
வன்னியருஞ்சகுனியரும் மாட்டியரும்வருகிறார்கள்
வருகிறசனங்களானால் மட்டுமிதங்களில்லை
கொடுக்குவெறுத்ததுபோல் குடமல்லிபூத்ததுபோல்
வாணங்கவிந்ததுபோல் மல்லிகைபூத்ததுபோல்
நீன்முகன்சேனையெல்லாம் நெருங்கிவருகிறது
செந்தூளெழும்புதுவே சிவலோகங்கப்பிற்று
ருந்தூளெழும்புகுது சந்திரனைக்கப்பிற்று

கோட்டைகடந்து கோப்பனவேவருகிறார்கள
அப்போதுபாண்டியர்கள அறிந்தார்களேசேனைதன்னை
நீன்முகன்வருஞ்சேதி பிபிஷத்தில்தானறிந்தார்
ஐயோமகளேயென்று அலறலுற்றார்பாண்டியர்கள
தவம்பண்ணிப்பெற்றோமே தவக்குலைகளாச்சே
பாரதவம்நாங்களசெய்து பாலகியைப்பெற்றோமே
நீன்முகன்கையாலே நீமடியநாளாச்சே
வருகிறான்நீன்முகனும் மட்டில்லாச்சேனையுடன்
என்செய்வோமகளேயென்று பிடிவிழுந்துதானழுவார்
அல்லிப்பெருமாளும் ஆரணங்குதான்கேட்டு
அஞ்சாதேஐயமாரே அவனைபலிகொண்டிடுவேன்
மாண்டுமடிவேனென்று மனதில்நினைக்கவேண்டாம்
செத்துமடிவேனென்று சிந்தையில்வைக்கவேண்டாம்
அரைநாழிக்குளேயவன் ஆங்காரம்தானறிவேன்
என்சமர்த்தைப்பாருமென்று எழுந்தாளே அல்லியவள

அல்லியம்மாள சொக்கரையும் அம்மனையுந்
தொழுது வரம்பெற்றது.

அல்லிக்குளமுழுகி அலர்தாமரைப்பூவெடுத்து
சொக்கரதுஆலயத்தில் சுந்தரியும்போய்புகுந்து
கோயில்வலம்வந்து கும்பிட்டுதெண்டனிட்டு
கொண்டுவந்தபூமலரால் கொம்பனையும்அர்ச்சித்து
ஒருவர்-வயிற்றிற்பிறவாமல் வன்கொடுமைசெய்யாமல்
குடலிற்பிறவாமல் குலக்கொடுமைசெய்யாமல்
அல்லியிலைமேலென்னை ஆச்சியரேபிறப்பித்தாய்
பொற்றாமரையிலேதான் பிறப்பித்தயீஸ்வரியே
நீன்முகனைக்கொல்லவேணும் நீபட்டங்கட்டவேணும்
மாற்றானைக்கொல்லவேணும் வையகத்தையாளவேணும்
வாழ்த்தியேவிடைகொடம்மா மந்திரவாளீகொடம்மா
என்றுவணங்கியே இரங்கிநமஸ்கரித்தாள
மாணிக்கசொக்கலிங்கம் மனதுமிகக்களித்து
அகிலாண்டநாயகியாள அங்கையற்கண்மனமகிழ்ந்து
மதுரைமீனாட்சியுந்தான் மங்கையற்கண்மனமகிழ்ந்து
மச்சரதங்கொடுத்தாள மந்த்ரவாளைகொடுத்து
வாழ்த்தியேகைகொடுத்து வெண்ணீரைஅளளியிட்டான்
வர்னலட்சந்துரர்களை மகாதேவர்கைகொடுத்தார்
அல்லியற்குத்துணையாக அநேகம்பேர்வந்துவிட்டார்



அல்லியரசாணி நீன்முகனைச் சங்கரித்தது.

காலாளுந்சேனைகளும் கடுகியேபயணமாச்சு
தேரைச்சுற்றிதெண்டனிட்டு தேரின்மீதேறினாளே
அம்புவில்கைபிடித்து அசுபதந்திருப்பிவிட்டாள
தேவதுந்துபிமுழங்க தேன்மொழியாளவருகிறாளே
இந்திரத்தேரும் செருக்களத்தேவருகிறதே
வந்துவளைத்தாளே வல்லிடிபோலல்லியரும்
வில்வளைத்துநாரிபூட்டி வில்லைகுணத்தொனிந்தான்
மாரிசரம்பொழிந்தாள மகாசேனையுளளவர்மேல்
தொட்டாளேவில்லதனைச் சொரிந்துவிட்டாளபாணமதை
விட்டாளசரபாணம் மேனியெல்லாந்தான்மறைய
யானைசேனைபரிவாரம் அடங்கலுங்கொல்லலுற்றாள
யானைத்தலைகளெல்லாம் அபயமிட்டுக்கீழ்விழவே
ஒட்டகத்தலைகளெல்லாம் ஓலமிட்டுக்கீழ்விழவே
குதிரைமேலிருந்தவர்கள கொக்கரித்துக்கீழ்விழவே
யானைமேலிருந்தவர்கள் அபயமிட்டுக்கீழ்விழவே
ஒட்டகத்தின்மீதிருந்தோ ரோலமிட்டுக்கீழ்விழவே
குதிரைமேலிருந்தவர்கள கொக்கரித்துமண்ணைக்கவ்வ
தென்னங்காய்போலாக பார்தனிலுருளவிட்டாள
செண்டுசெண்டாவேவனதலை செருக்களத்திலுருளவிட
அறுந்ததலைகளெல்லாம் அம்மனாடுகுது
ஆலையாடுங்கரும்புபோல அரைத்துரசம்பொழிந்ததுபோல்
கரும்புக்கரணைபோலே கண்டித்தாளவேணதலை

மதம்பட்டயானைகள்தான் மடுக்கலக்கினாற்போல
குட்டிமதயானை குளங்கலக்கிவிட்டதுபோல்
கிண்ணியில்சந்தனத்தைக் கூட்டிவழித்ததுபோல்
நீன்முகன்சேனையெல்லாம் நிர்த்தூளிபண்ணலுற்றாள்
பிடாரியார்கோவிலுக்குப் பலிகொடுக்கும்பாவனைபோல்
அம்மையார்கோவிலுக்கு ஆடுவெட்டும்பாவனைபோல்
அரைநாழிக்குள்ளே அதம்பண்ணினாள்பாளயத்தை
சண்டைபண்ணமாட்டாமல் தளர்ந்தோடிப்போனார்கள்
பண்டாரமென்பாரும் பரதேசியென்பாரும்
நாமத்தைக்காண்பித்து நான்தாசனென்பாரும்
பூணூலைக்காண்பித்து பிராமணனென்பாரும்
சண்டைக்குவரவில்லையென்று தவிக்குதுபாளையங்கள்
தண்ணீர்தண்ணீரென்று தவிக்குதுபாளையங்கள்
வடுகரெல்லாம்நீளென்பார் வன்தமிழர்தண்ணீரென்பார்
துலுக்கரெல்லாம்பானியென்று சொல்லிப்புலம்புகிறார்
இவ்விதமாய்பாளயத்தை இறக்ஷித்தாளல்லியரும்
நீன்முகராசன்டை நேரிழையும்வந்தெதிர்த்தாள்
அடா நீன்முகனே அறிவுகெட்டபாதகனே
வெள்ளாட்டிப்பயலேநீ வீரியமுனக்கேண்டா
தம்பலவட்டிலேந்தும் தாசிபெற்றமகனே
மதுராம்புரியாமோ அவகாசதையாமோ
எருதும்பசுவுமாக எதிர்த்துவந்தாயாண்பிள்ளையாய்
உன்னைக்கெடுப்பேனே உனக்குமொருசேவகமோ
கொசுவும்பருந்தாமோ கூடப்பறக்குமோடா
உயரப்பறந்தாலு மூர்க்குருவிபருந்தாமோ
அணிப்பிள்ளையசக்கினாலு மான்குட்டிவீழுமோடா
ஓதிபெருத்தால்தானுமோ ஒட்டகச்சிறுயானையாமோ
உன்னை-அதம்பண்ணும்படியாக அல்லியிலேநான்பிறந்தேன்
பொற்றாமரையிலே பிறப்பித்தாளீஸ்வரியாள்
உன்-தொண்டைக்குத்தாண்டிமுள்ளொரு கொப்புளுக்குவீராணி
உன்-மார்புக்குசெப்புலக்கை மண்டைக்குக்கோடாலி
உன்-கழுத்தையறுக்கவந்த காமாட்சியம்மனேடா
உன்-ஊட்டியறுக்கவந்த வுண்மைபரஞ்சோதியடா
உன்குலதெய்வமடா ஓங்காரஅல்லியம்மாள்
அறியாமற்போனாயடா அறிவுகெட்டநாய்த்தலையா
அரைநாழிக்கொள்ளையிலே யம்புரஞ்சேர்க்கிறேன்பார்
கால்நாழிக்கொள்ளையிலே கைலாயஞ்சேர்க்கிறேன்பார்
ஒருநாழிக்கொள்ளையில் உயிர்வதைசெய்கிறேன்பார்
தின்றவப்புமாண்டதோ செத்தவப்பாழ்ச்சதோ
காலனுமயரவந்து கைகாட்டியழைத்தானோ
யமனுமயரவந்து இங்கேவாவென்றானோ

ஆனைபிறைமேலேபடா வமருக்குவந்துவிட்டாய்
என்சமர்த்துந்தேசவகமு மிப்போதறிவாய்பார்
தேரைத்திருப்பிவிட்டாள் செங்கையில்வில்லெடுத்தாள்
கேட்டநீண்முகனுஞ் செர்வமதிகரித்து
நெற்றிக்கண்ணீசுவரனார் நிமிர்ந்துவிழிபார்த்தாற்போல்
வலதுபக்கமீசையது பிட்டியைப்போலேதுடிக்க
மீசைதுடிக்கிறது முன்கோபமாகிறது
நானுன்றோபெண்ணேநீ சமர்த்தாகப்பேசுகிறாய்
உன்சவுரியந்தானிழப்பேன் தம்பளங்களேந்தவைப்பேன்
என்வல்லமையைப்பாரென்று வளைத்தானேவில்லதனை
இவ்விருவர்தேரு மிருநிலத்திற்றன்சுழல்
மாணிக்கச்சொக்கரையு மனதில்நினைத்தாளே
அங்கயற்கண்ணாயகியை ஆதிபரமேஸ்பரியை
மனதில்நினைத்தல்லோ வாங்கிவிட்டாள்பாணமது
பாண்டியன்றீன்முகனும் பதறிசரம்பொழிந்தான்
கோடானகோடிபாணம் குறித்தானேநீன்முகனும்
அல்லிப்பெருமாளு மதிகமானகோபமுடன்
ஒன்றுக்குப்பத்தாகவே ஒருநூற்றுக்காயிரமாம்
சரமேற்சரம்பொழிந்தாள் சாமர்த்தியமுள்ளகன்னி
வாய்வினதுஅஸ்திரங்கள் வருணனதுஅஸ்திரங்கள்
திவ்யநல்லஅஸ்திரங்கள் தீர்க்கமுள்ளஅஸ்திரங்கள்
சண்முகஅஸ்திரமாஞ் சந்திரனஸ்திரமாம்
மகாதேவியினஸ்திரமாம் பார்வதியஸ்திரமாம்
வச்சிரஅஸ்திரமாம் கருடநல்லஅஸ்திரமாம்
இடியினதுஅஸ்திரமாம் இந்திரனதுஅஸ்திரமாம்
இராமச்சந்திரஅஸ்திரமாம் நளச்சந்திரஅஸ்திரமாம்
சூரியஅஸ்திரமாஞ் சுப்பிரமணியர்அஸ்திரமாம்
கார்த்திகைமாதத்திற் கனத்தமழைபெய்ததுபோல்
ஐப்பசிமாதத்தன்னி லடர்ந்தமழைபெய்ததுபோல்
சோனைமழைபோலுஞ் சொரிந்தார்போற்றாவிவிட்டார்
விட்டதொருபாணமது பட்டுமிதங்களில்லை
காண்குதாமட்டுமே நல்லசண்டைபண்ணலுற்றார்
விற்பிடித்தகைகளது வெத்தசிவப்பேறிற்று
அம்பெடுத்தகைகளது அல்லிப்பூமணமாச்சு
கொல்லிப்பழம்போலே நெருங்கிற்றுகொப்பளங்கள்
உக்கிரமாக இருவர்சண்டைபண்ணினார்கள்
அப்போதுஅல்லியம்மா னம்பனையேதோத்தரித்து
இடியாஸ்திரமெடுத்து இந்திரதாபக்காணுமிட்டாள்
பார்புரளவாங்கியல்லோ தேர்புரளவிட்டுவிட்டாள்
கைகளில்நெருப்பெரிய வந்துவிழுந்ததுவே

தேருமுடைந்தனவே செம்புரவிசெத்தனவே
சட்டைதமானவச்சிரக்கடாய் தவிடுபொடியானதுவே
சல்லடைக்கண்போலே சரீரங்களதொளையாகி
பாதாதியாய்நின்றனே பார்க்கிறநீன்முகனும்
எடுத்தான்வளைதடியை எற்றினான்கேடகத்தை
கேடகமும்வாளொடித்து கெர்ச்சித்துக்கீழ்குதித்தி
லெலிகண்டபூனையைப்போ லெழும்பினாளல்லியம்மாள்
பசுகண்டபுலியதுபோல் பாய்ந்தானேநீன்முகனும்
யானைகண்டசிங்கம்போ லல்லியெழும்பினளே
கொக்குகண்டராசாளிபோற் குதித்தானேநீன்முகனும்
யானைகண்டசிலிங்கிபோல் வாராளே அல்லியம்மாள்
உன்னைவிடுவேனென்று உன்மனதிலெண்ணாதே
நீன்முகாஉன்தலையை நிமிஷத்தில்வாங்குவேன்பார்
இடசாரிவலசாரியாய் இருவருஞ்சுழலுகிறார்
சக்கரஞ்சுழல்வதுபோற் சமர்த்தர்சுழலுகிறார்
வண்டுதும்பிபோலாக வட்டமிட்டகருடனைப்போல்
முன்கந்துபாய்ந்தலவோ முதுகின்மேல்வெட்டுவாளாம்
தட்டியுதறிநிற்பான் தாக்குவானல்லியரை
எமனுமியமனைப்போ லிந்திரனுமிந்திரனும்
மலையும்மலையோடு வந்தெதிர்த்தபாவனைபோல்
புலியும்புலியுடனே பதுங்கியெதிர்த்ததுபோல்
நான்குநாழிகைமட்டும் நல்லசண்டைபண்ணினார்கள்
பொற்றுமலர்தனிலே பிறந்தெடுத்தஅல்லியரும்
ஆலவாய்சொக்கரையு மம்மனையுந்தானினைந்து
முன்கந்துபின்கந்து முப்பத்திரண்டுகந்து
பக்கவளையாகவந்து பாய்ச்சலுடனெழும்பி
வீசினாளவாளாலே வெட்டிரண்டுதுண்டாக
கரும்புக்கானையைபோற் கண்டித்துக்கீழ்விழுந்தான்
ஏறினாளேதேர்மேலே யெடுத்தார்பெருங்குடைகள
நீன்முகன்விழுந்தானென்று நிலிசங்குதான்தொனித்தாள
தேரைத்திருப்பிவந்தாள தேன்மொழியாளல்லியம்மாள
நீன்முகன்மார்மீதில் நீலிரதமோட்டினளே
செயங்களசெயங்களென்று செயபேரியடித்துவந்தாள

அல்லியம்மாள் மதுரைக்குவந்து பட்டம்
கட்டிக்கொண்டது.

எழுபதுசேனாபதிகளெல்லவரும்மோடிவந்தார்
தப்பிப்பிழைத்தவர்கள சகலசனங்களெல்லாம்
அல்லிப்பெருமாட்கு அடிபணிந்துதெண்டனிட்டார்
அடைக்கலமாச்சியென்று அடிபணிந்துதெண்டனிட்டார்
தேவதுந்துமிமுழங்கத் தேவர்பூமாரிபெய்ய

ஆறுபேரவரொன்று மையன்மார்தாமறிந்து
சந்தோஷப்பட்டார்கள் தார்வேந்தரோடிவந்து
பசன்தன்னைப்பார்த்தலவே மகிழ்ந்தார்கள்பாண்டியர்கள்
மதுரைநகருவனைத்தும் மகுடதோரணங்கட்டுமென்றார்
அரண்மனைக்குள்ளே அலங்கரித்தார்பட்டணத்தை
எங்குமலங்கரித்து எத்திசையுந்நீர்தெளித்து
வாழைமரங்கமுகுமரம் வாசலெல்லாநட்டார்கள்
சேனைகள்சூழ்ந்துவர செயபேரியடித்துவர
மேளங்களாற்பரிக்க மெல்லிவருகிறார்கள்
மதுரைத்தெருவைசுற்றி மாளிகையில்வந்தார்கள்
சிங்காதனத்திலப்போ தேறினாள்தேன்மொழியாள்
ஆறுபேர்பாண்டியரா மையன்மாரானவர்கள்
பட்டந்தரித்தார்கள் பத்தினியாளல்லியர்க்கு
செங்கோலாம்பட்டமுடன் துரைத்தனமுந்தந்தார்கள்
பொம்மைவிருதுகட்டி பூதத்தலைகட்டிவைத்து
அல்லிக்கொடிகட்டி அரசநிலையாளுகிறாள்
பெண்பட்டங்கட்டியே பூமியரசாளுகின்றாள்
இந்தவிதமாக எல்லையரசாண்டாள்
இப்படியாகவேதான் இருந்தனவேமாளிகையில்
அப்போதருச்சனனும் ஆணழகுமன்னன்
இந்திரபுரிபட்டணத்தி லிருந்ததிருடரவர்
பசுத்திருடப்போனசேதி பார்த்தீபனுதானறிந்து
அம்மைபாடுக்கவென்று அரண்மனையிற்போய்புகுந்தார்
ஏழாநிலையின்மேலு மின்பமாயேறினனும்
அருகரும்திரௌபதையும் மருவிவிளையாடையிலே
குங்குமப்பூமெத்தையிலே கூடியுறவாடினார்கள்
சுத்திருந்தவர்கள்தன்னைக் கண்ணாலேகண்டுவிட்டான்
முன்னிட்டகாலையவன் பின்னாலேவாங்கினனே
மந்தாரக்குந்தியாரை மாதாவைத்தேடிவந்தான்
ஆசியர்தன்பாதம் மடிவணங்கிதெண்டனிட்டான்
வாழ்த்தியிடைகொடுத்து வருணித்துக்குந்தியம்மாள்
ஆச்சியரேவயன்றாவே அடியேனொருவார்த்தை
அண்ணனுடதேவியரு மப்பாகமெத்தையின்மேல்
கலந்துவிளையாடுவதை கண்ணாலேகண்டேனம்மா
மருமயலானைகளிலே சடுதியில்நான்கண்டேன்
பார்த்தபடியினாலே பாவம்வந்துநேர்ந்ததம்மா
அதாதபாவத்திற்கு ஆளானேனாச்சியரே
இப்பாவந்தீர்வதற்கு எத்தலங்களும்பார்த்து
அங்கப்பத்திரிகோதாவரி யமுனைசரஸ்வதியாம்
காசிஸ்நானஞ்செய்யவேண்டும் கணதபாவந்தீர்ந்திடவேண்டும்

ப

பாராஸ்தலங்களெல்லாம் பார்த்துவருகிறேன்யான்
சிவன்தலம்விஷ்ணுஸ்தலம் தெரிசனஞ்செய்வேன்
கால்கண்டதூரமெல்லாங் கடுகத்திரிந்துவாரேன்
போகவேணுமென்று பொன்னடியைத்தெண்டனிட்டேன்
அவ்வார்த்தைதான்கேட்டு அழுதுபுலம்பலுற்றாள்
உன்னையான்பாராமல் ஒருநிமிஷந்தரிக்கமாட்டேன்
பாராதிருப்பதற்குப் பாவிமனம்பொறுமோ
செத்துமடிவேனென் செலவுதந்துபோவென்றாள்
அழுதுபுலம்பலுற்று வாரணங்குருந்தியம்மாள்
அழுதகுரல்கேட்டு அந்தத்தருமராசர்வந்தார்
சந்தனவடிவழகன் தருமராசர்வந்துவிட்டார்
ஏதுக்கழுவதுதா னென்றாயேசொல்லுமென்றார்
அர்ச்சுனன்சொன்னதெல்லா மச்சியருந்தா முரைத்தாள்
அவ்வார்த்தைகேட்டு அருள்மைந்தர்நொந்துமனம்
சொற்பேச்சுக்கேளானே கந்தரப்பூமுடியான்
என்வார்த்தைகேட்டானே இளவிஜயராஜனிவன்
ஆரைநினைத்தானோ அளவற்றசிந்தையிலே
எவரைநினைத்தானோ இன்பமுள்ளசிந்தையிலே
அடியளந்தமாயவரே ஆதிமூலர்வாருமென்றான்
இவ்வேளையிச்சமயம் ஆதிமூலர்வாருமென்றான்
தருமர்நினைத்தவுடன் சுவாமியதுவறிந்தார்
வட்டமிடுங்கருடனேறி வந்துவிட்டாரெம்பெருமாள்
சிவந்தகருடனேறி ஸ்ரீராமர்வந்துவிட்டார்
காடுசெடிதாண்டி கரியமலைதான்தாண்டி
ஆறுசுனைதாண்டி அதிகவனந்தாண்டி
சந்தனவடிவழகர் தருமனண்டைவந்துவிட்டார்
வாகனம்விட்டிறங்கி வர்ணசாலையிட்டார்
என்னையழைத்ததுதா னேதுகருமமென்றார்
சிம்மாதனத்தின்மீது ஸ்ரீராமர்வீற்றிருந்தார்
சந்தனவடிவழகர் தருமரவரேதுரைப்பார்
ஆணழகுமன்னன் அருச்சுனராசனவன்
தீர்த்தயாத்திரைபோகச் சிந்தையில்நினைத்துக்கொண்டு
காசியாத்திரைபோகக் கருத்தில்நினைத்தானே
ஆர்சொல்லுங்கேளானே அர்ச்சுனன்போகலுற்றான்
தனியேயனுப்புதற்குச் சற்றுமனந்தானில்லை
அர்ச்சுனர்க்குத்துணையாக அரிராமாபோய்வாரும்
கூடத்துணைபோங்கள் கோபாலப்பெருமாளே
கும்பிட்டதெய்வமுநீர் குழைத்திடும்நாமமுநீர்
உன்னையேநம்பியு யிர்கொண்டுலாவுகிறேன்
ஆரைச்சதமென்பேன் அன்னியரைத்தஞ்சமென்பேன்
எவரைச்சதமென்பேன் இனியாரைத்தஞ்சமென்பேன்

உம்மையல்லால்வேறுதுணை யுண்டோயிம்மானிலத்தில்
அர்ச்சுனனன்பிற்சென்று அழைத்துப்போவாருமையா
போய்வாருமென்றுவாய்மெய்யென்றார் புகழ்மேத்தாருமலிங்கம்
மாதாவுந்தந்தையுமாக வாழ்த்திச்செலுத்தினார்
மாயவனுமருச்சுனனும் வணங்கியெழுந்திருந்து

மாயனும் அருச்சுனனும் தீர்த்தயாத்திரைபோகிறது.

காவிரியத்தாறுந்திக் கவேவெதிர்கொண்டார்கள்
சந்நியாசிவேடங்கொண்டு தவமுனிபோல்வேடம்பூண்டு
அம்புவில்லுங்கைபிடித்து அரியபுலிபோல்நடந்தார்
திருமாபுரம்சீமாபுரம் தாணிபுரந்தாண்டி
இந்திரவனங்கடந்து நீலிவனம்போகநடந்தார்
காசிசெடிதாண்டி கரியமல்லதான்தாண்டி
காசிக்குப்போய்ப்புகுந்து கனதீர்த்தமாடினார்கள்
விசுவநாதசுவாமியைத்தான் வேண்டிதரிசித்தார்கள்
அங்கப்பத்திரிகோதாவரி தீர்த்தமாடினார்கள்
பழனிசன்னதியில் பின்புபடைக்கலைசெய்தார்
பொதிகைமலைவந்து பக்தியாய்ப்பூசைசெய்தார்
திருப்பதிமேவந்தார்கள் தெரிசனமேசெய்தார்கள்
வேடன்கொடுத்ததான் விரும்பியுண்டவித்தகனை
கண்ணப்பனுக்குக்காட்சிதந்த காளத்திவந்தார்கள்
காளத்தீசுரனையுங் கண்டுதெரிசித்தார்கள்
திருப்பாலைவனத்தனிலே சிறப்புடனேவந்தார்கள்
கபாலீச்சுரனைப் பணிந்துதெண்டஞ்செய்தார்கள்
வல்லிக்கப்பூசைசெய்த மகதீசனைத்தரிசித்தார்கள்
திருவொற்றியூரில்வந்து தியாகனைப்பூசைசெய்தார்
கழுக்கன்வலம்வந்து கண்டுதெரிசித்தார
திருக்கழுக்குன்றமதில் சேவேவந்தார்கள்
வேதகிரிசொக்கநாதனை வேண்டிச்சரணமிட்டார்
வன்றொண்டனுக்காய் மணம்போருரென்றசொல்லை
அன்றுமலையானை ஆனைமுகந்தேடிவந்தார்
அருணகிரிநாதருக்கு அடிபணிந்துகொண்டாடினார்
புற்றிடங்கொண்டபெருமான் திருவாரூர்போனார்
தியாகரைத்தரிசித்துத் திரும்பித்திருவையார்
சிதம்பரந்தன்னிலேதான் சபாபதியைத்தரிசித்தார்
மாயவரஞ்சம்பூரணம் வந்துதரிசித்தார்கள்
ஸ்ரீரங்கம்வந்தங்கே அரங்கனைப்பூசைசெய்தார்
ஜம்புகேஸ்வரந்தனிலேதான் ஜலகண்டனைத்தரிசித்தார்
இராமேஸ்வரத்துக்கு இருவருமாய்வந்தாராம்
சேதுபதிநாளென்றுசெய்து இராமலிங்கப்பூசைசெய்து
விட்டுக்குடந்தைமகத்து விதிர்களைக்காணவென்று

மதுரைதனிலே வருகிறீர்களோதான்
வருகிறவழிதனிலே வாலிபனென்றவனாம்
அல்லியரசாணி அவளைக்காத்திருக்கு
கொத்தளவண்முத்தளக்கு கோபுரமாமாளிகையும்
அன்றுமுதற்கொண்டு அவளருகுவாசலிலே
பட்டுமுத்துக்குறைக்கதெனவே படைப்புலம்புகிறாள்
வாசலதாக்குமென்று கன்னிப்புலம்புகிறாள்
அழுதழுதால்கேட்டு அருந்தவர்தானிருந்தாள்
ஆதாரமில்லையோ அழுதபுலம்புகிறாள்
உலகையளந்தபெருமாள் அரசாளுமந்தக்கதையை
அழுதுபுலம்புவதேன் வல்லவனேசொல்லென்றார்
வலந்திரியும்சக்கரமான் வாகனனுக்கே
இராசாத்திமார்தனக்கு இனியவொருக்கூட்டம்
சொல்லவேயாகையில் சுகமாகப்போகிறேன்
உங்களாலேயென்ன நூறுவரையேபாக்கவேண்டும்
அவ்வார்த்தைதான்கேட்டு அர்ச்சுனனிடமுரைப்பான்
சொன்னாற்குறையுமுண்டோ சகலபெருமுயர்வாலிபனே
பெரியோர்க்குச்சொன்னால் பிழையுமுண்டோ ஏழுத்தைக்கு
உங்களுக்குறையதற் வகையாவதுசொல்லிடுவீரேயாம்
அழகமாமதை அறியவுரைப்பீரென்று
ஆனதைகேட்சர்க்கோரி அவ்வாறுசொல்லுகிறேன்
ஐயாபெரியவரே ஆண்டவரேகேளுமையா
வடமதுரைபதி வடமதுரையோட்டத்தில்
பெண்மதுரையாளுகின்ற பெண்கொடியாளல்லியரும்
அருமையாயவள்க்கு கரியமதைமகளாம்
பார்த்துப்பிறந்ததில்லை வன்கொடுமைசெய்ததில்லை
கூடப்பிறந்ததில்லை குலக்கொடுமைசெய்ததில்லை
ஒத்திறந்தவனாகி தான்சேனைதிருச்சேருமுண்டு
அக்கிரகாரந்தனி லக்கிரதாம்பூருமுண்டு
சத்திரக்குயாகியுண்டு சந்நிதகருப்புமுண்டு
குளமிவ்வளிக்கானலும் கொஞ்சக்கருப்புமுண்டு
புருஷக்கருப்பொழிய பிள்ளைக்கருப்புமில்லை
மார்க்கருப்பொழிய மற்றக்கருப்புமில்லை
ஆரவரக்குத்தா னரியவைக்கவில்லாமல்
மாறுவோமென்றுசொல்லி மங்கைமேல்தவமிருந்தார்
மானாதேவென்றுசொல்லி பலரிலவதரித்தாள்
பொற்றாமரைதனில் பிறந்தாளேமாதுநல்லாள்
அல்லிப்பிளே மேலே மருமைமாப்தவமிருந்து
அல்லியென்றுபேரிட்டு ஆசைக்குப்பெண்வளர்த்தாள்
அழுதிராமது வெதிர்த்தவக்கல்முகனை
நின்முகனைக்கொன்றவனும் நீபட்டக்கொண்டாயே

பொர்ணையிருக்கப் பூப்பரசானுகிறன்
அவ்வார்த்தைதனைக்கேட்டு அர்ச்சுனனுமே துரைப்பான்
அந்தவல்லியுந்தப்பெண்ணாளும் ஆணாகச்சொல்லுமெனை
ஆனாலுந்தும்பாவனைய வையமேவிசொல்லுமென்று
அவ்வார்த்தைகேட்டிருவர் இருமுகமொருமுகமாம்
அவைக்குதக்கதா அரும்பந்தமுன்னருமாய்
மல்லிமுதுகோடிபோல மார்பிமைமார்க்கருது
செம்பொனரசாயலைப்போல் திருமேகத்தின்கூர்மைகூடும்
செம்பொற்சாயலைப்போல் மேற்புருவத்தழகும்
கூந்தலழகுங் குளிர்த்தமுகத்தழகும்
முத்துப்போல்பல்வரிசை முறித்ததுப்போல்செவ்வுதடும்
சீரீட்டைபோற்கண்ணழகும் கெரித்தபுருவமுடன்
சப்பெழுத்தழகும் சாதிலிங்கமேனிகளும்
காயங்கடைந்ததுபோல் கலசத்தினாழகும்
கற்பகச்சோலைப்போல் கைத்தலமிரண்டழகும்
ஆலிலைபோலாக அமர்த்ததிருவயிறும்
சிங்கத்திடைபோற் சேர்த்தயிடையழகும்
இலைவாழைத்தண்டதுபோல் இரண்டுதொடையழகும்
முத்துச்சிப்பிபோலே முழங்காலிரண்டழகும்
புத்தகத்தைசேர்த்ததுபோல் புறங்காலிரண்டழகும்
கலியிலெழுதலாகும் சித்திரம்போல்பார்க்கலாகும்
பட்டிலெழுதலாகும் பதுமைபோற்பார்க்கலாகும்
வெளிச்சமாகஞ் மின்னுகிறகாந்தியவள்
கெம்பீரமாய்வார்த்தையது குயில்க்குரலோசை
காய்க்கும்பிராயமையா கனிகட்டுங்காலமையா
பூக்கும்பிராயமையா பிஞ்சுவிடுங்காலமையா
அவளைப்போலொருத்தியாள் அதுபில்லைவையகத்தில்
கட்டழகியாதிருக்கற் கலியாணமாச்சுதோடா
மாலைப்பசுங்கிளியை மணமுகூர்த்தஞ்செய்ததோ
அதைக்கேட்கச்சியாசி அவ்வார்த்தைதான்சொல்லுகிறான்
கொண்டுவருமாப்பிள்ளைக்கு கொடுக்கப்பெண்ணில்லையென்று
ஆனவருஞ்சம்மதத்தை அப்போப்பெண்சேரபக்கால்
கலியாணமென்பாரைக் கண்ணைப்பிடுங்கிடுவாள்
முன்வாசற்படிதனிலே முச்சிகொட்டா கட்டிவைத்தாள்
பார்க்கநற்றுஞ்சின் பட்டணத்தில் வைத்தாக்கால்
பறக்கின்றகாகமது பாராதுவைத்தது
ஆண்காற்றுப்படாது அல்லிபம்பாள் கோட்டைதனில்
வருவதும்பெண்ணதிகை இருப்பதும்பெண்ணே கேளவை
பன்னிரண்டுவயதாச்சு பாலப்பிராயமையா
காக்ஷித்தழகத்தைப்போன் ஒருபெண்மணிலைக்க

அன்றுடமுத்து அளவுகுறைந்ததையா
ஆசையினாலேயா னழுதுபுலம்புகிறேன்
வெட்டிவெறிந்திடுவாள் வீரமணிவாளாலே
கொல்லநினைப்பாளே குடிகெடுவந்துவிடும்
ஆசையினாலேயான் அழுதுபுலம்புகிறேன்
அவனுக்காதரவுசொல்லி யப்புறமேபோகையிலே

அர்ச்சுனன் அல்லியின்மேல் ஆசைகொண்டது.

அர்ச்சுனராசனவன் அதிமோகங்கொண்டானே
அப்புறம்நடக்கறியான் அர்ச்சுனராசனவன்
அல்லின்மேலாசையது அதிமோகங்கொண்டானே
காமவிகாரத்தால் கலைதாங்கிப்போனானே
மன்மதனெய்தக மார்பைபிளக்கிறதே
சித்தசன்தொட்டகணை சீவன்பரிபோகிறதே
மோகித்துதானுமவன் மூர்ச்சைபட்டுபோவானே
பாணங்களைந்தும் பட்டுநெஞ்சுருகிறதே
மாரன்விடும்பாணமது மார்புருகிப்போகிறதே
ஆயன்பெருமாளே அடியேனொருவார்த்தை
கட்டினவிருதுகளைக் கடுகவறுக்கவேணும்
எந்தவிதமானாலு மணமாலைசூட்டவேணும்
மாலையிட்டாளல்லாது மாயவனேவருவதில்லை
செத்துமடிவேனையா செலவழிந்துபோவேனையா
அவ்வார்த்தைதான்கேட்டு அரிராமரேதுசொல்வார்
கட்டெடன்னகாவலென்ன காவலதிகாரமென்ன
ஆறுயிரவர்களா மையன்மார்சேனையென்ன
சேவகமிருந்தொரு தேன்மொழியாளல்லியவளை
கலியாணம்பண்ணுதற்கு காண்டீபா ஆகுமோதான்
கொல்லநினைப்பாளே குடிகேடுவந்துவிடும்
செத்துமடிந்திடுவாய் செலவழிந்துபோய்விடுவாய்
தேசத்துப்பெண்களோ சேனபேர்கிட்டாரோ
சாதியிலொருபெண்ணை மாலையிட்டுவைப்பேனடா
குலத்திலொருபெண்ணை மாலையிட்டுவைப்பேனடா
மாதுடையவார்த்தைநீ மறந்துவிடுவாள்விஜையா
பெண்ணென்றவார்த்தையைநீ பொட்டெனவேமறந்துவிடு
அல்லியரைமாலையிட லாகாதுவுன்னாலே
செத்துமடிவாயே செலவழிந்துபோவாயே

எச்சகஞ்சென்றதே நாம்போலாம்ராசாவே
தீர்த்தயாத்திரைசென்று சேனநாளாச்சுதடா
தருமநந்தம்பிபேரும் தவித்துப்புலம்புவாரே
ஆரணியவாசம்வந்து அநேகநாளாச்சுதடா
என்றதனைக்கேட்டு எதுசொல்வான்வாள்விஜையன்
நான்செத்துமடிந்தாலும் செலவழிந்துபோனாலும்
மாண்டுமடிந்தாலும் வைகுந்தஞ்சேர்ந்தாலும்
செத்தவிடந்தனிலே செங்கழுநீர்ப்பூப்பூப்பேன்
மாண்டவிடந்தனிலே மல்லிகைப்பூப்பூப்பேன்
பஞ்சணைமெத்தைதனிலே படுக்கமலராவேன்
கொண்டைக்குப்பூவாவேன் கொசுவனத்திற்பையாவேன்
நெற்றிக்குப்பொட்டாவேன் நேர்விழிக்குமையாவேன்
முந்தாணித்தொங்கலிலே முள்ளாகிவொட்டுவேன்யான்
காலுக்குமிஞ்சாவேன் கைவளையல்நானாவேன்
மாலையிட்டாலல்லாது மாபனைவருவதில்லை
கலியாணஞ்செய்தலையுங் கரியமாலெம்பெருமாள்
உன்புண்ணியத்திருமேலயான் பிழைக்கவழிபாருமையா
பாதம்பணிந்தானே பார்த்திபன்மாயனது
ஆயர்பெருமானு மருளாளனேதுசொல்வார்
புத்திகெட்டவர்க்குறவுன் பின்னாலேவந்தேனடா
அறிந்துமறிந்துதானறிவழிந்துவந்தேனடா
பெண்களைப்பார்த்து போவதுபோற்புலம்புகிறாய்
காமக்கனைபட்டு கலையாகியேவிழுந்தான்
ஆயன்பெருமானு மாலோசனைபண்ணலுற்றார்
மாதுகன்னியல்லியரை வரவழைக்கவேணுமென்று
மாயமிருகங்களை மாயவனுண்டுபண்ணார்
காட்டானைசிங்கங்களும் கரடிபுலியாளிகளும்
மயிலுங்குயிலன்னமும் வண்ணவண்ணப்பட்சிகளும்
அநேகமிருகங்களை யரிராமருண்டுபண்ணார்
மதுரைக்குடிபடைகள் மகாஜனங்களத்தனையும்
காட்டில்வரத்தான்பயந்து கன்னிநல்லாள்முன்னேவந்தார்
அல்லியற்குத்தெண்டனிட்டார் அடிபணிந்தேதுரைப்பார்
இத்தனைநாள்பிழைத்தோ மிடுக்கமில்லையென்றிருந்தோம்
என்னகுறைசெய்தோ மென்னவொண்ணாமிருகங்கள்
காட்டுக்குப்போவோமென்றால் கனத்தமிருகமம்மா
பொல்லாதமிருகங்கள் புலிகள்துறத்துதம்மா
வதாற்பிழைப்போமென் றெல்லாமழுகலுற்றார்
அல்லிப்பெருமாளு மாரணங்கேதுரைப்பாள்

அல்லியரசாணி வேட்டைக்கு வருகிறது.

மிருகத்தால்மடிவோமென்று மிகவும்பயப்படாதே
வேட்டைக்குநான்போய வேணமிருகமெல்லாம்
அரைநாழிக்குள்ளே யதம்பண்ணிப்போவேனென்றாள்
அஞ்சாமலெல்லோரு மரண்மனைபோங்களென்றாள்
அந்தண்டபெண்களெல்லா மரண்மனைக்குப்போனபின்பு
ஆயிதாதிகளே அலங்காரசெங்கமலம்
வேட்டையாடும்பெண்களை விரைந்தோடியழையுமென
குறவர்பெண்கள்மறவர்பெண்கள் கூட்டிவாதாதியே
வில்லியர்பெண்களை விரைந்தோடியழையுமென்றாள்
குதிரைமேற்சேனிகட்டுங் கொப்பெனவேதாதியென்றாள்
அவ்வார்த்தைதான்கேட்டு ஆரணங்குதாதியவள்
இலாயத்திற்கட்டிவைத்த யிருக்கின்றபுறவிகளில்
பாராசாரிப்புறவிகளைப் பாக்குடனேதானவிழ்த்து
குதிரையைக்குளிப்பாட்டி கொப்பெனவேகடிவாளமிட்டு
நாலுகாற்குவண்டயமாம் நடுகழுத்திற்கொலுசுகளாம
பக்கத்திலங்குபடி பதியவைத்தாரப்போது
கண்ணாடிசல்லிகட்டி கவரிமான்குச்சுவிட்டு
முத்துத்தூறுகலிக்கத்துறா முன்றலேதான்சொருகி
இமாம்பட்சிபிறகுகளை யியலாகத்தான்சொருகி
குதிரைபலங்கரித்துக் கொண்டுவந்துமுன்புவிட்டார்
அல்லிப்பெருமாளு மப்போதேதானெழுந்து
சட்டைதமான்வச்சிரக்கபாய் தரித்தாளேயல்லியம்மாள
அம்புவில்லைகைபிடித்து அம்புறாதுணிமுதுகணிந்து
பதினாயிரந்தோழிமார் பக்கம்புடைசூழ
ஆறாயிரம்யானைகுதிரை யல்லியுடன்பயணமாச்சு
வெள்ளித்தமுக்கடித்தார் வெண்கலக்கொம்பூதினார்கள்
பொன்னின்தமுக்கடித்து புறப்பட்டார்பெண்களெல்லாம்
வேட்டைநாய்சங்கிலியும் விருதுகட்டிவருகிறார்
மான்வலையும்வல்லயமும் வளைதடியுஞ்சக்கரமும்
இரட்டைக்குழாத்துப்பாக்கி இருதோளிலிட்டார்கள்
காற்செருப்புதோற்சட்டையுங் கையிலேசில்லாக்கோலும்
அனந்தவிதபெண்களெல்லாம் அல்லியரைச்சூழ்ந்துவர
அப்போதுஅல்லியரும் ஆரணங்குதானெழுந்து
தாதிபருகில்வந்தாள் பொற்கொடியாள்மாதுகன்னி
புறவிதனைச்சுற்றிவந்து போதவேசரணஞ்செய்தாள்
பிடித்துமயிர்பிடித்துக் கடிவாளம்கைப்பிடித்தாள்
ஆட்டினாள்புரவிதன்னைச் சடுதிபிற்றாலேபின்னா
அடிவயிற்றிற்கால்தட்ட அபாரிபாயோடிற்று
ஆரபுரவிகளும் அல்லியுடன்கூடவிட்டார்

ஆயிரங்குதிரைகளில் அல்லியம்மாள்குதிரையது
சாற்றிப்பறந்தது கடுகெனவேவருகிறது
பட்டணத்தைத்தான்கடந்து பரவனந்தான்கடந்து
காட்டைவழிபார்த்தார்கள் காதூரமதையுமுழவிட்டார்
செடியைவழிபார்த்தார்கள் செகதாவையுழவிட்டார்
கோணக்கொம்பூதுவார்கள் கொப்பனந்தத்துமுக்கடிப்பார்
ஆமன்பெருமானும் அர்ச்சுனரைதானெழுப்பி
வருகிறார்களல்லியரும் வனந்தனிலேவேட்டையாட

அல்லியருக்கருச்சுனன் அம்புபொருக்கித் தருவது.

அவள்விட்டபாணமெல்லாம் எழில்விஜயாநீபொருக்கி
அம்புகள்தான்பொருக்கி யல்லியர்க்குநீகொடுத்தால்
மெல்லியவாய்வந்தாலே மாலையிட்டுவைப்பேனென்று
அம்மொழியைத்தான்கேட்டருச்சுனனுந்தானெழுந்தான்
மாயமிருகமது வந்ததேயல்லிமுன்பு
புள்ளிமான்றன்னையே பொற்கொடியாள்கண்டுவிட்டாள்
மானைத்துரத்தியேதான் வருகிறாளல்லியரும்
தாற்றுப்பார்த்துவே கானகத்திலேமானதுகாண்
குதிரைசவாரிவிட்டுக் கொப்பனவேதாத்தனற்றாள
கூடத்தொடர்ந்தானே கோபாலன்மைத்துனனும்
அல்லியாசாணியவள் அம்புகளெய்ததெல்லாம்
பொருக்கித்தருவானே போர்விஜயனர்ச்சுனனும்
காடெல்லாம்வேட்டையாடிக் களைத்தாளேயல்லியரும்
விடிவிடுமேரமது வெயிலானவேளையிலே
ஆலமரத்தடியில் அங்கேயிறங்கிவிட்டாள்
ஆரடிதாதியரே யாசனம்போடுமென்றாள்
அரைத்துணியைத்தான்விரித்து அர்ச்சுனனும்போட்டான்
குதிரையைக்கட்டுமென்று கொப்பனவேதான்பிடித்தான்
ஆலமரந்தன்னுடனே பண்ணைத்தவைத்தார்குதிரைதன்னை
பக்கமேயென்னுடைய பாதம்பிடியுமென்றாள்
அர்ச்சுனராசனை யல்லியருக்கேதேவரது
அல்லியம்மாள்தன்பாத மருச்சுனனும்பிடிக்கலுற்றான்
கையால்பிடிக்கையிலே கண்ணுடாழிசுற்றிக்கொண்டாள்
ஆரடிதாதியரே யலங்காரத்தோழியரே
நீங்கள்கற்றகதைதனிலே கதையொன்றுசொல்லுமென்றார்
கதைகள்தெரியவேண்டும் கதையொன்றுசொல்லுமென்றாள்

அருச்சுனன் அல்லிக்கு கதைசொல்லுதல்.

அருலமுதுமன்ன னல்லியர்க்குகதையுரைப்பான்
அல்லியரசாணி யம்மா துரைசாணி

நாட்டரசர்மந்திரத்தால் நாலுகலைக்குலமானிகள்
சந்திரகுலம்விளங்கவந்த தர்மராசன்தம்பிமார்கள்
பாண்டுமகாராஜன்பெற்ற பஞ்சவர்களைவருண்டு
தருமருக்குநேரிளையான் தாங்குடையவீமராசன்
வீமனுக்குநேரிளையான் வில்லாளனருச்சுனன்றான்
நெருப்பிற்பிறந்தபெண்ணாம் சேயிழையாள்துரோபதையை
கட்டாகவில்வளைத்து இளங்கொடியைமாலையிட்டான்
மீனசுழற்றழகன் வில்லிற்கருப்பழகன்
நாலுதிக்கிலுகந்திடும் நயனவிழிபார்வையுள்ளான்
பல்லிப்பராசவிளை பாகத்திற்செந்தாமரைப்பூ
தோளிலேதாமரைமாலை தொப்புளிலேதாமரைப்பூ
முதுகிலேமச்சரேகை முழங்காலில்முத்துமாணிக்கம்
ஸ்திரீலோலமன்மதன்றான் சிலபெண்கள்மணவாளன்
முன்னிலும்பின்னழகன் போகசன்னிமணவாளன்
பின்னிலும்முன்னழகன் பெண்களுக்குமணவாளன்
அர்ச்சுனனைப்போலே அழகுடையான்யாருமில்லை
திக்குதல்லபாலனரசே செயம்பண்ணுஞ்சேவகன்றான்
இனிப்பிறக்கும்பெண்களுக்கு ஏற்றமணவாளன்
என்றசொல்தான்கேட்டு இளங்கொடியாளல்லியம்மாள்
என்னகதைசொன்னாயென்று ஏறமுகம்பார்த்தாள்காண்

அர்ச்சுனன்பேரில அல்லியராசாணி கோபித்தது

நீ ஆடிபெண்பிள்ளையென்று ஆயுதத்தைதானெடுத்தாள்
காற்றாய்பறந்தானே கட்டழகனர்ச்சுனனும்
கத்திபெட்டிக்கையிலே சாய்ந்தோடிவந்தான்
நிற்கத்தெரியாமல் சேவர்னபக்கல்வந்தான்
அங்கேநடந்தசெதி யாண்டவர்க்குதானுரைத்தான்
கதைகளுஞ்சொன்னேன்யான் காலும்பிடித்தேனே
காலும்பிடித்தேனே கதைகள்தெரியவில்லை
மாலைப்பசுங்கிளியை மாலையிட்டுவையுமையா
ஆவியுருகிறதே ஆன்சிவன்போகிறதே
பஞ்சிவிட்டதிப்போல் பதைத்துருகுதென்மனது
அவளைப்போலழகுடையாள் அவனியிலேநானறியேன்
பார்த்துமறியேனையா படத்திலேகண்டதில்லை
எழுத்தச்சனவ னெழுதிவரவிட்டானோ
மேருட்டுதச்சனவன் மெய்யாய்சிருஷ்டித்தானோ
எதாய்சிருஷ்டித்தானோ இயலானபிரமதேவன்

அல்லியென்பான்மெல்லியென்பானனந்தனிலேபெண்ணேயென்பா
காலக்கலைபாலே கலைதாங்கிப்போய்விட்டான்
மூர்ச்சைபட்டுவிழுந்தானே முடிமன்னனருச்சுனனும்
அப்போதுதாதியோ ரத்தனைபேர்தோழிகளும்
பாக்கியார்தோழியரும் பத்தினியாளருகில்வந்தார்
ஆயடிதாதியரே யருகில்வந்தசெங்கமலம்
ஆரோருவனவன் ஆணைப்பிறந்தவண்டி
சாதுரம்பிடித்தானே கதைகளுரைத்தானே
தேடிப்பிடித்தாளாகும் தண்டித்துப்போடுகிறேன்
ஆங்காரப்பட்டவளே ஆக்கினைகள்செய்யவேணும்
ஆயிரந்தோழிகளை யங்கெனவேதேடலுற்றான்
எங்கெங்குந்தேடியே இனியகிடமாராய்ந்து
கள்ளன் இருடனைந்தான் காணோமென்றவருரைத்தார்
பேயோபிசாசோதான் பின்தொடர்ந்துவந்ததுமா
ஆணுருவாய்த்தோன்றிற்று ஆச்சரியமேயுந்தனக்கு
அதனுற்பழுதுமில்லை ஆச்சரியமேயுமிருங்கள்
எறிமுள்புரவிபின்மே லேனைகளுனைந்துழுந்துவர
பாக்கியருந்தோழியரும் பக்கம்புடைசூழ
மாளிகைவாசலென்று மண்டபம்போய்ச்சேர்ந்தார்கள்

ஸ்ரீகிருஷ்ணபகவான் படமெழுதிக்கட்டியதை அர்ச்சுனன்தேடுவது.

அப்போதுகரியமா லாலோசனைசெய்து
அல்லியரைப்போலாக அழகுபடமெழுதி
படங்களெழுதியே பாரவந்தமாயவரும்
குளத்தங்கரையிலுற்ற கோங்குமரந்தன்னில்
உயர்ந்தமரந்தனிலே வுஸ்களந்தார்கட்டிவைத்தார்
தண்ணீரில்நிழல்தெரிய சுவாமியங்கேகட்டிவைத்தார்
அர்ச்சுனனைக்கட்டியே பரிபாயத்தானெழுப்பி
காண்டீபா அர்ச்சுனனே கன்னியெனக்குவருகிறது
தண்ணீருங்கொண்டுவந்து தந்தாயேயாமாகில்
பாலப்பசுங்கிளியை மாலையிட்டுவைப்பேனடா
என்றுசொல்லக்கேட்டு எழுந்தானருச்சுனனும்
கமண்டலத்தைத்தானெடுத்து ஏகியேதேடலுற்றான்
வனத்திற்குள்ளாங்தேடி வருகிறனையர்ச்சுனனும்
தண்ணீரில்நிற்கும்போது தையலரைக்கண்டுவிட்டான்
அல்லியரைத்தான்பார்த்து அர்ச்சுனனுமேதுசொல்வான்
தண்ணீரில்போயிருக்கத் தையலேகாரியமென்
ஆடவென்றுதுஞ்சதுண்டு அமர்ந்திருக்கமெத்தையுண்டு
பந்தாடிசெண்டாடி பள்ளாங்குழியாடி
அம்மாநீராடியேதா னமர்ந்துநீவிற்றிருப்பாய்
தேகேபரங்கிளியே சிங்காதனம்விற்றிருப்பாய்

உன்சொல்லுமேலாக வுத்தமியேகாணி நப்பேன்
உன்னாசைகொண்டுதான் வுழன்றுதிரிகிறேன்
உன்மாயமருந்தாலே தாயைமறந்தேனே
அண்ணனை தம்பியரை யனைவரையுநான்மறந்தேன்
காமக்கணையாலே கலை தாங்கிப்போறேனடி
ஆசையெல்லாமுன்மேலே யலையுதடி என்கிளியே
வாயைத்திறவாயோ மறுவார்த்தைசொல்லாயோ
தாளைத்திறவாயோ தனிவார்த்தைசொல்லாயோ
வாயைத்திறந்தாயானால் வச்சிரமுதிருமடி
வச்சிரமுதிர்ந்தாலே வாரியெடுக்கிறேனடி
தாளைத்திறந்தாலே தங்கமுதிருமடி
தங்கமுதிர்ந்தாலே தடவியெடுக்கிறேனடி
முத்துவுதிர்ந்ததானால் முந்தாணியேந்துறேனடி
உன்சித்திரவாய்திறந்து செப்பாயொருவார்த்தை
மார்போடுமார்பணைந்தால் மகாவிடாய்தீருமடி
தோளோடுதோளணைந்தால் சுகங்கள்தெரியுமடி
நானத்தனைநேரமட்டும் இதங்கள்சொல்வேன்யான்
கல்லுங்கரையுமடி கற்றாணுமிற்றுவிழும்
உன்மனதுகரையவில்லை மாலைப்பசுங்கிளியே
தண்ணீரில்நானிறங்கித் தழுவிப்பிடிப்பேனடி
என்றுருகித்தானே இளவிஜயராசனவன்
மூச்சைப்பிடித்தவனு முழுகித்தடவலுற்றான்
சாமநேரமட்டாகத் தண்ணீரில்தடவினனே
தவளையும்பாம்புகளும் தடவிவலித்தெடுத்தான்
அலுத்துசலித்தவனு மருச்சுனனும்வெளியில்வந்தான்
கரையின்மேல்வந்தவனும் கட்டழகனேதுசொல்வான்
எந்தனைமோசஞ்செய்து எங்கேபோனாளென்றறியேன்
போனவிடமறியேன் போய்பதுங்குந்தாவறியேன்
தங்குமிடமறியேன் சஞ்சரிக்குந்தாவறியேன்
என்றுவிசாரமிட்டு இரங்கியவன்பார்க்கையிலே
தண்ணீர்தெளிந்தபின்பு தையலைப்பார்த்துவிட்டான்
இங்கேநக்கடலினேனே யெங்கிருந்தாயேந்திழையே
என்னவித்தைதந்திரங்கள் மந்திரங்கள்கற்றவளோ
மாயமறிந்தவளோ வல்லிபிளங்கொடியும்
மலையாளவித்தைகள் மந்திரத்தைகற்றாளோ
ஏந்திழையேயுனைப்பிடிக்க என்னையாலாகாதோ
மறுபடியுங்குதித்தாரே மன்னன்துரைராசாவும்
அவ்வளவில்மாயவனார் அங்கனவேயோடிவந்து
படத்தையவிழ்த்தவரும பாரளந்தார்போய்மறைந்தார்
நாலுநாழிகைமட்டும் நல்விஜயராசத்துரை
குட்டிமதயானை குளங்கலக்கிவிட்டதுபோல்

மூழ்கித்தடவினனே முடிமன்னராசனவன்
அல்லியரைக்காணுமல் மலைத்துவிசாரமிட்டான்
வைத்துவெகுநேரமாச்சு மாயவரென்சொல்வாரோ
கனத்தவிசாரமிட்டு கமண்டலத்தில்நீர்முகந்து
மாயவனார்தன்னருகில் வந்தானேயருச்சுனனும்
மாயனாருமருச்சுனரே இன்னேரமேதுசெய்தாய்
சாமமிரண்டுநேரமாச்சு தண்ணீர்கொண்டுநீவரப்போய்
என்னவிசயமாயிருந்தீர்காணர்ச்சுனரே
ஐயர்பெருமாளே அடியேனொருவார்த்தை
தண்ணீர்க்குப்போனபோது தையலரைக்கண்டேனையா
தண்ணீரிலிருக்கதுபோற் றரிசித்தவெந்தனுக்கு
குளித்துத்தடவினேன்யான் கொம்பனையைக்காணுமல்
மூழ்கித்தடவினேன்யான் மொய்குழலைக்காணுமல்

ஸ்ரீகிருஷ்ணபகவான் நித்திரைசெய்யும்போது அர்ச்சுனராஜன் அல்லியரைத் தேடிப்போனது.

அவ்வார்த்தைதான்கேட் டரிராமரேதுசொல்வார்
அல்லியின்மேல்சித்தமது அகலவில்லையருச்சுனரே
களையாய்வருகிறது காண்டீபாவெந்தனுக்கு
நித்திரைசெய்தபின்பு சேர்மழையுந்தனுக்கு
மாலைப்பசுங்கிளியை மாலையிட்டுவைப்பேனடா
என்றுவாள்விசையன் தொடைமேலே மாயவனார் தான்படுத்தார்
களைக்குறட்டைவிட்டு கரியமால்தூங்கிறோ
அப்போதுவாள்விசயனருச்சுனனுமேதுசொல்வான்
சிரசைநழுகவிட்டுத் தேர்விசையன்தானெழுந்தான்
பாராங்கல்லைத்தூக்கிக்கொண்டு பார்த்திபன்வருகிறானே
தலைமேலேகல்போடத் தார்விஜயன் தானினைந்தான்
என்றுகலங்கி யெண்ணமிட்டுத்தானிருந்தார்
கல்லைப்பிடித்துவைத்து காண்டீபனர்ச்சுனனும்
தலைக்குயரம்வைத்து சுவாமியைப்படுக்கவைத்தான்
அல்லிமேற்சிந்தைகொண்டு அர்ச்சுனனும்போகலுற்றான்
மதுரைக்குப்போகவென்று மாதுதனைக்காணவென்று
காடுசெடிதாண்டி கடுகிவருகையிலே
அர்ச்சுனன்போனசேதி அறிந்துமேமாயவரும்
அர்ச்சுனராசனுக் கனர்த்தம்வந்துநேர்ந்ததென்று



ஸ்ரீகிருஷ்ணபகவான் குறத்தியுருக்கொண்டுவருகிறது.

மாயன்பெருமாளும் வடிவெடுத்தாரக்கோலம்
செக்கச்சிவலையாய்ச் சிறுபெண்குறத்தியானார்
அக்குமணிகொக்குமணி அழகானபாலமணி
பச்சைமணிபாலமணி பாங்காயலங்கரித்து
குறத்தியரைப்போலாகக் கொற்றவனார்மாயவரும்
கண்டானேகுறத்தியரைக் கட்டழகவாள்விஜயன
ஆச்சிகுறத்தியரே யடியேன்யான்தெண்டனம்மா
கைபார்த்துக்குறியுரைக்க கட்டழகிவல்லவியாள்
மனதில்நினைத்தகுறி சொல்வாயோமாதாவே
வந்ததுநங்களது எனக்கறியச்சொல்லுமென்றான்

குறம்.

தினதெந்தினா தினதெந்தினா தினதெந்தினா தினனா
தென்னாதினா தினனா தினதெந்தினா தினனா.

எந்தனது திருநாடு கேட்கிறையோதம்பி
எந்நாளுமிந்திரனா ராளுமெங்கள்நாடு
சந்திரர்கள்சூரியர்கள் தவம்புரியுநாடு
தவமுனிவரிஷிகளெல்லாம் வாழுமெங்கள்நாடு
கொச்சிமலைகுடகுமலை யெங்களதுநாடு
குமரேசர்வாழுமலை யெங்களதுநாடு
பச்சைமலைபவளமலை யெங்களதுநாடு
பரமசிவன்வாழுவது யெங்களதுநாடு
வங்காளஞ்சிங்காள மராட்டியமெங்கள்நாடு
வளம்பாடி குறியுரைக்க வந்தேனடாதம்பி
பசிகாலமானாலே பழங்கூறிவருவோம்
பரமசிவனுமையவட்கும் கைபார்க்குங்குறத்தி

ராமக்காலட்சமக்கான பொம்மக்காரொன்பேர்
கலைமறிந்தகுறியுரைப்போம் கட்டணையாய்நாங்கள்
உண்மையாய்க்குறியுரைப்போம் தன்மையில்லைதப்பி
ஈன்றோனான்றோனை யென்றவளுஞ்சிரித்தாள்

வேறு.

சொல்கொட்டிச்சி யடியேயொருவார்த்தை
தெய்வக்குறத்தியென்றால் சொல்லுங்குறியெந்தனுக்கு
உண்மைகுறியுரைத்தால் வுச்சிதங்கள்தருவேன்டி
சாதிலிப்புதண்டலமாம் கைவிற்பவுத்திரமாம்
நான்கூடுத்தமுடைமான முத்தனுக்குத்தருவேன்டி
கைபார்த்துக்குறியுரையும் கட்டழகியெந்தனுக்கு
காமக்குறத்தியவள் நலமாகவேதுசொல்வாள்
வன்னக்குறத்தியவள் வாய்திறந்தேதுசொல்வாள்

குறத்தி அருச்சுனனுக்கு குறிசொன்னது.

நினைத்திருநினைத்திரு நினைத்திருநினைறு
கெக்காநிகாநினைறு நினைத்திருநினைறு

திங்கள்மதிபிறைதருஞ் சிவனுடையமகனே
திருத்தணிகைவாழ்முருகா சேவையருள்வேண்டும்
மலையாளவஞ்சியம்மை வாக்கருளவேண்டும்
அலர்மேலுமங்கைபதே மலைமேலானதுசிந்தை
அங்கோருங்குறி யன்புதரவேண்டும்
ஆகாசவாணிதுர்க்கை ஐயனாரிடாரி
அம்மைவள்ளியுமையவளே யினியகுறிசொல்லும்
பொக்கல்கவினுமுகமும் பொற்கொடியேதெய்வம்
பூவாடைக்காரியம்மை புகழ்ந்துகுறிசொல்லும்
தெய்வங்களெனிக்கைத்தாலே சிலிர்த்துக்கொள்ளுதுடம்பு
தேகமெல்லாமயிர்கூச்சி சிலிக்கிறதோதம்பி
வாடையணைந்தசடை ஜுவர்வந்தாப்போல
மயக்குகிறதென்னுடம்பை சன்னதங்கொண்டதுபோல்
கூடைகொண்டுகவிழ்ந்திடா கொற்றவனேயெனக்கு
கோலவிழிதுடிக்கிறது குறிகாண்சொல்லுவேன்கேளு
சந்திரகுலராசாக்கள் தருமனைவர்க்கள்
தரணிமுழுதாளுகின்ற தருமர்தம்பித்தான்
வில்லாதலன்கையழகன் தேர்விஜயனல்லவோதான்
தீர்த்தயாத்திரைபோகவென்று தோழனுடன்வந்தாய்
வழியில்நின்றதலோர் தென்மதுரைவாழும்
மாதுக்கு அல்லியின்மேல் மையல்கொண்டாய்நீயும்
அரும்பாண்டியர்க்கு அரியதுரைமகளாம்
அல்லியின்மேலாசைகொண்டு உருகிருப்பீயும்
பொய்யோவென்றுநீசொல் மெய்யோபுகல்வாய்

என்றவனைதான்பார்த்து இணைவிழியால்பிட்டி
இளங்குறத்திதனைப்போலே இடைவாளாகணைத்தாள்

வேறு.

மெய்தான்காணுஞ்சியரே விளாம்பிறைபத்துக்கு
கண்டதுகண்டாப்போல் கட்டுவச்சிசொல்லிவிட்டாய்
பார்த்ததுபார்த்தாப்போல் பட்சமாய்ச்சொல்லிவிட்டாய்
செய்வக்குறத்தி தெளிவானகட்டுவச்சி
உள்ளகுறியெனக்கு உத்தமியேநீயுரைத்தாய்
அல்லியரைமாலையிட்டு அழகுமணஞ்சூட்டுமென்று
என்மனதுக்கேற்றபடி வருவாளோ அல்லியவள்
என்பீதிவிச்சைகொண்டு இசைந்துவரப்பாருமம்மா
பாதம்பணிந்தவனை பார்த்திபனாருக்கனும்
ஆனால்கேள்தம்பியரே யல்லிவருவதற்கு
மூன்றுவிக்குளிகையது முடிமன்னா நான்தருவேன்
அம்மருந்தைநீவாங்கி யல்லிபுரம்போய்ச்சேர்ந்து
தென்மொழியாள்பட்டணத்தில் திருக்குளத்தில்போய்ச்சேர்ந்து
தானந்தமருந்தெடுத்து தண்ணீரில்நீயுரைத்தால்
அல்லியம்மாள்பேரைச்சொல்லி அம்மருந்தைநீயுரையும்
பொம்மக்காள்பேரைச்சொன்னால் திம்மக்காள்சேர்ந்துவிடும்
ராமக்காள்பேரைச்சொல்ல லட்சுமக்காள்சேர்ந்துவிடும்
பொய்யல்லவென்மருந்து புண்ணியனேதருவேன்
உந்தனுடையாள முடிந்தியதைத்தாருமென்றாள்
காதிலிடுங்குண்டலமும் கையிற்பவித்திரமும்
கச்சைகளுந்தட்டிகளுங் கழட்டிக்கொடுத்தானே
இந்தமருந்துதான் பலியாமற்போனக்கால்
உன்னைநான்கேட்டுத்தேடுவே னுச்சியமேசொல்லுமென்றான்
ஆனால்கேள்தம்பியரே அற்பமாய்ப்போச்சுதானால்
நாலுவுலகுக்கும் நடுவேயடாவென்மலைதான்
யேழுகுடிசைகளில் எதிர்குடிசையென்றனது
ராமக்காள்பொம்மக்காள் லட்சுமக்காளென்றழைத்தால்
உன்னுடைநான்தருவே னுத்தமனே அஞ்சாதே
அருச்சுனன்றரித்திருந்த ஆபரணமுள்ளதெல்லாம்
பட்டுகுல்லாதட்டிகச்சை பலவிதவுடைகளும்
கழட்டிக்கொடுத்தானே கட்டழகருடைமைகளை
வாங்கிநடந்தாளே மலைக்குறத்திதனைப்போல
ஆணழகராசதுரை அர்ச்சுனன்வழிநடந்தான்
உள்ளேமனமகிழ்ந்து உத்தமனும்போகலுற்றான்
அல்லிப்பெருமாளவன்பிறந்தபொய்கைகண்டான்

அருச்சுனன் அல்லிபிறந்த திருக்குளத்தில் மருந்துரைத்தது.

பவளகட்டுபொய்கைதனில் படியிறங்கியவன்
வண்ணமருந்தெடுத்து தண்ணீரிலுரைக்கலுற்றான்

அல்லியென்பாள் மெல்லியென்பாள் மனந்தனிலேயென்னையென்பாள
வருவாளோ அல்லியென்று வாய்திறந்து பெண்ணையென்பாள
மருமகனையும்போ தவம்மனதுகரையாதோ
குலினைதனையவில்லை துணைமுந்திரும்பாதோ
இந்தவிரங்கியே தேடிவருவாளோ
எப்போதுமனம்வருமோ என்னருகில்வாராளோ
ஆசைக்கண்ணாயிலே கண்ணாரக்கப்போதிலே
மங்கையரசாணியடி பார்க்கப்பிறக்குதடி
சித்தசன்தொட்டகணை சிறுமார்புருகுதடி
உன்றனைக்கொண்டிருந்தால் உயிர்தரிக்கிறேன்
அல்லியென்பான் மெல்லியென்பான் மனந்தனிலே பெண்ணையென்பான்
வருவாளோ அல்லியென்பான் வாய்திறந்து பெண்ணையென்பான்
அல்லியென்றுசொல்லி அழுதிருந்தானர்ச்சுனனும்
வன்னமருக்கெதிர்த்து தண்ணீர்த்துறைக்கணுற்றான்
அல்லிப்பெருமாள் அவளுடையதாதியர்கள்
ஆயிரந்தாதியர்கள் ஆணைக்குதாமெழுந்து
தங்கக்குடமெடுத்து தண்ணீர்க்குவருகிறார்
பவளக்கட்டுகுளத்தின் படியோரம்வந்தார்கள்
மருத்துவனாக்கும்வன்னமகனும் வார்த்தைகளைசொல்கிறதும்
அல்லியரையெதிராம் அவ்வார்த்தைதகேட்டார்கள்
இருவருஞ்சொன்னதெல்லாம் எல்லவருங்கேட்டார்கள்
அல்லிப்பெருமாளும் மகாராணுங்காயமிலை
அடிமிவ்வார்த்தையெல்லாம் ஆச்சியர்க்கேசொல்லவென்று
ஓட்டநடையுமாக ஓடிவந்தார்தாதியர்கள்
அல்லியம்மாள்முன்னிலே அடிபணிந்துகொண்டவிட்டார்
ஆர்பணிதாதியரே அடிபணிவதுமேனென்றாள்
ஆர்பணியுமல்லகாண் அடியேன்திருப்பணிதான்
தங்கக்குடமெடுத்து தண்ணீர்க்குப்போனோமம்மா
பவளக்கட்டுகுளத்தினிலே படியிலொருவனம்மா
வன்னமருக்காகவே தண்ணீர்த்துறைக்கணுற்றான்
அடியம்மாசொல்லுகிறான் அழுதுபுலம்புகிறான்
மெய்யுருகிப்பேசுகிறான் வாய்பழுதுசொல்லுகிறான்
காதாரக்கேட்டோமம்மா கண்ணாரக்கண்டோமம்மா
அவ்வார்த்தைதானேகேட்டு அல்லிவெகுகோபமதாய்
கட்டுப்பழம்போலே இருகண்கள்தானசிவந்து
செந்நெல்காய்ப்போல் சீறிவன்கோபமதாய்
எட்டிரதத்தனிலே எதிர்த்துவந்தவன்முகத்தை
நின்புகண்கொண்டு நினைப்பட்டமாளுகிறாள்
அடிபெண்ணேயல்லியென்பா ராருவாருமில்லை
கோபமயிருந்தடிப்பூபாசாணுமேதன்
பாக்கிசருந்தன் பட்டணத்திலிருந்தாலும்

பலகின்றாளைகமது பாரர குகிலேபேசிக்க
ஜமபக்கரரை கருமென ஞக்கெணக்க வெடக்கைவுடு
அஞ்சரசக்கக்குபிக்கெ பறுர் பொன்னுமாறுதான்
பாக்கிறான்வலவக்கா பலமசேவேர கேளும்
எல்லவிகமாபலனே அக்கெணகல்லெசய்தேிேவரம்
சக்றகைசக்கேட்க எ குசொல்லன்பலமசேன
கட்டெப்பிகுகுதுக்ாக் கவிபாவைதுசெய்வதற்கு
மம்பட்டக்குராதமேவா வாலைமிராமேதவேர்தான்
மணக்குட்டவர்கவக்போல் பகதவேனாலுக்கிறது
என்றனகபோசிசாவல்லவர்பலைகுனமவா தில்
அல்லிபெருமாட்டிதனைக் காவேலைசெலவேபடுசொல்வான்
ன்பெண்மேராதநதேன் பெணிலாவேண்டாமபிலே
வெட்பாமணலிலே போட்டுபுரட்டுகிறேன்றன்
ஆகொடுப்பானிதனை அற்றிலபாட்டுறுமீனை
பெற்வொறுகுபென் செக்தழைக்கிறவான்
ஆரா கோறியரே அசிரம்பேர்வாருக்கர்
ஆற்றுமணல்தனிலே அவளைப்புரட்டுங்கள்
வெட்பாமணல்தனிலே பிறுத்துப்புரட்டுங்கள்
கட்டியுருட்டுங்கள் கள்ளன் திருடனைத்தான்
செத்தழைக்குமின் செறிவக்குசொல்லுமென்றான்
அவ்வார்த்தைதனைக்கேட்டு அசிரங்கோறியர்கள்

அர்ச்சனனுக்கு அல்லியரசாணி முதல்கொண்டனையிட்டது.

முட்டாக்கடையுமாக முடிவந்தார் தாதியர்கள்
ஆயிரங்கோறியர்கள் அர்ச்சனனைத்தானெடுத்தார்
ஆற்றுமணல்தனிலே அருச்சனனைப்போடவந்தார்
காண்டிபனருச்சனற்கு கலமோசம்வருமுதென்று
ஆயன்பெருமாளும் பாரதரிக்குருந்தார்
சூரியபகவானைத் திருமாலுந்தானினைத்தார்
கானலுணைக்கவேண்டாம் காண்டீபனருச்சனற்கு
அர்ச்சனனைக்காருமென்று ஆயருக்கோத்தளித்தார்
அப்போதுதாதியர்கள் ஆற்றோரம்வந்துநின்று
ஆற்றுமணலிற்போட்டு அருச்சனனைப்புரட்டினார்கள்
கொற்றவனருச்சனற்கு குளிர்ந்தசலம்போலிருக்கும்
ஆயிரங்கோறியர்கள் மனதுகொண்டுநின்சுதங்கே
நெல்லிப்பழம்போலே நெருக்கித்தேநெரப்பனக்கா
சக்கப்பழம்போற் சரிந்துருண்டுதுபோபனக்கா
அத்தன்டைகோறியரும் அதிரிருந்துபார்த்திருந்தார்
அப்போதருச்சனரும் ஏதுமுகமேனதுசொல்வான்
அல்லியரும்மாமதனுமை யமர்க்குலினை யாட
மருளிகிகைபாடுத்து மண்டபகாரியிலேயோ
ஆற்றிலைதகி பார்த்துவிசயர்த்தப்பாம்

[illegible]

அர்ச்சுனனுக்கு அக்கினி இரண்டாவது [illegible]

[illegible]

அருச்சுனராசனை [illegible]

[illegible]

அறியாதவர்களுக்கு அறியப்படுத்துகிறேன்
தெரியாதவர்களுக்கு தெரியப்படுத்துகிறேன்
இவ்வார்த்தைதான்கேட்டு எழுந்தாளேசெங்கமலம்
காளிகேட்டபாதகனை தெரியாதோ இவ்விடத்தை
இதோபாருமென்றுசொல்லி மேனிமேலேவிழுந்தாளே

ஸ்ரீகிருஷ்ணமூர்த்தி பெருச்சாளியாய்க்கொண்டு
மேனியைக் கடித்திட்டது.

அந்தசமயம்பார்த்தாரே அரிராமசெம்பெருமான்
பெருச்சாளிபோலேவந்து புரட்டிவிட்டாரேமேனிதன்னை
சுருக்குமடித்துக்கொண்டு தொங்கினாள்தோழியவள்
காலையுதறிக்கொண்டு கண்விழித்துக்கொண்டாள்
காலைவிழுந்துக்கொண்டு கல்லுயிர்தான்போச்சுதே
செத்துமடிந்தாளே செங்கமலத்தோழியவள்
காண்டீபனருச்சுனரும் கட்டழகரேதுசொல்வார்
காலையுதறுவதும் கண்விழித்துநிற்பதுவும்
நாக்கைவிழுத்திக்கொண்டு கல்லுஞ்சலாவதும்
இவ்வளவோருத்திரங்கள் எனக்குத்தெரியவரும்
இனிமேல்தெரியவரும் இரங்கிவாதோழியரே
ஐயையோதெய்வமென்று அழுகிறாள்தோழியரும்
ஓட்டம்நடையுமாக ஓடிவந்தாராச்சியல்லவா
மருட்டுரைச்சியரே மாதாவேநீர்கேளும்
தூக்குமரக்கிளையிலே தோழியவள்போட்டபோன
செங்கமலத்தோழியவள் தூக்கில்மடிந்தாளே
அவ்வார்த்தைதான்கேட்டு அல்லிமனதுநொந்து
பாக்கியிலுநல்லவளே பவளசேனைக்கேளும்
என்னவிதமாக இவளைக்காப்பாற்றிடலாம்
ஆரடிமந்திரியே ஆலோசனைசொல்லுமென்றாள்
அப்போதுபவளசேனை ஆலோசனைசொல்லுகிறாள்

அர்ச்சுனனை முன்றுக்காரக்காளிக்குப் பெலியிடச்செய்தது.

வடவாசல்செல்லியம்மாள மாகாளியம்மனுக்கு
பொங்கலையிட்டுநீங்கள் பொலிபோட்டுவாருங்கள்
அவ்வார்த்தைதான்கேட்டு ஆயிரந்தோழிமார்கள்
சீக்காயுமெள்ளுடன் தேங்காயுமிளநீரும்
பருப்பானையரிசிகளும் புஷ்பமுஞ்சந்தனமும்
கர்ப்பூரஞ்சாம்பிராணி வாரிக்கொண்டுவைத்து
ஆராதிக்கவே அழைத்துவாருச்சப்பெண்ணை
இவ்வளவில்காரியர்கள் இவர்முடிகியோடவந்தார்
ஆயன்பெருமாளும் அவ்வார்த்தைதானறிந்தார்
கார்மேகவர்ணரும் காளியண்டையோடிவந்தார்
வாருமம்மாதங்கையரே வார்த்தையொன்றுநீர்கேளும்

அல்லிப்பெருமாட்டி அருச்சுனனைத் துட்டனென்று
காலையக்க அருச்சனனும் கனவேஷங்கொண்டுவந்தான்
அர்ச்சுனராசனென்று அறியாமல்லியம்மாள்
அன்பாயழைத்து காலமிக்கசெலவுதந்தாள்
ருசிப்பெண்போலாக உக்கமிபலநுவேஷமா
பூசையானதிப்பார் போக்கவிட்டுத்தீர்க்கமின்பு
மங்கைமேசைனதயா மிக்கப்பெண்மேல் கட்டினான் மன்
அஞ்சாப்போவனைப்போல் காமஇசையும் புரபுல
அர்ச்சுனராசனுக்கு அறிவுகைதானுந்தான்
வெற்றிமதயானை வீமனுன்னை கொழுக்கவிட்டான்
கச்சைகொட்டகையல் மன்றுபோட்டிருக்கையுடைப்பாள்
தண்டாயுதமெடுத்துத் தாக்குடையவீமராசன்
கட்டிவைத்துன்னைக் கழுத்தையறுத்திடுவான்
காளியின் புயாராமல் கவைத்தவுயிர்வாங்கிடுவான்
காளியற்குகாடுகைத்துக் கரியமால்தானடந்தார்
நச்சுப்பெண்போலாக வுலகளந்தார்வடிவெடுத்தார்
நாகத்துவாசலிலே உட்கார்ந்திருந்தார்கள்
பட்டங்கட்டையுமாக வெகுவந்தார்தாதியர்கள்
கோனிலுக்குபோகவென்றும் குச்செடுத்துவாருமென்றார்
இறவுகோவிலடுத்து தேன்மொழியாள்போகலுற்றாள்
கிளிமுடிகையே காளிகோவில்வந்தார்கள்
கோயில்கதவுதன்னைக் குச்சிட்டுத்தான் திறந்தான்
குளத்தில் முழுகிவந்து கொம்பனையாள் பூசைசெய்து
அபிஷேகஞ்செய்துவைத்தாள் ஆங்காரக்காளியற்கு
செந்நலரிகொண்டு தேவியற்குப்பொங்கலிட்டார்
கோவில்திருவிளக்கைக் குறைவில்லாமலேற்றினார்கள்
தேங்காயுடைத்தார்கள் தீபதூபந்தான்கொடுத்தார்
அர்ச்சனைக்கூட்டிவந்து அம்மனுக்கெதிரேவைத்தார்
மண்பிறக்குமுன்பிறந்த வழக்காடுநல்லசெல்வி
புகப்பிறக்குமுன்பிறந்த வுக்கண்டபத்திரகாளி
காய்ந்தமழுவேந்தும் கர்த்தனிட தேவியரே
எரிந்தமழுவேந்தும் ஈஸ்வரனார்தேவியரே
மடவாசல்செல்வியம்மாள் மனிதாபலியேர்க்கவேகொள்ளும்
வசனிக்கும்போதையிலே வந்துவிடும்சன்னதங்கள்
நச்சுப்பெண்மேலே யுதறுதுதெய்வம்வந்து
ஆண்காற்றடியாத அல்லிமலர்நாயகிக்கு
அவளுடையவெல்லைக்காக்கும் ஆங்காரக்காளியல்லோ
மதுரையைக்காத்திருக்கும் மன்னுப்பிடாரியல்லோ
அல்லியருக்காகாது எந்தனுக்குமாகாது
இப்பலியான்வேண்டேன் ஏர்கைபில்லைகந்தனுக்கு
பெண்பலியிந்தாலே இப்பவேயர்வைகொள்வேன்

பூசைக்குச்சொல்லியபின் பெருமாளும்போய்ப்படுத்தார்
[illegible]
[illegible] போட்டனைத்தார் அருச்சனைகளை
[illegible] அல்லியம்மனுந்தாம்
[illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible]
பாதம்பிடிப்பதும் பாட்டுக்களைப்பாடுவதும்
[illegible] கொண்டாடுவதும்
[illegible] சந்தோஷமாவதும்
[illegible]
[illegible]
[illegible]
அல்லிபெருமாளின் அருகாகவிருந்து
[illegible]
[illegible]
[illegible]
பாதம்பிடிக்கிறதும் பணிவிடைகள்செய்கிறதும்
[illegible] கொண்டாடுகிறதும்
[illegible]
அல்லிபெருமாளும் [illegible]
[illegible]

காணக்குழலைத்தந்து மருந்துமிவான்சண்டாளன்
பூமிமுழுவதுந்து பொடியுமிவான்சண்டாளன்

ஸ்ரீகிருஷ்ணபகவான் ஸ்திரீரூபங்கொண்டு
அருச்சுனனை அழைத்துப்போனது.

என்றுவிசாரமாயிருந்தாளே அல்லியம்மாள்
மாயன்பெருமாளுமே மனமாயமே சொல்வார்
அர்ச்சுனராசனை அழைத்துவரவேணுமென்று
என்னவடிவெடுத்தார் எம்பெருமான்மேகவர்ணர்
தெய்வப்பெண்போல ஸ்ரீராமர்வடிவெடுத்தார்
செக்கச்செவலைப்போலே திவுக்கிளிபோலே
மின்னுகிறகாந்தியைப்போல் வேரிப்பவளப்போல்
கர்யக்கும்பிராயம்போற் கன்னிகட்டும்பிராயமவள்
பூர்க்கும்பிராயமவள் பிஞ்சிவிடுங்காலமவள்
கொஞ்சம்பயதனன் கொழுந்திதல்லாம்பிஞ்சுவிடும்
இருண்டெழுந்தசோலையிலே செவந்தெழுந்தசூரியன்போல்
குன்றின்மேற்சந்திரன் குதித்தெழுந்தபாவனைபோல்
சமுத்துச்சகலன் பிடைந்துவரவிட்டதுபோல்
அஷ்டாபரணமெல்லாம் அலங்காரஞ்செய்தவளும்
பட்டுப்பாவாடையன்ன பாடகக்கால்சோதியின்ன
தெய்வப்பெண்போலே ஸ்ரீராமர்வருகின்றாரே
அழுகுதுலக்கவும் ஆனந்தங்கொஞ்சவேதான்
உடலதுலக்கமாயவனே ஓடிவருகின்றாரே
காடுசெடிகள்தாண்டிக் கடுகியேவந்துவிட்டார்
மதுரைவீதியிலே வந்தாரேயப்பெருமாள்
அக்காவேதங்கைமாரே ஆபடிநாடியாரே
செக்கச்செவலைப்பமா சிறுவயதிதன்கணவன்
வெரிபிடித்தமன்னவன்தான் வீதிதிரிவாண்டி
அல்லின்பான்மெல்லியென்பான் மனத்தனிலேயென்னேன்பான்
தண்ணீர்கண்டவிடத்தில் தன்கைமருந்தையபான்
எட்டுகாளாச்சதம்மா என்கணவன்விட்டுவிட்டு
ஆரோதெரியாது அடக்கிவசங்கொண்டார்கள்
என்கணவனைக்காணமல் கலங்கித்தவிக்கிறேனே
புருஷனைக்காணமல் புலம்பித்திரிகிறேனடி
அரிந்தாளுறையுங்கள அக்காமேயென்றழுதாள
மாறுபுலம்புவதை மதுரையுள்ளோர்தான்கேட்டு
தாதியர்களேதோழியர்கள் தானங்கேநாடிவந்தார்
அல்லிப்பெருமாட்கு அறிக்கையிட்டார்தாதியர்கள்
பூக்கிடந்தவளின் கோட்டைக்குயாதகனை
அவனைமாலையிட்டுத்தேசியும்வாகனமொருத்தியிங்கே
வானத்துரம்பையம்மாள மயிலென்னப்பெற்றதிருமா

சனவிலைக்காளேனென்று கதறிப்புலம்புகிறாள்
சொல்லியழுகிறது துக்கம்பெருகுதம்மா
அவ்வார்த்தைதான்கேட்டு ஆரணங்குமேதுசொல்வாள்
ஆரணங்குமாதனைநீ யழைத்தோடிவாருமென்றாள்
ஓட்டநடையாக ஓடிவந்தார் தாதியர்கள்
ஆடுகன்னியமே யழுதுபுலம்புவதேன்
என்றுதான் ஆச்சியருமுன்னை அழைத்துவரச்சொன்னார்காண்
அல்லிப்பெருமாளு மழைக்கிறாள் வாருமென்றாள்
ஏதுக்கழைக்கிறாளிளங்கொடியாள்மாதுயென்னை
என்றுநடந்தாளே யம்பெருமாள்மாளிகைக்கு
வாசலும்வாசலுமா படியேழுந்தான்கடந்து
அல்லியற்குமுன்னேவந்து ஆரணங்குதெண்டனிட்டாள்
தெண்டனிட்டகன்னியரை தேன்மொழியாளேதுசொல்வாள்
எந்தவூருங்களது எங்கிருந்திங்குவந்தாய்
ஏதுக்கழுகிறாயெனக்கறியச்சொல்லுமென்றாள்
என்னுடைய ஆச்சியரே என்பாவங்கேளுமம்மா
தூரவடக்கேயம்மா துவாரகாபுரிதேசம்
திருமலைநாயக்கன்பெற்ற சீரானபெண்ணிருவர்
என்பேருமல்லியர்க ளென்தங்கைபேரல்லியம்மாள்
என்னைமணமுடித்து என்தங்கைமேலிச்சைகொண்டான்
பெண்டுமேல்பெண்டுமெல்லோ கொடுப்பாரோபூமியிலே
அல்லியர்மேலாசையாய் ஆணழகன்வெறியெடுத்து
பித்தம்பிடித்தவன்போற் பிதற்றித்திரிகிறானே
தன்னரிசைக்கண்டாலே தன்கைமருந்தைப்பான்
அல்லியென்பானல்லியென்பான் அலைந்துதிரிகிறானே
வீடுவாசல்தங்காமல் வெளிப்பட்டுப்போய்விடுவான்
தேடித்திரிகிறேனே சீரானமன்மதனை
கண்டுபிடித்தவனைக் கடுகேயணைகொண்டுபோவேன்
ஒட்டுகொளொருவரா யிருப்பான்மனம்பிடித்து
மாதுமேல்நினைவெடுத்து மாளிகையில்நிற்கரியான்
பத்தாம்பட்டணத்தில் பாவியொருபெண்பிறந்தேன்
செல்வத்தலையிலே செப்போடேழுதினதாம்
சுமையைத்தொலைப்பேண்டி காவேரிக்கிடுவேன்
சுமையைத்தொலைப்பதற்கு விசனமற்றானேனடி
வடவழுகாயிருந்தார் மன்னவன் துரையென்கணவன்
ஆரோதெரியாது பட்சிவசங்கொண்டார்கள்
என்புருஷன்தன்னையம்மா யினிகாணப்போறேனோ
என்றதைத்தான்கேட்டேது சொல்வாளல்லியம்மாள்
என்பேரைச்சொல்லியவ னெடுத்துமருந்துரைத்தான்
ஆதியந்தசொன்னதெல்லா [illegible]

9

பத்தியக்காரனென்றால் பழுதில்லையெங்களுக்கு
ஆறுலகழுந்தப்போ யனுப்பிவிடச்சொல்லுகிறேன்
ஆசடிதாதியரோ அலங்காரத்தோழிகளோ
வெட்டிக்கைதிறந்தவளைக் கொப்பணவேபோகவிடும்
அவ்வார்த்தைதான்கேட்ட லங்காரத்தோழியர்கள்
ஓட்டங்கடையுமாக ஓடிவந்தாரிட்டிக்கருகில்
திட்டிக்கைத்திறந்தார்கள் கொப்பனையேவிட்டுவந்தார்
அப்போதுதெய்வகன்னி ஆனந்தமுகம்பார்த்து
வாடாகுப்பாநீ மதியழிவாயென்றழைத்தாள்
அல்லியென்பாள்மெல்லியென்பா ளொருமுகன்தான்வருவான்
எப்போவருவானோ என்றுசை திருப்போதான்
மன்மதபாணமது மார்புருவிப்போகுதென்பாள்
இந்தசன்தொட்டகையோ இருமார்புருகுதென்பாள்
ஆருருகுபாணமது மார்புருவிப்போகுதென்பாள்
அந்தகுருதுபாணமது நெஞ்சுருவிப்போகுதென்பாள்
அருச்சுனரைக்கூட்டியே யிராமர்போகலுற்றார்
மருமகனையுந்தான்கூட்டியே வந்தாரேகானகத்தில்
மாயன்பெருமாளு மாய்கையாய்ப்போகலுற்றார்
ஆலமரத்தடியிலிராமர் பள்ளிகொண்டார்
கள்ளக்கொருக்கையிட்டுக் கரியமால்தூங்குகிறார்
ஆயனருகாலே அர்ச்சுனனார்வந்துநின்றார்
பாரளந்தார்பாதத்தைப் பார்த்திபன்பிடிக்கலுற்றான்
அலண்டுபுரண்டதுபோ லிராமர்கண்விழித்தார்
ஆறுலழுகுமன்று அர்ச்சுனரேகேட்டீரோ
காறுதசொற்பனத்தைக் கண்டேன்காணர்ச்சுனரே
என்னைத்தனியேவிட்டு எங்கேயோபோனதுவாய்
கானக்குறத்தி கைபார்த்துச்சொன்னதுவாய்
வண்ணமருக்கொழுந்து மலைக்குறத்திவந்ததுவாய்
நீக்கித்தபூஷணத்தை நேரிழுத்துத்தந்ததுவாய்
அம்மருகனைதான்வாங்கி யல்லிபுரம்போனதுவாய்
வண்ணமருக்கொழுந்துந் தன்னனிநீ இணைத்ததுவாய்
அல்லியிடகாதமா ராயிரம்பேரோடிவந்து
அர்ச்சுனரேயுன்னைப்பிடித்து சிறையிலேபோட்டதுவாய்
கைக்குமரங்களிலே தேர்விசையாய்போடக்கண்டேன்
புக்கிடங்கிலேதான் போட்டடைக்கக்கண்டேனப்பா
ஆமாவொருதெய்வகன்னி யழைத்துவரக்கண்டேனப்பா
என்னருகேவந்திருக்க கண்டேன்கினவாக
எண்ணைக்கன்னைத்துவேதே யிப்படிகினவுகண்டேன்
வாழ்விசையன்கோயாளும் மாதவளுக்கேத்துவரைப்பான்
பித்துபூயர்தந்திறற் போதுகினவுகண்டு

அல்லியர்மேல்லிருந்தபடி ஆசைமறக்கவில்லை
மாலைவிட்டு அல்லியை மருவியணைவதெப்போ
கோபாலனைத்தானே கூட்டிவைப்பதுன்பாரம்
அப்போது தாயவரு மருச்சனன்முகம்பார்த்து
திருமுகம்பார்த்துத் தெய்வப்பெருமாளேதுதிசொல்வார்
பட்டுத்துல்லாகுண்டலமும் பவுத்திரமோதிரமும்
பட்டிகட்டி பொட்டியாணம் பசும்பொன்னூற்சுபதக்கம்
தாமரைப்பூசல்லடமும் சந்திரகாவிகட்டிகளும்
உத்தராசஞ்சீவல்லவாட்டும் உத்தமனேயெங்கேயென்றார்
அந்திப்பயக்கவனு மருச்சுனனுமேதுசொல்வான்
ஆயர்பெருமாளேநீர் அனந்தசித்திரைபோனதிலே
மாநிலை பட்டணத்தை மதுரையைப்பார்ப்போமென்று
மாதுமேல்தன்னிலேவாய் வந்ததுநிசென்றேனையா
வன்னமருந்துதந்து தன்னை நிதானமறையுமென்றாள்
மருந்துணாக்கும்போதவள் மனதுகரையுமென்றாள்
நாலுமலைக்குள்நடுவிலவள் குடிசையென்றாள்
இராமக்காள்பொம்மக்காள் லட்சுமக்காளவள்பேரும்
அந்துவந்துகேட்டாக்கா லாபரனந்தருவேனென்று
மருந்துகொடுத்துவிட்டு வாங்கிப்போனேனுடைமையெல்லாம்
அவள்-கொடுத்தபடியேதான் குணமாச்சோவர்க்கனே
சொன்னபடியாகச் சேர்ந்தாளேயல்லிநல்லாள்
ஒருபாலகன்தனைப்பெண் உமுன்னால்வந்தேனையா
பொம்மக்காபேரைச்சொல்ல இம்மக்காள்கேர்த்தனையா
உடைமைப்பரிகொடுத்து வுமுன்னாலங்கிருந்தேனையா
அவ்வார்த்தைதான்கேட்டு ஸ்ரீராமரேதுசொல்வார்
குறத்திபிருப்பிடத்தைக் கொற்றவனேதேடிப்போய்
உன்னுடைமையுள்ளதெல்லாம் வுத்தமனேவாங்கிவரும்
கடுகவேவாங்கிவரும் சட்டமுகாவென்றுரைத்தார்

அருச்சுனன் குறத்தியிடஞ்சென்று தான்கொடுத்ததைவாங்கினது.

ஆயரதுசொற்கேட்டு அருச்சுனனுந்தானடந்தார்
குறத்தியவளைத்தேடிக் கெம்பனேவருகிறுமே
நாலுமலைநடுவே கல்லிகைசயனத்தேதேடிவந்தார்
இராமக்காள்பொம்மக்காள் லட்சுமக்காவென்றழைத்தார்
மாயன்பெருமான் மலைக்குறத்திபோலேவந்தார்
ஆடாதம்பியபோ யழைத்தகருமமென்ன
அப்போதருச்சுனனும் பானமுகமேதுசொல்வார்
கொடுத்தமருந்ததனிற் குணமில்லைபாக்கியமே
கொடுத்தமருந்ததனிற் சற்றும்பலனில்லையடி
பொம்மக்காள்பேரைச்சொல்ல இம்மக்காளேர்த்தம்மா
உன்பேச்சைக்கேட்டுநானுங்கடப்பட்டுவிட்டேனடி.

தான்கொடுத்தவுடைமையெல்லாம் கொப்பெனவேதாவென்றான்
என்வார்த்தைதனைக்கேளீர் இயலான தம்பியரே
கட்டழகாவுன்னுடைமை கடையிலேவிற்கப்போனேன்
காசுக்கடையிலே கண்டதலையாரிசேனை
கன்னமிட்டுவந்தேனென்று கட்டியடித்தார்கள்
அடியும்பட்டேனுதையும்பட்டே னலைச்சல்களும்பட்டுவந்தேன்
உடைமையரிகொடுத்து வுடுத்தினதுணியிழந்தேன்
எங்கிருந்துநான்கொடுப்பே னினியவுடைமையது
அவ்வார்த்தைதான்கேட் டருச்சுனனுமேதுசொல்வான்
உடமைகொடுக்காம லுன்னைவிடேன்கட்டிவச்சி
மடியைப்பிடித்திழுத்தான் மாதுகுறத்தியன்று
குய்யோமுறையோவென்று கூவினாள்குறத்தியரும்
புற்றீசல்போலவேதான் புறப்பட்டார்குறவர்
செல்லுபோலென்றுசொல்லிச் சிறுவராய்க்கூடினார்கள்
ஆளுக்கொருகுத்துவைத்து அடித்தாரேயர்சுனனை
அர்ச்சுனர்தரித்திருந்த ஆபரமுள்ளதெல்லாம்
கொண்டுவந்துதந்தாளே கொம்பனையாள்குறத்தியரும்
அல்லியினால்பட்டகலை யர்ச்சுனர்க்குப்போதுமையா
பெண்ணாலேபட்டகலை போதுமென்றாரருச்சுனரும
அர்ச்சுனமகாராசா னையரிடம்வந்துவிட்டான்
வாங்கிவந்தேனுடைமையென்று வணங்கியேதெண்டனிட்டார்
அப்போதுமாயவனு மருச்சுனர்க்கேதுசெல்வார்
மாளிகைக்குப்போகமனமுண்டே அர்ச்சுனரே
தருமர்தவிப்பாரே தம்பிமார்புலம்புவாரே
காணுதிபென்னுச்சி கலங்கித்தவிப்பாளே
வந்துநெடுநாளாச்சே வாழ்விசையா அர்ச்சுனரே
பெண்ணாசைகொண்டுநீ புலம்பித்தவிக்கிறாயே
மாதர்மேலாசைகொண்டு மயங்குகிறாயர்ச்சுனரே
ஆணழகுமன்ன னர்ச்சுனனுமேதுசொல்வான்
எந்தவிதமானாலு மிளங்கொடியாளல்லியரே
தாலிகட்டிவையுமையா சுவாமிபெருமாளே
மாலையிட்டுவையுமையா மாயன்பெருமாளே
...துபணிந்தானே இயலானவாள்விசையன்
...ன்பெருமாளு மிராமனேதுசொல்வார்
ஆணழகுமன்ன வர்ச்சுனனேநீர்கேளும்
ஆண்டிவடிவாக அல்லியின்தன்வாசலிலே
மடஆர்ந்துவந்தையாகில் மாலையிட்டுவைப்பேனடா
அப்படியேபோய்வருவே னையாசெலவருளும்

அர்ச்சுனன் ஆண்டிவேடங்கொண்டு மடலூர்ந்தது.

நாயனைப்பெருமாளு மரிமாமரப்பொழுது.
ஆண்டியைப்போலாக அர்ச்சுனருக்குச்சொல்லவந்தார்
ஆறைலழகுமன்னன் அர்ச்சுனனுமேதுசொல்வான்
தொண்ணூறாறும்பத்துஞ்சென்ற துவண்டகிழவனைப்போல்
பண்ணைப்பூபோலே பழுத்தகிழவனைப்போல்
நாணற்பூபோலே நரைத்தகிழவனைப்போல்
தோலுநரம்புகளும் தொங்கிற்றுகிழவனுக்கு
பழுத்தபழம்போலே பார்த்திபன்வடிவெடுத்தார்
காவிகாஷாயமுடன் கைதனிலேமாத்திரையும்
திருநீறுந்தாமணிந்து திரிகண்டமாலைசுற்றி
உருத்திராட்சத்தாவடமும் ருத்திராட்சமாலைகளும்
அன்றுரித்தமான்றோலும் அழகானபுலித்தோலும்
தொட்டமிதியடியும் தோளில்வைத்தகின்னரியும்
மாத்திரைக்கோற்பிரம்புகளும் மயிர்க்குச்சுங்கமண்டலமும்
வேலாயுதஞ்சூலாயுதம் விருதுகண்டகோடாலி
கௌரிகல்பாத்திரமும் கேகாரக்கங்கணமும்
திருவோடுபாத்திரமும் திருநீறுங்கோபிகளும்
சங்குஞ்செயகண்டிகையுந் தரித்தாரேபூஷணங்கள்
சடைமுடையுமாகத் தம்பிரானைப்போலானார்
ஆதிசிவன்போலாக அருச்சுனனார்வேடங்கொண்டு
கைலாசநாதரைப்போல் காண்டீபர்வடிவெடுத்தார்
வேடங்கள்பூண்டாலை வீராதிவீரருந்தான்
ஆயர்பெருமாளு மங்கணமேயேதுசெய்தார்
அல்லியளைப்போலாக அழகுபடவெழுதி
பாங்கியிலும்நல்ல பவளச்சேனைநாயகியை
கூடவெழுதினாங் கோவிந்தரெம்பெருமாள்
படத்தையடித்தவரும் பார்த்திபன்கைகொடுத்தார்
அல்லியுதவாசலிலே பங்கேபடம்விரித்து
அவள்-உடுத்தியபாவாடையில் ஒருமுழம்பிச்சைவாங்கி
வந்தேயாயாமாகில் மாலையிட்டுவைப்பேனடா
போய்வாருமென்றுசொல்லிப் பெருமாளனுப்பிவைத்தார்
கண்ணப்படமெடுத்து வாழ்விசையன்வழிநடந்தான்
தள்ளாடித்தள்ளாடித் தளர்ந்துமெல்லவழிநடந்தான்
தெத்துத்தெருகடந்து தேரோடும்வீதிவிட்டு
அல்லியரண்மனையா மாசாரவாசல்சென்றான்
ஆரடிதாதியரே அரண்மனைக்குப்போகவேணும்
காசியிலிருந்தல்லோ யிராமேசுரப்போகவேணும்
பிச்சைகேட்கவந்தேனம்மா போகவழிவிடுங்கள்
பொற்கொடியாள்வாசலிலே போய்வருவேணுச்சியமே

ஞானபெரியவரே யறிவுபடைத்தவரே
நீர்படித்தவரே தெள்ளறிந்தசங்கமரே
ஆண்காற்றடியாது அல்லியதுகோட்டையிலே
போனாற்பழுதவரும் போகாதேசாமியென்றாள்
ஆண்டிபரதேசி யையமென் றவந்தவனை
வழியுமறிப்பார்கள் வையகத்திலாருமில்லை
கொண்ணூறுஞ்சென்றதப்பா தவண்டகிழவனடி
தோலுநரம்புகளும் தொங்குதேயந்தனுக்கு
என்னை-பார்த்தவர்களெல்லாரும் பணிந்திடுவார்தப்பாது
போகச்செலவுகொடும் போயவருவேனுச்சியென்றார்
வாசற்றடைக்காரர் வழிவிட்டார்சங்கமற்கு
அவ்வாசல்வாசலது அர்ச்சுனனுந்தாண்டிவந்தான்
முத்துசெம்பொற்படிவாசல் மூன்றுகட்டுந்தாண்டிவந்தான்
ஐந்தாம்படிதலத்தில் அர்ச்சுனனார்வந்துவிட்டார்
புலியாசனம்போட்டு பொற்படைக்கதயின்மேனைவைத்தான்
ஆசனத்தின்மேலிருந்து அல்லிபடந்தான்விரித்து
மான்செவியுங்கண்ணிணையு மறைத்தாரேமாயவரும்
கண்ணிரண்டுந்தெரியாமற் காதிரண்டுங்கேளாமல்
அல்லிமேற்சிந்தையாக அருச்சுனன்புலம்பலுற்றான்
அல்லியென்பான் மெல்லியென்பான் யனந்தவரிமேலைபெண்ணேனென்பா
வருவாளோ அல்லியென்பான்வாய்திறந்துபெண்ணேயென்பான [ன
உன்றனைக்கொண்டேனடி யூராசைபேர்மறந்தேன்
தாயாரையான்மறந்தேன் தமயனையான்மறந்தேன்
தம்பிதமயனைச் சகலனையும்யான்மறந்தேன்
உன்னைகொண்டுநான் உழன்றுதிரிகிறேனடி
மன்மதபாணமது மார்பைபிளக்குதடி
சித்தசன்விட்டகணை சிறுமார்புருகுதடி
காமக்கணையாலே கணைதாங்கிபோறேனடி
அஞ்சுருகுபாணமது நெஞ்சருகிப்போகுதடி
ஆருருகுபாணமடி மார்புருகிப்போகுதடி
மாரோடேமார்பணைத்தாள் மனாவிடாய்தீருமடி
என்றுதெளியுமோ எக்காலஞ்செல்லுமடி
அல்லிமேற்சிந்தை யருச்சுனன்புலம்பலுற்றான்
அவ்வாசல்காக்கின்ற ஆபிரந்தோழியர்கள்
அவ்வார்த்தைதான்கேட்டு திகைசரங்கொண்டாள்
இதுவென்னகாலக்கேடா எதுமேயாந்தோழியரே
பாக்கியிலும்நல்லதொரு பவளசேனைத்தன்னருகில்
ஓட்டநடையுமாக ஓடிவந்தார்தாதியர்கள்
பவளசேனைபக்கத்திலே பணிந்தவர்களேதுசொல்வார்
ஆரோ ஒருகிழவன் ஆண்டிபரதேசியவன்

பிச்சையென் றுவந்தேன்காண் போகவழி தான்விட்டோம்
அஞ்சாங்கட்டுவாசலது அரண்மனையில் தான்வந்தான்
